6662

6662

பேராசிரியர் சரவண ஆறுமுகமுதலியார் M.A. B.T, M.O.L
அன்பளிப்பு
சென்னை 20.

# தமிழ்க் கட்டுரைகள்

SMU

பதிப்பாளர்:

**எஸ். எம். ஜெகநாதம்,**

நாகர்கோவில்.

1939

பதிப்புரிமை] [ஒரு ரூபாய்

* THE MADURA TAMIL

# பொருளடக்கம்


பக்கம்

I இறையனார் அகப்பொருள்.

முதல் சூத்திர உரை 1

II திராவிடப் பிரகாசிகை: ஒழிபியல்.

சபாபதி நாவலர் 31

III பஞ்சதந்திரம்: அசம்பிரேக்ஷிய காரித்துவம்.

வித்வான் தாண்டவராய முதலியார் 56

IV வீரசோழியப் பதிப்புரை.

சி. வை. தாமோதரம்பிள்ளை B.A., B.L. 76

V (a) பெரியபுராணம்: திருவாரூர்ச்சிறப்பு. 103

(b) திருவிளையாடல் புராணம். இந்திரன் பழி தீர்த்த படலம்.

ஆறுமுக நாவலர் 109

# இறையனார் அகப்பொருள்.

## களவு.

**அன்பி னைந்திணைக் களவெனப் படுவ**
**தந்தண ரருமறை மன்ற லெட்டனுட்**
**கந்தருவ வழக்க மென்மனார் புலவர்**

என்பது சூத்திரம். எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்துரைக்க வென்பது மரபு; என்னை?

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே"

என்றாராகலானும், பருப் பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிதுவிளங்கும் என்பதாகலானும் பாயிரம் உரைத்துரைக்கவேண்டும் என்பது மரபு. என்போல வெனின் கொழுச்சென்றவழித் துன்னூசி இனிதுசெல்லும்; அதுபோல வென்பது.

அப்பாயிரம் இருவகைப்படும், பொதுவுஞ்சிறப்புமென. அவற்றுட் பொதுப்பாயிரம் என்பது எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படுவது; சிறப்புப்பாயிரம் என்பது தன்னால் உரைக்கப்படு நூற்கு இன்றியமையாதது.

பாயிரம் என்ற சொற்குப் பொருள் யாதோவெனின், புறவுரை என்றவாறு. ஆயின், நூல் கேட்பான் புகுந்தோன்

நூல் கேளாதே புறவுரை கேட்டேனேயெனின், நூற்குப் புறனுகவைத்தும் நூற்கு இன்றியமையாததாதலினென்க. என்போலவெனின், கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயின்மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்க மாகிய திங்களும் ஞாயிறும் போலவுந், தகைமாண்ட நெடுஞ் சுவர்க்கு வகைமாண்ட ஓவியம்போலவும் என்பது. ஆக லிற் பாயிரங் கேட்டே நூல் கேட்கப்படும்.

அவற்றுள் அப் பொதுப்பாயிரந்தான் நான்குவகைப் படும், ஈவோன்றன்மையும், ஈதலியற்கையுங், கொள்வோன் றன்மையுங், கோடன்மரபுமென; என்னை?

"ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
வீரிரண் டென்ப பொதுவி னியற்கை"

என்பவாகலின்.

ஈவோன்றன்மை என்பது ஆசிரியனது தன்மை என்ற வாறு; ஈதலியற்கை என்பது அவன் உரைக்கும் முறைமை என்றவாறு; கொள்வோன்றன்மை என்பது மாணுக்கனது தன்மை என்றவாறு; கோடன்மரபு என்பது அவன் கேட்கும் முறைமை என்றவாறு. அவையெல்லாம் விரித்துரைப்பிற் பெருகும்; முடிந்த நூலிற் கண்டுகொள்க.

இனிச் சிறப்புப்பாயிரம் எட்டுவகைப்படும். அவை யாவையோவெனின், ஆக்கியோன் பெயரும் வழியும் எல்லை யும் நூற்பெயரும் யாப்பும் நுதலியபொருளுங் கேட்போரும் பயனுமென இவை. என்னை?

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே

கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.''

என்றாராகலின்.

காலமும் களமும் காரணமும் கூட்டிப் பதினொன்றென்பாரும் உளர். என்னை?

''காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.''

என்பவாகலின்.

இனி, ஆக்கியோன் பெயரென்பது நூல்செய்த ஆசிரியன் பெயர் என்றவாறு. இந்நூல் செய்தார் யாரோவெனின், மால்வரைபுரையு மாடக்கூட லாலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணியாக உடைய அழலவிர்சோதி அருமறைக் கடவுளென்பது.

வழியென்பது இந்நூல் இன்னதன்வழித்து என்பது. இது 'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவ'னாற் செய்யப்பட்டமையால் வழிநூலென்று சொல்லப்படாது முதனூலெனப்படுமென்பது.

எல்லையென்பது இந்நூல் இன்ன எல்லையுள் நடக்குமென்பது. இந்நூல் எவ்வெல்லையுள் நடக்குமோவெனின், வடக்கு வேங்கடந், தெற்குக் குமரி, கிழக்குமேற்குங் கடல் எல்லையாக நடக்கு மென்பது. என்னை?

''வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பெளவமென்
றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்''

எனவும்.

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து"

எனவுங் காக்கைபாடினியாருந் தொல்காப்பியனாருஞ்சொன்னாராகலின் என்பது.

நூற்பெயரென்பது நூலதுபெயர் என்றவாறு. நூல் பெயர் பெறுமிடத்துப் பல்விகற்பத்தாற் பெயர் பெறும்; என்னை? செய்தானாற் பெயர்பெறுதலுஞ், செய்வித்தானாற் பெயர்பெறுதலும், இடுகுறியாற் பெயர்பெறுதலும், அளவினாற் பெயர்பெறுதலுஞ், சிறப்பினாற் பெயர்பெறுதலுமென. செய்தானாற் பெயர்பெற்றன, அகத்தியம், தொல்காப்பியமென இவை; செய்வித்தானாற் பெயர் பெற்றன, சாதவாகனம், இளந்திரையமென இவை; இடுகுறியாற் பெயர்பெற்றன, நிகண்டு, நூல், கலைக்கோட்டுத்தண்டென இவை; அளவினாற் பெயர்பெற்றது பன்னிருபடலமென்பது, சிறப்பினாற் பெயர்பெற்றது களவியலென்பது; என்னை? களவு கற்பு என்னுங் கைகோளிரண்டனுட் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன். என்னை?

"முற்படப் புணராத சொல்லின் மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே." (இறை-கரு)

என்று வேண்டுதலின். கற்புக் களவுபோல ஒருதலையான அன்பிற்றன்று.

இனி யாப்பென்பது நூல்யாப்பு. நூல் யாக்குமிடத்து நான்கு வகையால் யாக்கப்படும்; தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவும் மொழிபெயர்த்துமென. என்னை?

"தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே"
(தொல்-பொ-மர-கஎ.)

என்றாராகலின்.

அவற்றுள் இது தொகுத்தியாக்கப்பட்டது; என்னை? உலகத்து நடக்கும் அகப்பொருட் செய்யுளிலக்கணமெல் லாம் இவ்வறுபது சூத்திரத்துள்ளே தொகுத்தானாதலின் என்பது.

இனி நுதலியபொருளென்பது நூற் பொருளைச் சொல்லுதலென்பது. இந்நூல் என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலியதென்பது.

கேட்போர் என்பது இன்னார் கேட்டார் என்பது. இந்நூல் கேட்டார் யாரோவெனின், குற்றமுடைய நூலா யினன்றோ குற்றமின்மை ஆராயவேண்டுவது? இது முனை வனாற் செய்யப்பட்ட நூலாகலாற் குற்றமின்றாயினமை யிற் கேட்டாரையின்றென்பது இன்றெனினும், உரை நடந்துவாரா நின்றமை நோக்கக் கேட்டாரையுமுடைத் தென்பது. கேட்டார் யாரோவெனின், மதுரை உப்பூரிகுடி கிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பது. அவன் கேட்டற்குக் காரணஞ் சொல்லுதும்.

தலைச்சங்கம் இடைச்சங்கங் கடைச்சங்கமென மூவ கைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரி சடைக்கடவுளுங், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின்கிழவனு மென இத்தொடக்கத் தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதிமர் என்ப. அவ ருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையு மென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவர்களைச் சங்க மிரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப. அவருட்கவியரங்கேறினார்

எழுவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந் தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோனும், கீரந்தையுமென இத்தொடக் கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவா யிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப் பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை யகவலுமென இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமுமென இவை யென்ப. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவ ரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியரென்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத் துப்போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமே தாவியரும், சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங் குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல் லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார்மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின் மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்ப தின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந் தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரி

யும், சிற்றிசையும், பேரிசையுமென்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம் பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முத லாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங் கேறினார் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப.

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப், பசிகடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங்கூவி "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர்போய் நுமக் கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழைபெய்தது. பெய்தபின்றை அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத் ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப் பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" எனச்சொல் லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக்கடவுள் சிந்திப் பான்: "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க் கற்பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ்போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பார்ப்பான் சிந்திப்பான்: “அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது பட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச் செய்தானாகும்” என்று, தன் அகம்புகாதே கோயிற் றலைக்கடைச் சென்று நின்று கடைக்காப்பார்க்குணர்த்தச் சடைக்காப்பார் அரசர்க்குணர்த்த, அரசன் புகுதருகவென்று பார்ப்பானைக் கூவச் சென்றுபுக்குக் காட்டக் கொண்டு நோக்கி, “இது பொருளதிகாரம்! நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்தானாகற்பாலது” என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, “நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள்காண்மின்” என அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கன்மாப் பலகை ஏறியிருந்தாராய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாஞ்சென்றன. செல்ல நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்என்று கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப் பட்டது பொருளாய் அன்றெனப்பட்டது அன்றாயொழியக் காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச்சென்றார். செல்ல அரசனும் எதிர் எழுந்து சென்று, “என்னை? நாற்குப் பொருள் கண்டீரோ?” என, “அது காணுமாறு எமக்

சோர் காரணிகனைத் தரல்வேண்டும்" எனப், "போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று, நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே" என்று அரசன் சொல்லப் போந்து பின்னையும் கன்மாப்பலகை ஏறியிருந்து "அரசனும் இது சொல்லினான், யாங் காரணிகனைப் பெறுமாறு என்னை கொலென்று சிந்தித்திருப்புழிச், சூத்திரஞ்செய்தான் ஆலவாயி லவிர்சடைக்கடவுளன்றே! அவனையே காரணிகனையுந் தரல்வேண்டு மென்று சென்று வரங்கிடத்தும்" என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து, "இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன் புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னனென் றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரைகேட்டவிடத்து; மெய்யல்லா உரைகேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்" என முக்காலிசைத்தகுரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டுபோந்து, உப்பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ் வார்த்தையெல்லாஞ் சொல்லி ஐயனாவான் உருத்திரசன் மனைத் தரல்வேண்டுமென்று வேண்டிக் கொடுபோந்து, வெளியதுடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந் தணிந்து, கன்மாப்பலகையேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப்பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக்கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்த விடத்து ஒரோவழிக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்திப், பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த விடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர்

சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற்கென்றார்,

அதனால், உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திரசன்மனுவான் செய்தது இந்நூற்குரையென்பாருமுளர்; அவர் செய்திலர், மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்டநூற்கு நக்கீரனுரால் உரை கண்டு, குமாரசுவாமியாற் கேட்கப் பட்டதென்க. இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்.

மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் தம்மகனுர் கீரங்கொற்றனுர்க் குரைத்தார்; அவர் தேனூர்கிழார்க்குரைத்தார்; அவர் படியங்கொற்றனுர்க்குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனுர்க்குரைத்தார்; அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனுர்க் குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப்பெருங் குமாரனுர்க் குரைத்தார்; அவர் திருக்குன்றத்தாசிரியர்க் குரைத்தார்; அவர் மாதவளனுர்* இளநாகனுர்க்குரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனுர்க் குரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை.

இனிப் பயனென்பது இதுகற்க இன்னது பயக்கும் என்பது. இதுகற்க இன்னது பயக்குமென்பதறியேன், யான் நூற்பொருள் அறிவலென்னுமே யெனிற், சில்லெழுத்தினுன் இயன்ற பயனறியாதாய், பல்லெழுத்தினுன் இயன்ற நூற்பொருள் எங்ஙனம் அறிதியோ பேதாய் எனப்படுமாகலின், இன்னது பயக்குமென்பது அறியல் வேண்டும். என் பயக்குமோ இதுகற்கவெனின், வீடுபேறு பயக்குமென்பது. என்னை? இது களவியலன்றே? இதுகற்க வீடுபேறு பயக்குமாறென்னை? களவு கொலை காமம் இணைவிழைச்சு என்பன வன்றே சமயத்தாரானும் உலகத்தாரானுங் கடியப்பட்டன?

அவற்றுள் ஒன்றன்றுமேலோ இது? எனின்; அற்றன்று, களவெனுஞ் சொற்கேட்டுக் களவுதீதென்பதூஉங் காமமெ'னுஞ் சொற்கேட்டுக் காமந்தீதென்பதூஉமன்று; மற்றவை நல்லவாமாறு முண்டு: என்னை? ஒருபெண்டாட்டி தமரொடுகலாய்த்து நஞ்சுண்டுசாவலென்னும் உள்ளத்தளாய் நஞ்சுகூட்டி வைத்து, விலக்குவாரில்லாதபோழ் துண்பலென்று நின்றவிடத்து, அருளுடையானொருவன் அதனைக் கண்டு இவளிதனையுண்டு சாவாமற் கொண்டுபோ யுகுப்பலென்று அவளைக்காணுமே கொண்டுபோ யுகுத்திட்டான்; அவளுஞ் சனநீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான்சென்றுள் அதுகாணாளாய்ச் சாக்காடுநீங்கினாள். அவன் அக்களவினான் அவளை உய்யக்கொண்டமையான் நல்லுழிச் செல்லுமென்பது. மற்றும் இதுபோல்வன களவாகா, நன்மை பயக்குமென்பது.

இனிக் காமம் நன்றாமாறுண்டு. சுவர்க்கத்தின்கட் சென்று போகந்துய்ப்பலென்றும் உத்தரகுருவின்கட் சென்று போகந்துய்ப்பலென்றும் நன்ஞானங்கற்று வீடு பெறுவலென்றுந் தெய்வத்தை வழிபடுவலென்றும் எழுந்த காமங் கண்டாயன்றே? மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்குமாதலின் இக்காமம் பெரிதும் உறுதி யுடைத்தென்பது. உறுதி உடைத்தாமாறு: அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சு தீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத்தொடர்ச்சி உண்டாம்; உண்டாகவே, கொலையே களவே வெகுளியே செருக்கே மானமே என்றித்தொடக்கத்துக் குற்றம்நிகழுமென்பது. அது கேட்கவே, தலையாயினார் அதன்கணின்று நீங்குவர். இனி இடையாயினார் பெண் என்பது எற்புச்சட்டகம், முடைக்குரம்பை, புழுப்பிண்டம், 'பைம்மறியாநோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து; ஐயும் பித்தும் வளியுங்

குடருங் கொழுவும் புரளியும் நரம்பும் மூத்திரபுரீடங்களும் என்று இவற்றதியைபு; பொருளன்று; பொருளாயிற், பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலனே என்றிவற்றாற் புனையவேண்டாவன்றே தான் இயல்பாக நன்றாயின்? என்று, அதன் அசுபத்தன்மை உரைப்பக்கேட்டுநீங்குவர். கடையாயினார் எத்திறத்தானு நீங்கார்; என்னை? பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்து வருகின்றமையின் அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை? பேதையைக் காதல்காட்டிக் கைவிடுக்க என்பதனால் அவன் தாழப்பட்ட இணைவிழைச்சின்னுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்புப் பிணி சாக்காடில்லது நிச்சநிரப்பிடும்பை யில்லது; இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்தசெல்வமும் ஒத்தகல்வியும் உடையாராய்ப் பிறிதொன்றிற் கூனமின்றிப் போகந்துய்ப்பாரென்று காட்டப்பட்டதென்பது என் போலவோ வெனின், கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போலவுங், கலங்கற்சின்னீர் தெருளாமையான் உண்பானை, அறிவுடையா னொருவன் பேய்த் தேரைக் காட்டி, உதுக்காணப் நல்லதொருநீர் தோன்றுவ, அந்நீர் பருகாய், இச்சேற்றுநீர் பருகி என்செய்தி? என்று கொண்டுபோய் நல்லதொருநீர் தலைப்படுவித்து ஊட்டியதுபோலவுந், தான் ஒழுகாநின்றதோர் இணைவிழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங் காட்டினான். காட்ட அதுபெறுமாறு என்னை கொல்லோ எனும்; எனவே மக்கட்பாட்டினானும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று, தவஞ் செய்தார்க்குப் பெறலாம் என்னை?

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்'' (குறள்—தவம்—ரு.)

என்பதாகலான் என்பது. அது கேட்டு, யானுந் தவஞ் செய்து இதனைப் பெறுவனென்று அதன்மாட்டு வேட்கையால்தவஞ்செய்யும்; செய்யாநின்றானைப் பாவீ இதன் பரத்ததோ வீடுபேற்றின்பமென்று வீடுபேற்றின்பத்தை விரித்துரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு அவலக்கவலைக் கையாற்றினீங்கி மணியினது ஒளியும் மலரினது நாற்றமுஞ் சந்தனத்துத் தட்பமும்போல உண்ணின்றெழுதரு மொரு பேரின்ப வெள்ளத்ததென்பது கேட்டு, அதனைவிட்டு வீடுபேற்றின்கண்ணே அவாவினின்று தவமும் ஞானமும் புரிந்து வீடுபெறுவானுமென்பது. அவனை வஞ்சித்துக்கொண்டுசென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையிற் களவியலென்னுங் குறிபெற்றது.

இனிப் புகழ் பொருள் நட்பு அறனென்னும் நான்கினையும் பயக்கும் இது வல்லனுக; என்னை? கற்றுவல்லவன் என்பதனின் மிக்க புகழ் இல்லை, உலகத்தாரானுஞ் சமயத்தாரானும் ஒருங்கு புகழப்படு மாகலான் என்பது. இனிப் பொருளும் பயக்கும்; என்னை? பொருளுடையாரும் பொருள் கொடுத்துக் கற்பவாகலின் என்பது. இனி நட்பும் பயக்கும்; என்னை? கற்றாரைச்சார்ந்து ஒழுகவே நமக்கும் அறிவு பெருகுமென்று பலருஞ் சார்ந்து ஒழுகலின் என்பது. இனி அறனும் பயக்கும்; என்னை? ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது. இது பயன்.

இனிக் காலமென்பது கடைச்சங்கத்தார் காலத்துச் செய்யப்பட்டது. இனிக் களமென்பது உக்கிரப்பெருவழுதியார் அவைக்கள மென்பது. காரணமென்பது அக்காலத்துப் பாண்டியனுருஞ் சங்கத்தாரும் பொருளிலக்கணம்பெறாது இடர்ப்படுவாரைக்கண்டு ஆலவாயிற் பெருமானடிகளால் வெளிப்படுக்கப்பட்டது. பாயிரம் முற்றும்.

இனிப் பாயிரம் உரைத்தபின்றை நூலாமாறும் உரைக்கற்பாலது. அதுதான் நான்குவகையான் உரைக்கப் படும். அவை யாவையோவெனின், நூனுதலியதுரைத்தலும் நூலுள் அதிகாரநுதலிய துரைத்தலும் அதிகாரத்துள் ஒத்து நுதலியதுரைத்தலும் ஒத்தினுட் சூத்திரநுதலிய துரைத்த லுமென இவை. அவற்றுள், நூனுதலிய துரைக்குமிடத்து நூலாமாறும் நூலென்ற சொற்குப் பொருளாமாறும் உரைத் துரைக்கற்பாற்று.

அவற்றுள் நூலாமாறு உரைக்குமிடத்து நூல்தான் மூன்றுவகைப்படும், முதனூலும் வழிநூலுஞ் சார்புநூலு மென; என்னை?

"முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்"

என்றாராகலின். அவற்றுள் முதனூலாவது வரம்பிலறிவன் பயந்ததாகும்; என்னை?

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"
(தொல்-பொ-மர-கூச)

எனவும்,

"முதல்வ னூற்குப் பிறன்கோட் கூறாது

எனவும்,

"தந்திரஞ் சூத்திரம் விருத்தி மூன்றற்கு
முந்துநூ லில்லது முதனூ லாகும்"

எனவுஞ் சொன்னாராகலின். இனி அந்நூலோடு ஒத்த மரபிற்றாய் ஆசிரியமதவிகற்பம்படக் கிளப்பது வழிநூ லெனப்படும்; என்னை?

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழிநூ லாகும்"

என்றாராகலின். இவ்விரு நூலுள்ளும் ஒரு வழிமுடிந்த பொருளை ஒருபகார நோக்கி ஒருகோவைப்பட வைப்பது சார்புநூலாகும்; என்னை?

"இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடை நூலாகும்"

என்றாராகலின்.

எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அது யாதோவெனின், முதனூலின் முடிந்தபொருளை ஒருவன் யாதானும் ஒரு காரணத்தாற் பிறழவைத்தால் அதனைக் கருவியால் திரிவுகாட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒருபுலவனால் உரைக்கப்படுவது; என்னை?

"தன்கோ ணிறீஇப் பிறன்கோண் மறுப்ப
தெதிர்நூ லென்ப ரொருசா ரோரே"

என்றாராகலின்.

அல்லதூஉம்,

"நூலெனப் படுவது நுதலிய பொருளை
யாதிக் கண்ணே யறியச் சுட்டி
யோத்துமுறை நிறுத்துச் சூத்திர நிரைஇ
முதல்வழி சார்பென மூவகை மரபிற்
றொகைவகை விரியின் வகையறத் தெரிந்து
ஞாபகஞ் செம்பொரு ளாயிரு வகையிற்
பாவமைந் தொழுகும் பண்பிற் றாகிப்
புணர்ச்சியி னமைந்து பொருளகத் தடக்கித்
தனக்குவரம் பாகித் தான்முடி வதுவே"

எனவுஞ் சொன்னாராகலின். அன்றியும் நூலெனப்படுவது நுதலிய பொருளை முதலிற்கூறி முதல் நடுஇறுதிமாறுகோள் இன்றித் தொகைவகை விரிபடப் பொருள் வைத்துப் பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம் என்னும் உரையிற் பொருள்விளங்கு நுண்மைக்கு வரம்பாக நோக்குடையது; என்னை?

"நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலிய பொருளை முதலிற் கூறி
முதனடு விறுதி மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றமைந்த வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே"

என்றாராகலின்; இவ்வகை சொல்லப்பட்டது நூலென்ப.

இனி நூலென்ற சொற்கும் பொருளுரைக்கப்படும். நூல்போறலின் நூலென்ப; பாவைபோல்வாளைப் பாவை யென்றாற்போல. நூல்போறலென்பது: நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கைவன்மகடூஉத் தனது செய்கை மாண பிணுல் ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூற்றலென்பது; அவ்வாறே சுரந்து பரந்த சொற்பரவைகளாற் பெரும்புல வன் தனது உணர்வுமாட்சியிற் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரமென்னும் யாப்பு நடைபடக் கோத்தலா முலகத்து நூல்செய்தலாவது; அவ்வகை நூற்கப்படுதலின் நூலெனப் பட்டது. இனி ஒரு சாரார் நூல்போலச் செப்பஞ்செய் தலின் நூலென்ப. இனித் தந்திர மென்னும் வடமொழிப் பொருளை நூலெனவழங்குதல் தமிழ் வழக்கெனக்கொள்க. இது நூலென்ற சொற்குப் பொருள்.

இனி நானுதலியதூஉம் உரைக்கற்பாலது. அது பாயிரத்துள்ளே உரைத்தாம்; தமிழ் நுதலியதென்பது. தமிழ்தான் நான்கு வகைப்படும், எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்புமென.

அவற்றுள் இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக்கொள் ளப்பட்டதோவெனின், பொருளாராய்தலை நுதலி எடுத்துக் கொள்ளப்பட்டது. அதிகாரம் நுதலியதூஉம் அதிகாரத் துப் பெயர் உரைப்பவே விளங்கும். இனி அதிகாரம் நுத

லியதெல்லாம் அதிகாரத்துள் ஓத்து நுதலாவன்றே, பல ஓத்துக்கொண்டது ஓர் அதிகாரமாதலான்; இதனுள் இவ் வோத்து என்னுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோவெனின், ஒத்தினது பன்மையின்மையின் ஓத்தின்றென்பது.

இனிச் சூத்திரம் நுதலியது முரைக்கற்பாலது. சூத்திரம் உரைக்கின் அது நான்கு வகையான் உரைக்கப்படும். அஃதுரைக்குமாறு: கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டி அகலங்கூறலென.

இச்சூத்திரத்தின் கருத்தென்னையோ வெனின், இவ் வதிகாரத்துளுரைக்கின்ற பொருள் இன்ன தென்பதூஉம் இன்னதனோ டொக்கு மென்பதூஉம் உணர்த்துதனுத லிற்று. அன்னதாதல் இச்சூத்திரங் கண்ணழிப்ப விளங்கும். கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல்.

இதன்பொருள்:—அன்பின் ஐந்திணைக் களவு எனப் படுவது—அன்பினுடைய ஐந்திணையுட் களவு எனப்பட்ட ஒழுக்கம்: அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்—அந் தணர் என்பார் பார்ப்பார், அருமறை என்பது வேதம், மன்றல் என்பது மணம், எட்டு என்பது அவற்றது தொகை, கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்—கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் ஒழுக்கினைக் களவென்று சொல் லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

இனிப் பொழிப்புத்திரட்டல் என்பது, அன்பினுடைய ஐந்திணையிற் களவெனப்பட்ட ஒழுக்கம் பார்ப்பார் வேதத் துக்கண் மகட்கோடலாறென்னும் எட்டினுட் கந்தருவர் ஒழுகலாறொப்பது. அதனைக் களவென்று சொல்லுவர் கற்று வல்லோர் என்றவாறு.

இனிச் சூத்திரத்துப் பொருளைத் தூய்மைசெய்தற்குக் கடாவிடை யுள்ளுறுத்து உரைக்கும் உரையெல்லாம் அகலவுரை யெனக்கொள்க. 'அன்பின் ஐந்திணை' என்றவிடத்து அன்பு அறிந்தேனாயினன்றே அன்பினுடைய ஐந்திணையும் அறிவதெனின், அது குடத்துள் விளக்குங் கடற்றுள் வாளும் போல இதுகாண் அன்பென்று தந்து காட்டலாகாது. அன்புடையரான குணங்கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்புண்டென்று அனுமித்துக்கொள்ளற்பாற்று. அன்புடையரான குணம் யாவையோவெனின், சாவிற்சாதல், நோவிற்னோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிதுமொழிதல், புணர்வுநனிவேட்டல், பிரிவுநனியிரங்கல் எனஇவை. என்றார்க்கு, இவை திரிபுடைய: என்னை இவை திரிபுடையவாமாறெனின், சாவிற்சாதல் என்பது அன்பினானே நிகழ்வதன்று, பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்துசெல்வாள் இது தலைக்கீடாகச் சாவலென்று சாவவும் பெறும்; இனிக், கண்டீரன்றே, குடுமிக்கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டானிற் பின்னையுமிருந்து, சோறு தின்று வாழ்கின்றாளோ, ஓ! கொடியளேகாணென்று நித்தல் பழிதூற்றப்பட்டிருந்து, பின்னுமே ஒரு நாட்சாவன், அதனான் இன்றே சாவனெனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் புகழ்வேண்டியும் கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரைகேட்டு அது வேட்கை யானுஞ் சாம்; அப்பரிசன்றி அன்பினானுஞ் சாம்; அஃது ஒருதலையாக நிகழ்வதன்றென்பது. இனி நோவினோதலென்பது மெய்ந்நோ என்றறியலாகாது; அதுவுந் திரிபுடைத்து; அன்புள்வழியும் அன்பில்வழியுந் தோன்றுமென்று மறுக்கப்படும். ஒண்பொருள் கொடுத்தலென்பது கணிகையர் கூட்டம் பொருளானும்; ஆதலின் அதுவும் அன்பன்று. நன்கினிது மொழிதலென்பது, நன்கினிது சொல்லிப் பகைவருந் தங் கருமம் முடிப்பாராதலின் அதுவும் அன்பன்று. புணர்வு

நனிவேட்டலென்பது அச்சங் காரணத்தானும் புணர்வு வேட்டோர்போலப் புணர்வாராதலின் அதுவும் அன்பன்று. பிரிவு நனியிரங்கலென்பது நீரும் ஆடார் பூவுஞ் சூடார் சாந்தும் அணியாராய்ப் பிரிந்திருந்தார் போல் வாடியிருப்பர் அன்பிலாதாருமாகலின், அதுவுந் திரிபுடைத்து. இனித் திரிபின்றி இக்குணங்கள் நிகழ்ந்தவழி அன்புண்டெனக் கொள்க. அஃதெங்ஙனம் நிகழுமோவெனின், அவன் இறந்து பட்டவாறே தானும் இறந்து பட்டவழி அன்பி னானே ஆயிற்றெனக்கொள்க. அல்லனவும் இவ்வகையாற் றிரிபில்லன அன்பினானே ஆயிற்றென் றுணர்ப. அல்ல தூஉம், அன்பெனப்பட்டது தான் வேண்டப்பட்ட பொரு ளின்கண் தோன்றும் உள்ளநிகழ்ச்சி. அதனைக் காட்டிக் காண்க என்னானன்றே! தான் அறிந்தபொருளாகலின்; என்னை? மாணாக்கன் நீர்வேட்ட வேட்கையைக் காட்டுக என்னான், தான் அறிந்தபொருளாகலின்; காட்டுக என்னுமே யெனின், வஞ்சித்தானாம். அவனை ஆசிரியன் அறிவிக்க லுறுமேயெனிற் பேதையாயினானும். அல்லதூஉம், உல கத்துப் பொருள்தான் இரண்டுவகையான் உணர்த்தப்படும், உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படா தனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவுமென. அவற்றுள், உண்மையுணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படா தன காமமும் வெகுளியும் மயக்கமும் இன்பமுந் துன்ப மும் முதலாகவுடையன; என்னை?

> "ஒப்பு முருவும் வெறுப்பு மென்றா
> கற்பு மேரு மெழிலு மென்றா
> சாயலு நாணு மடனு மென்றா
> நோயும் வேட்கையு நுகர்வு மென்றாங்
> காவயின் வரூஉங் கிளவி யெல்லா
> நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது
> காட்ட லாகாப் பொருள வென்ப"

(தொல்—பொ—பொரு—ருஉ.)

என்றாராகலின். இனி உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவன 'மாடக்கூடல்' 'மாநிலத்' தொடக்கத்தன என்று கொள்க. அன்பென்பது உண்மை மாத்திரையல்லது பிழம்பு உணர்த்தப்படா தென்பது; என்றார்க்கு, அன்பென்பது தான்கருதப்பட்ட பொருளின்கண் தோன்றும் வேட்கை யன்றே ஈண்டு நம்மால் அன்பென்று விகற்பிக்கப்படா நின்றது; அஃது யாதோவெனின், நாணுச் சுருங்கப் புணர்வு வேட்கை பெருக ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் அன்பு விசேட இலக்கணமுடைத்தென்று கொள்க.

அஃதேயெனின், அன்பு அறிந்தேன். 'ஐந்திணை'யாவன யாவையோவெனின், குறிஞ்சி நெய்தல் பாலை முல்லை மருதமென இவை. ஆயின், ஐந்திணை என்றதல்லது அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற்றிலரேயெனின், இது சுருக்க நூலாகலிற் சொல்லிற்றிலர்; அவை முடிந்தநூலிற் கொண்டுரைக்கப்படும். உரைக்குமிடத்து முதல் கரு உரிப்பொருளென மூன்றுவகை யான் உரைக்கப்படும்; என்னை?

"முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே."

(தொல்—பொ—அகத்—௩.)

என்றாராகலின்.

அவற்றுள் முதல் இரண்டுவகைப்படும், நிலமும் பொழுதுமென; என்னை?

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே."

(தொல்—பொ—அகத்—௪.)

என்றாராகலின்.

குறிஞ்சிக்கு நிலம் மலையும் மலைசார்ந்த இடமும்; பொழுது கூதிரும் யாமமும் முன்பனியும்; நெய்தற்கு நிலம் கடலுங் கடல்சார்ந்த இடமும்; பொழுது எற்பாடு; பாலைக்கு நிலமில்லை; என்னை?

"நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே."
(தொல்—பொ—அகத்—உ.)

என்றார் தொல்காப்பியனாராகலின். பொழுது நண்பகலும் வேனிலும், பின்பனியும் உரித்து. நிலமின்றிப் பொழுதினை னேயுந் திணையாமோவெனின், குறிஞ்சியும் முல்லையும் அடுத்த நிலமே காலம்பற்றிப்பாலையாமென்பது. முல்லைக்கு நிலம் காடுங் காடுசார்ந்த இடமும்; பொழுது காரும் மாலையும். மருதத்திற்கு நிலம் பழனமும் பழனஞ் சார்ந்த இடமும்; பொழுது வைகறையாமம். அஃதென்னை பெறுமாறெனின்,

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமு
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."
(தொல்—பொ—அகத்—ரு.)

"காரு மாலையு முல்லை குறிஞ்சி
கூதிர் யாம மென்மனார் புலவர்."
(தொல்—பொ—அகத்—சு.)

"பனியெதிர் பருவமு முரித்தென மொழிப."
(தொல்—பொ—அகத்—எ.)

"வைகுறு விடியன் மருத மெற்பாடு
நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்."
(தொல்—பொ—அகத்—அ.)

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே."
(தொல்–பொ–அகத்–௯.)

"பின்பனி தானு முரித்தென மொழிப."
(தொல்–பொ–அகத்–௧௦.)

மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது சொல்லிற்றின்மையின் அறுவகை யிருதுவும் உரியவெனக்கொள்க. இவை முதல்.

இனிக் கரு என்பன தெய்வமும் உணாவும் மாவும் மரமும் புள்ளும் பறையுஞ் செய்தியும் யாழின்பகுதி முதலாகவுடையன; என்னை?

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
யவ்வகை பிறவுங் கருவென மொழிப."
(தொல்–பொ–அகத்–௧௮).

என்றாராகலின். அம்முறையானே சொல்லுதும்.

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள்; உணா ஐவன நெல்லுந் தினையும்; மா புலியும் பன்றியும் யானையும்; மரம் அகிலும் ஆரமுந் திமிசுந் தேக்கும் வேங்கையும்; புள் கிளியும் மயிலும்; பறை வெறியாட்டுப்பறையுந் தொண்டகப்பறையுங் குரவைப்பறையும்; செய்தி தேனழித்தலுங் கிழங்ககழ்தலுங் குன்றமாடுதலுந் தினைக்கிளி கடிதலும்; யாழ் குறிஞ்சியாழ். பிறவுமென்றதனால் தலைமகன்பெயர் சிலம்பன் வெற்பன் பொருப்பன்; தலைமகள்பெயர் கொடிச்சி குறத்தி; நீர் அருவிநீருஞ் சுனைநீரும்; ஊர் சிறுகுடியுங் குறிச்சியும்; பூ குறிஞ்சியுங் காந்தளும் வேங்கையுஞ் சுனைக் குவளையும்; மக்கள்பெயர் குறவர் இறவுளர் குன்றவர்.

நெய்தற்குத் தெய்வம் வருணன்; உணா மீன்விலையும் உப்புவிலையும்; மா சுறவும் முதலையும்; மரம் புன்னையும் ஞாழலுங் கண்டலும்; புள் அன்னமும் அன்றிலு மகன்றிலும்; பறை மீன்கோட்பறையும் நாவாய்ப்பறையும்; செய்தி மீன்விற்றலும் உப்புவிற்றலும் அலைபடுத்தலும்; யாழ் விளரியாழ். இனிப் பிறவுமென்றதனால் தலைமகன்பெயர் துறைவன் கொண்கன் சேர்ப்பன்; தலைமகள்பெயர் நுளைச்சி பரத்தி; நீர் மணற்கிணறும் உவர்க்கழியும்; பூ வெள்ளிதழ்க் கைதையும் நெய்தலும்; ஊர் கலமேறுபட்டினமுஞ் சிறுகுடியும் பாக்கமும்; மக்கள்பெயர் பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர்.

தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர், வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும் ஆதித்தனையுந் தெய்வம் என்று வேண்டுவர்; உணா ஆறலைத்தனவும் ஊரெறிந்தனவும்; மா வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும்; மரம் இருப்பையும் ஓமையும்; புள் கழுகும் பருந்தும் புறவும்; பறை பூசற்பறையும் ஊரெறிபறையும் நிரைகோட்பறையும்; செய்தி நிரைகோடலுஞ் சாத்தெறிதலுஞ் சூறையாடலும்; பண் பஞ்சுரம். பிறவு மென்றதனால் தலைமகன்பெயர் மீளி விடலை காளை; தலைமகள்பெயர் எயிற்றி பேதை; பூ மராம்பூவுங் குராம்பூவும் பாதிரிப்பூவும்; நீர் வறுநீர்க்கூவலும் அறுநீர்ச்சுனையும்; மக்கள்பெயர் எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர்; ஊர் கொல்குறும்பு.

முல்லைக்குத் தெய்வம் வாசுதேவன்; உணா வரகுஞ் சாமையும்; மா முயலுஞ் சிறுமானும்; மரம் கொன்றையுங் குருந்தும்; புள் கானங்கோழியும் மயிலுஞ் சிவலும்; பறை ஏறுகோட்பறையும் முரசும்; செய்தி வரகுகளை கட்டலும் அவை யறுத்தலுங் கடாவிடுதலும் நிரைமேய்த்தலும் ஏறு

கோடலும்; பண் முல்லை. பிறவுமென்றதனால் தலைமகன் பெயர் குறும்பொறைநாடன்; தலைமகள்பெயர் கிழத்தி மனைவி; இப்பெயர் மருதநிலத்துத் தலைமகட்கும் உரிய; பூ முல்லையுந்தோன்றியும்; நீர் கான்யாறு; ஊர் பாடியுஞ் சேரியும்; மக்கள்பெயர் இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்.

மருதத்துக்குத் தெய்வம் இந்திரன்; உணா செந்நெல் லும் வெண்ணெல்லும்; மா எருமையும் நீர்நாயும்; மரம் வஞ்சியுங் காஞ்சியும் மருதும்; புள் நீர்க்கோழியுந் தாரா வும்; பறை மணமுழவும் நெல்லரிகிணையும்; செய்தி நெல் லரிதலும் அவை கடாவிடுதலும் பயிர்க்குக் களைகட்டலும்; யாழ் மருதயாழ். பிறவுமென்றதனால் தலைமகன்பெயர் ஊரன் மகிணன்; தலைமகள்பெயர் கிழத்தி மனைவி; பூ தாமரைப் பூவுஞ் செங்கழுநீர்ப்பூவும்; நீர் மனைக்கிணறும் பொய்கையும் யாறும்; ஊர் பேரூர் எனப்படும்; மக்கள்பெயர் கடையர் கடைச்சியர் உழவர் உழத்தியர்.

இக்கூறப்பட்ட கரு மயங்கியும் வரப்பெறும்; என்னை?

"உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே"
(தொல்–பொ–அகத்–கரு.)

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்."
(தொல்–பொ–அகத்–கக.)

என்றாராகலின்.

இனி உரிப்பொருளாவது திணைக்கு உரியபொருள் என்றவாறு. அவை யாவையோவெனின், புணர்தல், பிரி தல், இருத்தல், இரங்கல், ஊடல், அவற்றினிமித்தம் என இவை; என்னை?

"புணர்தல் பிரித லிருத்த லிரங்க
லூட லிவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே."
(தொல்-பொ-அகத்-கசு.)

என்றாராகலின்.

அவற்றுட் புணர்தலும் புணர்தனிமித்தமுங் குறிஞ்சி; பிரிதலும் பிரிதனிமித்தமும் பாலை; இருத்தலும் இருத்தனிமித்தமும் முல்லை; இரங்கலும் இரங்கனிமித்தமும் நெய்தல்; ஊடலும் ஊடனிமித்தமும் மருதம். புணர்தலை சொல்லோ குறிஞ்சியெனிற் புணர்தலேயன்று; பிரிவச்சமும், வன்புறையுங், தலைமகனீங்கினவும், பாங்கற்குரைத்தனவும், பாங்கன் கழறினவுங், தலைமகன் எதிர்மறுத்தனவும், பாங்கன் எதிர்ந்தனவும், நீங்கினவும், தலைமகளைக் கண்டனவும், ஆற்றுவியினவும், தலைமகற்கு வந்துரைத்தனவும், தலைமகன் சென்றனவும், தலைமகன் தலைப்பெய்தனவும் இத்தொடக்கத் தனவெல்லாந் தலைமகட்குந் தோழிக்கும் இவ்வகையானே நோக்கி விகற்பிக்க இறப்பவும் பலவாம். அவையெல்லாம் புணர்தலும் புணர்தனிமித்தமுமாய் அடங்கும். ஏனையவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

இனி ஒழுக்கத்தினைத் திணையென்பாரும் நிலத்தினைத் திணையென்பாருமென இருபகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது; ஒழுக்கமேதிணையெனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமுங் குறிஞ்சியெனப்பட்டது; என்னை? விளக்காகியசுடர் இருந்த விடனும் விளக்கெனப்பட்டதுபோல என்பது. இனி ஒருசாரார் ஒழுக்கத்தினையுந் திணையென்ப, நிலத்தினையுந் திணையென்ப, ஆகலானன்றே 'அன்பினைந் திணை'யென்றது, ஐந்திணையாடை ஐந்திணைமஞ்சிகை என்றதுபோல என்ப; அது பொருந்தாது. அஃதே கருதிய

தெனின், முன்னர்த் 'திணையே கைகோள்' (இறையனார்-ருசு) என்னுனன்றே, 'இணையே கைகோள்' என்னுமன்றே, இணையென்று கருதினுைபினெனப்பது. அஃதேயெனின், 'ஐந்துதிணை'யென்னும், ஐந்துசாண் ஐந்துகணம் என்றது போலவெனின், அறியாது கடாவினுப்; ஐந்துதலையுடைய நாகத்தை ஐந்தலைநாகமுமென்ப ஐந்துதலைநாகமுமென்ப; இருமுடிபுமுடைத்து; என்னை? குற்றியலுகரப்புணரியலுள்,

> "முதனிலை யெண்ணின்முன் வல்லெழுத்து வரினு
> ஞநமவத் தோன்றினும் யவவந் தியையினு
> முதனிலை யியற்கை யென்மனார்புலவர்."
> (தொல்–எழுத்–குற்–எஅ.)

என்றூராகலின்.

அஃதேயெனின், அன்பினுைப ஒழுக்கத்தை அன்பின் வேறென்று கொள்வன், தச்சனுைப மாடந் தச்சனின் வேருயதுபோல என்றூர்க்கு, அதுவன்று; பொன்னினுைய குடம் பொன்னின் வேறல்லதுபோலக் கொள்க என்பது. மூன்ரும் வேற்றுமை காரணகாரியத்தை வேறுணரவும் நிற்கும், வேறன்றியுணரவும் நிற்கும்; வேறன்றியுணர நிற்கும் பகுதிகொள்க. அஃதேயெனின் ஐந்திணை யென் பதன் முன்னர்க் 'களவு' என்னுஞ் சொல் எத்திறத்தால் வந்தது? ஒரு சொன்முன் ஒருசொல் வருங்காற் பயனிலை வகையானுந் தொகைநிலை வகையானும் எண்ணுநிலைவகை யானுமென மூன்றனுள் ஒன்று பற்றியன்றே வருவது? அவற்றுள், இஃது எவ்வகையான் வந்ததோவெனின், தொகை நிலைவகையான் வந்ததென்பது. தொகைதாம்பல; அவற்றுள் இஃது எத்தொகையான் வந்ததோவெனின், வேற்றுமைத் தொகையான் வந்ததென்பது. அவ்வேற்று மைத்தொகைதாம் பல; அவற்றுள் இஃது எவ்வேற்றுமைத் தொகையோவெனின், ஏழாம் வேற்றுமைத் தொகையென்

பது. ஏழாம் வேற்றுமையுருபுதாம் பல; அவற்றுள் யாது தொக்கதெனின், உள்ளென்பது தொக்கது. ஐந்திணையுட் களவென்பதாயின், ஐந்திணையுள்ளுங் களவு வேறுகாதோ குடத்துள் விளக்குந் தடற்றுள் வாளும் அவ்விடத்தின் வேறுயதுபோல வெனின், அதுவன்று, ஏழாம்வேற்றுமை இடத்தையும் இடத்து நிகழ்பொருளையும் வேறுணரவும் நிற்கும் வேறன்றியுணரவும் நிற்கும். அவற்றுள், வேறு ணரநின்றவழிக் காட்டிக் கடாவினுப்; வேறன்றியுணர நின்றவழிக் காட்டியக்கால் அதுபோலக்கொள்க. அரங்கி னுள் அகழ்ந்தான், மாடத்தினுள் அகழ்ந்தான் என்றது போல, ஐந்திணையுள்ளுங் களவுவேறன்றென்பது. அஃதே யெனின், 'அன்பினைந்திணைக் கள வந்தண ரருமறை' என அமையாதோ? 'எனப்படுவது' என்றது எற்றிற்கோவெ னின், செய்யுளின் பத்தின்பொருட்டு வந்ததென்னும் ஒரு வன்; அற்றன்று, அதனுன் ஒருபொருளுரைப்பனென்னும் ஒருவன். அதனுன் ஒருபொருளுரைப்பான் பக்கம் வலி யுடைத்து. அஃதியாதோவெனின், களவென்றற்குச் சிறப் புடைத்தென்றவாறு. 'ஊரெனப்படுவதுறையூ'ரென்ற விடத் துப் பிறவும் ஊருண்மைசொல்லி அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப. இங்குப் பிறவுங் களவுண்மை சொல்லி அக்களவுகட்கெல்லாம் இக்களவு சிறப்புடைமை சொல்லும், துறக்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான் எனப் படுவதென்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயி ரத்துள்ளும் உரைத்தாம். மற்று உலகத்துக் களவாயின வெல்லாங் கைகுறைப்பவுங் கண்சூலவுங் கழுவேற்றவும் பட்டுப், பழியும் பாவமுமாக்கி, நரகத்தொடக்கத் தீக்கதி களில் உய்க்கும். இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞான வொழுக்கத்தோடொத்த இயல்பிற்றுகலானும் பழி பாவ மின்மையானும் எனப்படுவதென்று விசேடிக்கப்பட்டது.

இனி 'அந்தணரருமறை மன்ற லெட்டனுள்' என்பது: அந்தணரென்பார் பார்ப்பார்; அருமறையென்பது வேதம்; மன்றலென்பது மணம்; எட்டென்பது அவற்றது தொகை கொடுத்துச் சொன்னவாறு. அவை யாவையோவெனின், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடந், தெய்வங், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் எனவிவை. என்னை?

"அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வம்
யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே
யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டிவை யவற்றுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பிதன்
பொருண்மை யென்மனார் புலமை யோரே."

என்பதன் பொருளென் றுணர்வது. பிரமம் என்பது நாற்பத் தெட்டியாண்டு பிரமசரியங் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகலனணிந்து கொடுப்பது. கொடாவிடின், ஓரிருதுக்காட்சி ஒருவனைச் சாராது கழிந்தவிடத்து ஒரு பார்ப்பனக்கொலையோடு ஒக்கு மென்பது; அதனை அறநிலையென்பது. பிரசாபத்தியம் என்பது மைத்துன கோத்திரத்தான் மகள்வேண்டிச் சென்றால் மறுது கொடுப்பது; அதனை ஒப்பென்பது. ஆரிடம் என்பது ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற்கொடுப்பது; அதனைப் பொருள்கோளென்பது. தெய்வம் என்பது, வேள்வியாசிரியற்கு வேள்வித் தீமுன் வைத்துக் கொடுப்பது; அதனைத் தெய்வமென்று வழிபடப்பட்டது. காந்தர்வம் என்பது இருவர் ஒத்தார் தாமே கூடுங்கூட்டம்; அதனை யாழோர் கூட்டமென்ப. அசுரம் என்பது, கொல்லேறு கொண்டான் இவளையெய்தும், வில்லேற்றினன் இவளையெய்தும், திரிபின்றி எய்தான் இவளையெய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை

யெய்தும் இன்னதொருபொருள் தந்தான் இவளை யெய்து மென இவ்வாறு சொல்லிக்கொடுப்பது: அஃது அரும்பொருள் வினைநிலையென்பது. இராக்கதம் என்பது அவள்தன்னினுந் தமரினும் பெறாது வலிந்துகொள்வது. பைசாசம் என்பது மூத்தாண்மாட்டுந் துயின்றாண்மாட்டுங் களித்தாண்மாட்டுஞ் சார்வது: அது பேய் நிலையெனப்படும். இவ்வெட்டுமணமும் மன்றல் எட்டென்று சொல்லப்பட்டன என வுணர்க.

இனிக் கந்தருவவழக்கம் என்பது, கந்தருவரென்பார் ஈண்டுச்செய்த நல்வினைப்பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப்புணர்வது. அது கந்தருவமணம். அதனை ஒப்பதனைக் களவென்று வேண்டும் இவ்வாசிரியன். அஃதேயெனின், கந்தருவவழக்கம் போல்வது என்னாது 'கந்தருவவழக்க' மென்றமையான் அதனைக் களவென்று கொள்ளாமோவெனின், கொள்ளாம். நூற்கிடக்கை அவ்வியல்பிற்றன்றாகலாற் போல்வது என்றே கொள்ளற்பாலது. போறல் என்பது சிறிதொத்துச் சிறிதொவ்வா தொழிவது; என்னை? குவளைப்பூப் போலுங்கண் என்றால் நீலமாத்திரை யொக்கும், மற்றொவ்வாப்புடை பெரிது; பவளம்போலும்வாய் என்றாற் செம்மைமாத்திரை யொக்கும், மற்றொவ்வாப்புடை பெரிது. இங்கும் ஏகதேசத்துக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிப் புணர்தலும், ஒத்த குலத்தினராகலும், ஒத்த அன்பினராகலுமென்னும் இத்துணையே ஒப்பிக்கப்பட்டது; மற்றப்புடையெல்லாம் ஒவ்வா. அஃதேயெனின், கந்தருவவழக்கம் போல்வதென வேண்டாவோ சூத்திரத் துள்ளெனின்; வேண்டா. உவமந்தொகுத்தவாறு சொல்லுதும்: பசுப் போல்வானைப் பசு என்றலும் பாவைபோல்வாளைப் பாவை என்றலும் என்பது. அஃதேயெனின், அவையெட்டும்

அதனையொத்த இதுவுமென மணம் ஒன்பதாகற்பாலபிற வெனின், அதுவன்று; அவ்வெட்டும் உலகினுள்ளன; இஃது அன்னதன்று, இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின் இதனை உலகவழக்கி னோடு இயையானென்பது. அஃதேயெனின், இதனை முதனூலென்று புகுந்தமையாற் கந்தருவ வழக்கமென்றே மொழியற்பாற்று, என்மனார் புலவரென்று சொல்லற்பாற் றன்று; அது வழிநூல் வாய்பாடாகலான் என்பது கடா. அதற்கு விடை: பிறநூல்களெல்லாம் ஆசிரியப் பகுதிப் படும், இதுவும் அவைபோல ஆசிரியப் பகுதிப்படுங் கொல்லோவெனிற் படாது. கந்தருவ வழக்கம்போல்வது களவாதல் மூன்றுகாலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்தமை யான் அவ்வகை சொன்னானென்பது. அஃதேயெனின் தன் னோடொத்த புலவரில்லையன்றே! தான் தலைவனாகலான், எல்லாம் உணர்ந்தானாகலானெனின்; அஃதே கருத்து, அறிந் திலை; தன்னானே உரைக்கப்பட்டதெனினும், பிறவற்றை யெல்லாந் திரியவுந் திரியாமையுங் கொண்டார், இதனைத் திரியாமையேகொண்டார் எல்லாருமென்றற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது. தன்மதம் உணர்ந்தாரையும் புலவரென் றான், அறிபொருளுக்கு ஏனோரும் புலவராகலின்.

இனி 'என்மனார்' என்பது, 'என்ப' என்னும் முற்றுச் சொற் 'குறைக்கும்வழிக் குறைத்தலும்' என்பதனாற் பகரங் குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்' என்பதனான் 'மன்' 'ஆர்' என்பன இரண்டிடைச்சொற் பெய்து விரித்து, 'என்மனார்' என்றாயிற்று. என்மனார் என்பது புலவர் என் னும் பெயர்கொண்டு முடிந்தது; முற்றுச்சொல் எச்சப் பெயர்கொண்டு முடியுமாகலினென்பது.

---

# ஒழிபியல்.

மேற்கூறிய நான்கியல்களின் ஒழிபாகவெடுத்துத் தமிழிலக்கண இலக்கிய சாத்திரப் புலமைகளை நிரப்புமாறும், அப்புலமைகளானே இகபர வீடுகளைச் சாதித்து எய்துமாறும் ஈண்டுக் கூறலுற்றாம்.

## கல்விச் சிறப்பு.

இவ்வுலகத்துக் காணப்படும் உயிர்வருக்கங்களுள், ஐம்புல உணர்வோடு நல்லதன்நலனுந் தீயதன்தீதும் பகுத்துணரவல்ல மனவுணர்ச்சியுமுடையராய் மேம்படுமக்கள், கர்த்திருத்துவ போத்திருத்துவம் நன்குறுதற்கு வேண்டுஞ் சவிகற்பஞானம் பயக்கும் வியஞ்சக ஞானகரணமாய் விளங்குவது வித்தையாம். வித்தையெனினுங் கல்வியெனினும் பொருந்தும். மக்கள் இயல்பாக மனவுணர்வுடையராயினும், சுத்தமாயா நாதகாரிய சத்தப்பிரம ரூபமாகும் வித்தையின் உபகாரமின்றிச் சவிகற்பஞான வியாபாரமெய்த மாட்டார். மக்கள் இயற்கையான மனக்கருவியினால் நிருவிகற்பஞானச் செய்தியுஞ் செயற்கையான கல்வியறிவினாற் சவிகற்பஞானச் செய்தியும் எய்துகின்றார். நிருவிகற்பக் காட்சியாவது - பெயர், சாதி, குணம், கன்மம், பொருள் என்றிவற்றாற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றா நின்றதெனப் பொருளுண்மை மாத்திரையே அறியும் ஞானசத்தி. சவிகற்பக் காட்சியாவது - பெயர், சாதி, முதலியவற்றாற் பொருளை உள்ளவாறு உணரும் ஞானசத்தி. அவையாமாறு காட்டுதும். மாவென்பது ஒன்றன் பெயர். அதற்கு மாத்தன்மை சாதி. வண்ணம், வடிவு முதலியன அதன்குணம். நிற்றல், தளிர்த்தல், பூத்தல் முதலியன அதன் கன்மம். மரமென

நிலைபெறுதல் பொருளாகை. ஒருசாத்தன் தன் கண்ணுக்குப் புலப்படாநிற்கும் ஒன்றைக் கண்ணோடு கூடிய இயல்பான மனக்கரணத்தால் இஃதொன்று தோன்று நின்றதெனப் பெயர் சாதி முதலியவற்றாற் பகுத்தறிதலின்றிப் பொருளுண்மை மாத்திரையின் முன்னறியா நிற்கும். அங்ஙனம் அறிவுறுநின்ற அவன் அப்பொருளை இஃது யாதோவென ஐயுறுதலும் அதனை வேறொன்றாக மயங்கி நிச்சயித்தலுஞ் செய்து, பின்னர் அப்பொருட்கண் மிக்குத் தோன்றும் மாவென்னும் பெயர்முதலிய ஐந்துங்கொண்டு எழுத்தான் இயன்ற சொல்லால் விகற்பித்து அதனைப் புலப்படவறியும். இங்ஙனமாகலின், மக்கட்குச் சவிகற்பஞானங் கலாரூபமான சொல்லான் நிகழ்தல் அனுபவசித்தமாம். சாத்தன் பிறர் செவிக்குப் புலனாக உச்சரிக்குஞ் சொல்லின்றியும் இவ்வைந்தானும் பொருளைத் தன்னுள் விகற்பித்தறியுமாலெனின்,—அறியாது கூறினாய்; சொற்கள் உந்தியிற் சூக்குமையாயும் நெஞ்சின்கண் பைசந்தியாயுங் கண்டத்தின்கண் மத்திமையாயும் விளங்கித் தன்செவிக்குப் புலப்படுஞ் சூக்குமவைகரியாய், இறுதியிற் பிறர்செவிக்குப் புலப்படுந் தூலவைகரியாய் வெளிப்படுமாகலின், சாத்தன் பிறர்செவிக்குப் புலனாகாமல் உள்ளே செய்யுஞ் சவிகற்ப வியாபாரமுஞ் சொல்லான்நிகழும் ஞானச்செய்தியே என்க.

கல்விமாட்சி,

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுணராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து"

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு — முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை"

"தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி"

என்பனவற்றான் அறிக.

இன்னும், சாதி உடலோடு அழியும். கல்வி உயிரோடு செல்லும். ஆகலால், சாதி உயர்ச்சியினுங் கல்வியுயர்ச்சியே மிக மேம்பட்டது. அது,

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு"

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"

"கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரை
தலைநிலத்து வைக்கப் படும்"

என்பனவற்றான் உணர்க. கற்றோர்க்கு எந்நாடும் எவ்வூருந் தம்போலுற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கு ஏதுவாம். ஆதலின், கல்விபோலச் சிறந்த நற்பொருள் பிறிதில்லை. அது,

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்பதனைறிக. அரசனுக்குத் தன்தேயத்திற்றானே சிறப்புண்டு. கற்றவனுக்கு அவன் சென்ற விடமெல்லாஞ் சிறப்புண்டு. ஆதலால், மன்னனினுங் கற்றோனே சிறப்பு மிகவுடையன். அது,

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

என்பதனான் அறிக. ஒருவயிற் றுதித்தோருள்ளும் ஒரு குடிப் பிறந்தோருள்ளுங் கற்றோனே சிறப்புடையன். அரசனுங் கற்றோன் காட்டிய வழியே செல்லும் நீரன். அது,

"பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்"

என்பதனா னுணர்க. கல்விப்பொருள் இம்மிக்காரோடு தலைப் பெய்து அறியாதனவெல்லாம் அறிந்தோமென்றும், யாண்டு பலவாக நரையிலம் ஆயினமென்றும் உவத்தற்கு ஏதுவாம். அது

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

என்பதனான் உணர்க. செல்வப்பொருள் ஒருவனுக்கு ஈட்டும் அப்பிறப்பிற்றனே உதவுதலுடைத்து. கல்விப்பொருள் எழுமையினுஞ் சென்று உதவுதலுடைத்து. அது

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்பதனான் அறிக. இத்தனை மாட்சியெல்லாமுடைய கல்வியினை நல்லாசிரியரை யடுத்து அவற்கு உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்துங் கற்றல்வேண்டும். இங்ஙனங் கற்றோர் தலையாயர். அந்நிலைக்கு நாணிக் கல்லாதார் என்றுங் கடையாயர். அது

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றனன்றே"

"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்பனவற்றான் அறிக.

இனி அறியவேண்டுவன அறிதற்குரிய நன்மகனைப் பெற்ற தந்தை அவனைக் கற்றோரவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வியறிவுடையன் ஆக்குதல் வேண்டும், அதுவே நன்மகனுக்குத் தந்தை செயற்பாலதாம் உபகாரம். அது

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

"ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளி றுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

"எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றில்லை பிற"

என்பனவற்றான் அறிக. தம்மக்களது அறிவுடைமை தம்மினும் மாநிலத்து மன்னுநின்ற கற்றார்க்கெல்லாம் மிக இனிதாம். அது,

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது"

என்பதனாலறிக.

விலங்குகளுக்கு இங்ஙனஞ் சொல்லான் விகற்பித்தறியுங் கரணமின்மையால், அவை எதிர்கின்ற விடயங்களை நிருவிகற்பமாகவே அறியும் நீர்மை யுடையனவாம். இனி விலங்குகளைக்காட்டிலும் மக்களைத்துணை வேறுபாடு உடையரோ அத்துணை வேறுபாடு கல்லாத மக்களைக்காட்டிலுங் கற்றறிந்த மக்கள் உடையரென்பது.

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்னும் திருக்குறளும் இதனை நிலையிடுதல் காண்க. கல்லாதமக்களும் ஒட்பமுடையராய் நிலவக் காண்டுமாலெனின்,—கல்லாதமக்கள் மாட்டுளதாம் ஒட்பம் நீர்மேல் எழுத்துப்போல்வதோர் விழுக்காடாய் விரையக்கெட்டுப் பயப்பாடின்றி யொழிதலின், அது ஒருசார் விலங்கின் ஒட்பம் போலக் கொள்ளப்படுதலல்லது நுண்மாண் நுழைபுலமாகக் கொள்ளப்படாதாம் என்க.

> "கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
> கொள்ளா ரறிவுடை யார்"

என்னுந் திருக்குறளும் இது தேற்றுமாறு காண்க. கல்வியறிவில்லாதார் மெய்ப்பொருள் காணமாட்டாரென்பதும், அஃதுடையாரே மெய்ப்பொருள் காண வல்லுனரென்பதும்,

> "கல்லா நெஞ்சி
> னில்லா னீசன்"

> "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணை
> மற்றவ ரறியா மாணிக்க மலையை" [மா கடலை

என்றற்றொடக்கத்துத் திருவாக்குக்களான் அறிக.

> "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
> னுண்மை யறிவே மிகும்"

என்றருளிச்செய்தது, தீவினைப்பாலர்பால் உளதாங் கல்வி நல்வினைப் பாலர்பால் உளதாங்கல்விபோல நன்குசெய்தற்கு உபகாரமாக மாட்டாது; தீவினைப்பயன் விளைவிற் பின்னிருந்து இரங்குதற்கு உபகாரமாமென்ற குறிப்பாகலின், அது கல்வி மெய்புணர்விற்குச் சாதகமாகும் என்பதனோடு முரணாதென்க.

> "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா"

என்னுஞ் சிந்தாமணியும் அப்பொருட்டு.

கல்வியுடைமை பொருளுடைமையென்று இரண்டுஞ் செல்வமாயினும், கல்வி இம்மை மறுமை வீடுபேறுகள் மூன்றற்குஞ் சாதகமாகலின்,

"நற்பொருள் செய்வார்க் கிடம் பொருள் செய்வார்க்கு மஃதிடம்"

என்றார் சிந்தாமணி நூலார். ஆண்டு நற்பொருளென்றது கல்விப்பொருளை. கல்விப்பொருளின் உயர்ச்சி

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்பதனானும் அறிக. விலங்கொடு மக்களென்னும் பொதுச் சொல்லாற் பெண்பாலாருங் கற்றற்குரிய ரென்பது கொள்க.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

என விதந்தெடுத்து ஓதுதலானும், கல்வி ஆண்பாலார் பெண் பாலார் இருவருக்கும் பொதுவாதல் தெளிக. மற்று

"நுண்ணறி வுடையராய் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே"

என்றது என்னைகொலெனின்,—பெண்பாலார் இயல்பின் மனத்திடம் பெரிதில ராதலின், அவர்கட்படுங் கல்வி ஆண் பாலார்கட்படுங் கல்விபோலப் பெரிதும் நன்மைக்கு ஏது வாகாதென்ற கருத்தால் அங்ஙனங் கூறினாராதலின், அது கொண்டே அவர் கற்பிக்கப்பாலரல்லர் என்பது முடியா தென்க. இத்துணையும், சவிகற்பஞானங் கல்வியான் எய்தற் பாலதென்பதும், அதன் சிறப்பும், அது ஆண்மக்கள் பெண் மக்களென்னும் இருபாலார்க்கும் பொதுப் பொருளென் பதும், தந்தை மக்கட்குச்செய்யும் முக்கியவுதவி அவரைக் கல்வி யறிவுடையராக்குதல் என்பதும் சொல்லப்பட்டன.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

கல்வி, கற்பிக்க வல்ல நல்லாசிரியரும் கற்றற்குரிய நன் மாணாக்கரும் எய்தினல்லது பயன்படாமையின், கற்பிக்க வல்ல நல்லாசிரியர் இலக்கணமும், கற்கும் நன்மாணாக்கர் இலக்கணமும், முன்னரெடுத்தோதிக் கற்குமாறும், கற்கப் படும் நூன்முறையும், பின்னர் எடுத்து ஓதுதும்.

## கற்பிக்கும் நல்லாசிரியர் இயல்பு

உயர்குடிப்பிறப்பும், மனத்தூய்மையும், நல்லொழுக் கமும், பல கலைப்பயிற்சியும், வாய்மையும், மாணாக்கர்மாட்டு அன்புடைமையும், பொருள் அவாவின்மையும், நடுவுநிலை மையும் என்னும் எண்வகை இலக்கணங்க ளுடையராய்க் கொடையும், ஊக்கமும், உலகியலறிவும், நிலைபெற்ற தோற் றமும், பொறையும், நிறையும், மறப்பின்மையும், அறிவும், உருநலனும், ஆற்றலும், புகழும், சொல்வன்மையும், மாணாக் கரால் விரும்பப்படும் நீர்மையும், தொன்னெறியாற் பொருந் தினோர் கற்பிக்கும் நல்லாசிரியராதற்கு உரியரென்று அறிக. அது

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமுந்
திங்க ளன்ன கல்வியுந் திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவது
மஃகா வன்பும் வெஃகா வுள்ளமுந்
துலைநா வன்ன சமனிலை யுளப்பட
வெண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையுந் தாஅ ளாண்மையு
முலகிய லறிதலு நிலைஇய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையு
மறிவு முருவு மாற்றலும் புகழுஞ்

சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன் மையுங்
கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலு
மின்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லா சிரியர்''

என்பதனான் அறிக. குலம்புரி பிறப்பு - உயர்குலத்தோர் விரும்பும் பிறப்பு. திங்கள் உவாமதி. திங்களும் ஞாயிறும் பொங்கிரு ளகற்றிப் பொருள்களைப் புலப்படக்காட்டும் பொற்பினவாதல்போல வாய்மையுடையார் பொருள்களை ஐய விபரீத மகற்றி மெய்யுணர்த்தும் நீர்மையுடைய ரென்பார், திங்களோடு ஞாயிறன்ன வாய்மையும் என்றார். இது தொழி லுவமம். நிலை இய தோற்றமாவது—எஞ்ஞான்றுஞ் சலியா வேற்ற நீர்மை. ஆற்றல்—அறிவுத்திட்பம், காயத்திட்பம் என்றிவை; அது அறிவும், உருவும், ஆற்றலுமென அவ் விரண்டனையுஞ் சாரவைத்து ஓதியதனான் அறியப்படும். காயத்திட்பம்—மனவலி, வாக்குவலி, உடல்வலியென மூன் றாம். அறிவுத்திட்பம்—இயற்கை அறிவுவலி, செயற்கை அறிவுவலியென இரண்டாம். புகழ்—தங்கல்வி நிறைவு, மதிநுட்பம், நல்லொழுக்கம் என்றிவை காரணமாகத் தாமுள ராய ஞான்றும் பிற்றை ஞான்றும் உயர்ந்தோர் வாய்ப்பட்டு நிகழ்ந்து எங்கும் பரந்து நிலவும் நன்குமதிப்புச் சொல் விளக்கம். சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன்மை—வாக் படுத்துவம். குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை, கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை என்புழிக் கட்டுரை வன்மையும் அது. கட்டுரைவன்மை—கேட்பார்ப்பிணிக்குஞ் சொல்வன்மை. கட்டுதல்—பிணித்தல். அது

''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்''

என்பதனானும் அறிக. கட்டுரை—வினைத்தொகை. இதற் குப் பிறரெல்லாந் தொடுத்துச் சொல்லும் உரைவலியென

நோக்கின்றி யுரைத்தார். இனிக் கட்டென்பது காலங்கரந்த பெயரெஞ்சுகிளவி முதனிலையாதலின், அதனைக் கட்டியென வினையெஞ்சுகிளவி யாக்குதல் இடர்ப்பாடுமாம். ஆசிரியர் இவ்வியல்புடையராயிருந்து நூல்கற்பிப்பின் மாணாக்கர் உறுதிப்பொருள் கசடறக்கற்றுக் கைக்கொண்டு நல்லொழுக்க மெய்தி மெய்யுணர்ந்து இகபரவீடுபேற்று உறுதிப் பயன்களைத் தப்பாது தலைக்கூடுப. இவ்வியல்பில்லார் ஆசிரியராய்க் கற்பிக்கப்புகின் மாணாக்கர் நூற்பொருள்களை ஐயமும் மருட்கையும் உறுதரக்கொண்டு துணிவிலராய்ப் போலியொழுக்கமேவிப் பல்லாற்றலைப்பட்ட விவேக கதியுடையராய் இகபர வீடுபேற்று உறுதிப் பயன்களை நன்குறமாட்டார்.

## கற்கும் நன்மாணாக்கர் இயல்பு

ஆசிரியன் கற்பிக்கும் நூற்பொருளைக் கற்பித்தவாறு உணர்தலும், கற்பித்தபொருள் பற்றுகக்கொண்டு சூழ்ந்து வேறு நற்பொருள் உணர்தலும், தம்போலக் கற்பவர்க்கு உபகாரிகளாதலும், தந்தை, தாய், ஆசிரியர் முதலியோர் செய்ந்நன்றியறிதலும், தீய சிற்றினச் சார்பின்மையும், சோம்பு, தடுமாற்றம், மானம், மறவி, கடுநோய், வெகுளி, களவு, காமம் என்றிவை இலாதலும், ஆசிரியனையடைந்து வழிபடுதலும், தருமநெறி தவறாமையும், ஆசிரியன் குறிப்பறிந்து நடத்தலும், கேட்ட நூற்பொருளைச் சிந்தித்தலும், பாடத்தை மறவாமற் காத்தலும், மீட்டும் ஆசிரியனையடைந்து கேட்ட நூற்பொருளை ஐயவிபரீதம் நீங்க வினவுதலும், நூற்பயிற்சியுடையார் பிறர் அறிந்துவைத்தாதல், அறியாதுவைத்தாதல், ஐயுற்றால் வினவும் சொற்பொருள் வினாக்களுக்கு அவர் கொள்ளுமுறையான் விடைகூறுதலும், நூற்பொருளைக் கற்றோரவையில் அவர் அனுமதி கொண்

டெடுத்துப் பிரசங்கித்தலு முடையராகி, உலகநடை அறிந் தொழுகுவோர் நூல் கற்றற்குரிய நன்மாணுக்கரென்று உணர்க.

"சொல்லிய பொருண்மை சொல்லியாங் குணர்தலுஞ்
சொல்லிய பொருளொடு சூழ்ந்துநன் குணர்தலுந்
தன்னோ ரன்னோர்க்குத் தான்பயப் படுதலுஞ்
செய்ந்நன்றி யறிதலுந் தீச்சார் பின்மையு
மடிதடு மாற்ற மானம்பொச் சாப்புக்
கடுநோய் சீற்றங் களவேகாம
மென்றிவை யின்மையுஞ் சென்றுவழி படுதலும்
அறத்துறை வழாமையுங் குறிப்பறிந் தொழுகலுங்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலு
மீட்டவை வினவலும் விடுத்தலு முரைத்தலு
முடைய ராகி நடையறிந் தியலுநா
நன்மா ணுக்கர்"

என்பதனாலறிக. இவ்வியல்புடைய மாணுக்கரே நூல்கசடற நன்குகற்று நற்புலமை எய்துப. இவ்வியல்பில்லோர் நூல் கற்கப் புகினும், தெளிவும், புலமை நிறைவும், திட்பமு முறுமை மேலும் நல்லுறுதியுந் தலைக்கூட மாட்டார்.

## கற்கும் முறை

நூல் கற்றற்குரியராய நன்மாணுக்கர் தாம் கற்கும் நூலின்கண் சிலபொருள் கருகிற்றுயின் அப்பொழுது அவற் றின்கண் அழுந்தற்க. முன்கற்ற நூற்கணுதல், பின்பு கற்கும் நூற்கணுதல் இவை வெளிறிக் கிடக்கும்; அது கண்டு தெளிதுமென்றுகொண்டு மனவூக்கங் குன்றுது நூலுரை கற்க. விதி விலக்குக்கள் நூலுரைகளுட் சில சொற்பொருட்கு எடுத்து ஓத்தால் எய்துதலுற்றுஞ் சிலசொற் பொருட்கு அங்ஙனமெடுத்து ஓத்தால் எய்துதலுறுதும் வரக் காணப்படின், அவற்றிற்கு விதிவிலக்கு ஆசிரியர் ஓதாமைக்

குக் காரணம் யாதென்று மனங்கலங்கற்க; ஆசிரியர் தாமெய்துவித்தன எய்தாதனவற்றிற்கும் எய்துமாறு உபலக்கணம் பற்றி நாலுரை செய்யும் நீரராகலின். உபலக்கணக் கூற்றுக்கள்,

> "காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்"
> "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
> றாளை வணங்காத் தலை"

என்பன போல்வன. முன்னறிந்ததற்குப் பின்னறிவது மாறுயின், அவ்வளவில் முன்னதேவிதி பின்னது வழுவென்றானும், பின்னதேவிதி முன்னது வழுவென்றானுங் கதுமெனக்கொண்டு நாலுரைப்பொருள் சிதைவுசெய்யாது, இஃது என்னூல்விதியோ மற்றெவ்வுரை விதியோ என்றெண்ணி நாலுரை கற்க. நாலுரைகளைச் சிலநாட்கற்ற மாத்திரையாற் புலமை எய்திற்றிலமென்று ஊக்கங் குன்றற்க. நாலுரைகளைப் பலநாட் கற்று அவற்றின்கண் பயிறலுஞ் செய்யின், புலமை தப்பாது பலிக்கும். நாலுரைகளை விரைவான் நோக்கற்க. அங்ஙனம் நோக்கின், யாதுந்தெரியாது. விரையாது நாலுரைகளையுற்றுநோக்கின், தெரியாத பொருளில்லை. கற்கும் நாலுரைகளிற் கருத்தினை மட்டுப்படுத்திக் கற்ற நாலுரைகளிற் கருத்தினைச் சிந்தாமல் இறக்குக. நாலுரைப் பொருள்களை வரம்புசெய்யாது இருகால் முக்காற் கேட்டலிற் பயனின்று. ஆகலின், நாலுரைப் பொருள்களை வரம்புபடுத்துக் கற்க. அங்ஙனங் கற்பின், ஒரு காலிற்றானே அந்நாலுரைப் புலமை யுளதாம். ஆசிரியனுக்குப் பொருள்கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும் பணிதலும் உற்றுழியுதவுதலுஞ்செய்து கற்க. இடம், பொருள், ஏவல்களுடையராய்ச் சிறப்புச் செய்யினும், கல்வி விருப்பில்லாத மந்த மாந்தர்களோடு கூட்டுறவு செய்யற்க. நுண்மாண் நுழைபுல முடையார்ப்பெறின்,

சில கொடுத்தும் அவரோடு பழகுக. மனம் இடர் நோய் முதலிய ஏதுக்களாற் கலங்குஞ் செவ்வியின் நூலுரையாய் தலை ஒருஞான்றுஞ் செய்யற்க. புலமைப் பேற்றிற்குச் சிறந்தகருவி ஆசிரியன்பால் மெய்யன்பும் மெய்வழிபாடும் உடையராதலாம்.

மக்களறிவு தாம் கற்கும் நூலளவாக விரியுமாகலின், நல்ல நூல்களை முழுதும் முறையாற் கற்க. ஒருதுறைநூல் ஒருவகை அறிவினையே உதவுமாகலின், பலவகை அறிவு வேண்டிப் பலவகை அறிவு நூல்களைப் பலவாறு நாடிக்கற்க.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

"அறிதோ றறியாமை கண்டற்றால்"

"நீரளவே யாகுமா நீராம்ப ருன்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு"

"நூல்பல கல்"

என்னும் முதுமொழிகளாலும் இவை துணிக. கண்ணொளி விளக்க மெய்திக் காண்டல்வியாபாரம் நிகழ்த்துதற்கு ஞாயிற்றினொளி முதலியன இன்றியமையாத உபகார காரணமாதல்போல மக்கள் ஆன்மஞானம் விளங்கிச் செய்தொழில் வன்மையுறுதற்கு, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து நிற்குங் கடவுளருட்சத்தி இன்றியமையாத உபகார காரணமாம். ஆகலின், அறிவு விளக்கம் வேண்டி நூலாயும் நன்மாணாக்கர் ஆசிரியவழிபாட்டினோடு ஈசுரவுபாசனையுங் கடைப்பிடித்துச் செய்துவருக.

"அருளினா லாகமத்தே யறியலா மளவினாலுந் தெருளலாம்" என்பவாகலின், கற்கும் நூலுரைச் சொற்பொருள்களை என்றுந் திருவருளின் நாடிச் சோதித்துக் கற்க.

## கற்கும் நான்முறை

விதிப்படி வித்தியாரம்பஞ் செய்து நல்லாசிரியரை யடைந்து நற்றமிழ்நூல் கற்கப்புகும் நன்மாணாக்கர் முன்னர்த் தமிழ் நெடுங்கணக்கு ஆய்ந்துகொண்டு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி முதலிய உலகநீதி நூல்களைக் கற்றுப் பின்னர் அவைகளின் பொருள்களை நன்று தெரிந்துகொள்க. அதற்குப்பின் நிகண்டு கற்று அதுகூறுஞ் சொற்பொருளுணர்ந்து முதுமொழி வெண்பா, நீதிநெறி விளக்கம், நாலடி, ஆசாரக்கோவை முதலிய நீதிநூல்களைக் கற்று அவற்றின் பொருளையும் அவற்றின்கண் வரும் நிகண்டுச் சொற்களையும் நன்றாக அறிந்துகொள்க. அதற்குப்பின் சைவநன்மாணாக்கர் சைவாசாரியர்பால் வைதிகசைவ சாத்திரம் ஓதுதற்கு வேண்டுஞ் சைவ சம்ஸ்காரமும் வைணவ நன்மாணாக்கர் வைணவாசாரியர்பால் வைணவநூல் ஓதுதற்கு வேண்டும் வைணவ சம்ஸ்காரமும் விதிப்படி பெற்று, முறையே பஞ்சாக்கர அட்டாக்கர மந்திர தந்திர செப அனுட்டான முடையராய், தேவாரந் திருவாசகம் நாலாயிரப் பிரபந்தம் என்னுந் தமிழ் வேதங்களைப் பண்முறையாகவுஞ் சுத்தாங்கமாகவும் ஓதப் பழகிக்கொள்க.

அதன்மேல், நல்லியற்புலவர் இயற்றிய தமிழ் இலக்கணச் சுருக்கங் கற்றுக்கொண்டு, திருவிசைப்பா, திருமந்திரம், திருப்பல்லாண்டு, பதினொராந் திருமுறைப் பிரபந்தங்கள், குமரகுருபரமுனிவர் பிரபந்தங்கள், சிவப்பிரகாச முனிவர் பிரபந்தங்கள், சிவஞான யோகிகள் பிரபந்தங்கள், அவர் மாணாக்கர் பிரபந்தங்கள் முதலியவைகளையும், பெரிய புராணம், கோயிற்புராணம், காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம், திருவிளையாடற்புராணம், பிரமோத்தரகாண்டம்,

காசிகண்டம், பிரபுலிங்கலீலை, பாகவதம் முதலிய தமிழ்ப் புராணங்களையும், இராமாயணம், பாரதமென்னுந் தமிழ் இதிகாசங்களையும் முறையாற்கேட்டு, இலக்கியவறிவு ஈட்டிக் கொள்க. அதன்மேல், நன்னூல், இலக்கணவிளக்கம், யாப்பருங்கலம், காரிகை, அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, வெண்பாப்பாட்டியல், தண்டியலங்காரம், வீரசோழியம், நேமிநாதமென்னும் இலக்கண நூல்களை அவற்றின் காண்டிகை விருத்தியுரைகளோடு உளங்கொளக் கற்று, கற்ற இலக்கியங்களில் இப்பஞ்சலக்கண நூல்விதிகள் அமைவர நன்றுபயில்க. இதுகாறுங் கூறிய இவ்விலக்கிய இலக்கண நூலுரைகள் முறையால் உளங்கொளக் கற்றுத் தமிழ்ப்புலமை யெய்திய நன்மாணாக்கர் இளந்தமிழ்ப் புலவர் (Intermediate) என்னுங் கல்விப் பட்டாபிதானத்துக்கு உரியரென்றுணர்க.

அதன்மேல், தொல்காப்பிய எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகாரங்களை இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம் என்னும் உரைகளோடு நன்று கற்று, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, நைடதம், இரகுவமிசம் என்னுந் தமிழ்க் காவியங்களை உரைகளோடு நன்று ஆராய்ந்துகொள்க.

அற்றேல் லஃதங்ஙனமாக;

"சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
தூக்கியுப தேசித்தார் சோமேசா - நோக்கிற்
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்"

என்று ஆசிரியர் சிவஞானயோகிகள் அருளிச்செய்தலின், சிந்தாமணிப் பயிற்சியுஞ் சிந்தாமணி யென்றது உபலக்கணமாகலின், அதுபோலுஞ் சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணிப் பயிற்சியுஞ் சைவவைணவ நன்மாணாக்கர்களுக்கு

ஆகாவெனின்,— அஃதொக்குமன்ருயினும், சிந்தாமணி முதலிய காவியங்களிற் பொதுவான உலகியல், நீதி, வைராக்கியங் கூறப்படுதலானும், தொல்காப்பிய இயற்றமிழ்ப் பிரயோகம் மிக வருதலானும், அப்பயன் நோக்கிச் சைவவைணவ நன்மாணுக்கர் அவையுங் கற்கற்பாலரென்று எடுத்தோதினும். இனிச் சைவவைணவ நன்மாணுக்கர் அக்காவியங்களைக் கற்கவேண்டின், தத்தஞ்சமய சித்தாந்தப் பார்வையாற் கற்க. ஆத்தன் நூல்களிற்போல அவற்றின்கண் அழுந்தற்க வென்பார், "சிந்தாமணிப் பயிற்சி தீது" என்ருர். பயிறல்—பலகால் உளங்கொள அழுந்தி ஆராய்தல். மனம் ஒன்றில் அழுந்தின் அதன் வண்ணமாய் மாறுமென்பது அனுபவமாகலின், வேதப்புறமாய அவ்வாருகத பௌத்த காவியங்களிற் பலகால் அழுந்திப் பயில்வோர் தம்வைதிக நெறி கைவிட்டு அவைகூறுங் கொள்கை வசத்தராய் அவைதிகராவரென்பது பெரியோர் கருத்தென்க. வைதிக காவியங்களின் இயல்பும், அவைதிக காவியங்களின் இயல்பும் "வைதிக காவியதூடண மறுப்பில்" விரித்தோதினும்

அதன்பின், தருக்கசங்கிரக தீபிகை, தருக்கபரிபாடை கற்றுத்தருக்க அறிவுடையராகுக. அதன்மேல், இறையனுர் அகப்பொருளுரை, பிரயோக விவேகவுரை, இலக்கணக் கொத்துரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூருவளி யென்பவற்றை மதியமையக்கற்று இலக்கணவறிவு விரியச்செய்துகொண்டு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, கல்லாடம், பெருந்தேவனுர் பாரதமென்னுஞ் சங்கவிலக்கியங்களை அவற்றுரைகளோடு ஆராய்ந்து, பின்னர்த் திருக்குறள், திருக்கோவை யென்னும் தெய்வ இலக்கியங்களைப் பரிமேலழகியாருரை, பேராசிரியருரைகளோடு அறிவமையப் பலமுறை நன்ருராய்ந்து தமிழ்ப்புலமை நிரப்பிக் கொள்க.

இன்னும், தமிழ்ப் பெரும்புலமைக்கு இன்றியமையாத வடமொழி இலக்கிய இலக்கண ஆராய்ச்சியும், பூகோள ககோள கணித நூலாராய்ச்சியும், தருக்க நூலாராய்ச்சியும் ஈட்டிக்கொள்க. இதுகாறுங் கூறிய நூலுரைகளை இவ்வாறு கசடறக்கற்று முதிர்ந்த நன்மாணாக்கர் முதுதமிழ்ப் புலவர் (B. A.) என்னும் பட்டாபிதானத்துக்கு உரியரென்றுணர்க.

இங்ஙனம் தமிழிலக்கண இலக்கியம் முதலிய வித்தைகள் கற்று முதிர்ந்தோருள் சைவ நன்மாணாக்கர், சைவாசாரியரை யடைந்து வழிபட்டு மந்திராதிகாரம், அர்ச்சனாதிகாரம், யோகாதிகாரங்களை நன்று பயக்குஞ் சைவ சமய விசேட தீக்கையுற்று, சைவசமயநெறி, சிவதருமோத்தாரம், பரமததிமிரபானு, ஞானாமிர்தம், தத்துவப்பிரகாசம், சோமசம்பு சிவாசாரியர் கிரியாகாண்டக் கிரமாவலி, சித்தாந்த சாராவலி என்பனவற்றையும், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், சிவதத்துவ விவேகம், சிவகர்ணாமிர்தம், பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், பிரமதருக்கத்தவம் என்பனவற்றையுங் கற்று, வைதிகசைவ அறிவுடையராய், வைதிக சைவானுட்டானங் கைவரப் பயின்று கொள்க. சுத்தாத்துவிதிகளான சித்தாந்தசைவ நன்மாணாக்கர் கைவல்லியம், வேதாந்த சூடாமணி முதலிய கேவலாத்துவித வேதாந்த சாத்திரங்களைக் கற்கவேண்டின், தஞ் சித்தாந்தப் பார்வையாற் கற்க. இது விசிட்டாத்துவித வைணவ நன்மாணாக்கர்களுக்கும் ஒக்கும்.

சைவ நன்மாணாக்கருள் சித்தசுத்தி மிகவுடையராய் நித்தியா நித்திய விவேகவுணர்வு தோன்றிப் பிறவிக்கு அஞ்சி வீடுபேற்றின் அவா மிக்குடைய பரிபாகிகளான நல்லோர், சித்தாந்த சைவ ஞானாசாரியரை யடைந்து வழிபாடாற்றி அகங்கார மமகாரத் தியாகஞ்செய்து, நிருவாண விஞ்ஞான தீக்கையுற்று, சிவஞானபோதம், சிவஞானசித்தி,

சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய அத்துவித சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கையும் அவற்றின் உரைகளோடும், வேதாந்த சித்தாந்த சாத்திரப்பொருள் அனைத்தையும் ஐய விபரீதமற அடக்கி விளக்கும் சகலகலா ரூபமான சிவஞான மாபாடியத்தினோடும், ஞானாசாரியரை வழிபட்டு, முறையாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் செய்து, சிவானுபவங் கைவருமாறு சிவோகமென்னும் அத்துவித நிட்டை பேணுக. இங்ஙனம் ஞானாதிகாரிகளான நல்லோர் ஈசா வாசியம், கேனம், பிரச்சினம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரியம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருகதாரணியகம், சுவேதாச்சுவதரம், கைவல்லியம், அதர்வ சிரசு, அதர்வ சிகையென்னுஞ் சைவோப நிடதங்களையும், பவுட்கரம், மிருகேந்திரம், தேவிகாலோத்தரம், சருவ ஞானோத்தரம் முதலிய சைவாகமங்களையும் தாம் கற்றுணர்ந்த வேதாந்தத் தெளிவான திராவிடசைவ சித்தாந்தப் புலமைக்கு அரணாக ஆய்ந்துணர்ந்து கொள்க. ஈண்டுச் சொல்லிய உபநிடதங்களின் மெய்ப் பொருள்கள் ஆண்டாண்டுத் துவித விசிட்டாத்துவித கேவலாத்துவித பாடியவுரைகளாற் பேதிக்கப்பட்டிருத்தலின், சைவ சித்தாந்த ஞானகுரு வருளுபதேச மாந்திரப் பார்வையால் அவற்றின் மெய்யுணர்ந்து சுத்தாத்துவிதநிலைக் கடைப்பிடி உறுதி யுறுக.

அதன்மேல், இங்ஙனங் கூறிய வேதாந்தத் தெளிவான சைவசித்தாந்த ஞானானுபவ தெய்வத்திருவருள் இலக்கியமான தேவாரந் திருவாசகந் திருக்கோவை உத்தரவேதம் முதலிய திருமுறைகளைத் திருவருட்கண்ணால் என்றும் ஆராய்ந்து ஓதி, பரமசிவன் திருவடிக் கீழ்ப் பிரிவறப்பொருந்துஞ் சீவன்முத்தி யுண்மைநிலை தலைக்கூடி வாழ்க.

வைணவநல்லோர் தத்துவசேகரம், தத்துவத்திரயம், சீவசன பூரணம் முதலிய தஞ்சமயசாத்திரம் முறையாற்

கேட்டுச் சிந்தித்து விசிட்டாத்துவித சித்தாந்தந் தேறி, நாலாயிரப் பிரபந்தங்களைத் திருவருட் பார்வையான் என் றும் ஆராய்ந்து, நாராயணமூர்த்தி திருவடிக்கீழ் இருக்குஞ் சரணாகதிநிலை தலைக்கூடி வாழ்க.

மேற்கூறிய முதுதமிழ்ப் புலமையோடு இங்ஙனங் கூறிய வேதாந்த சித்தாந்த சாத்திரப்புலமையும் நன்கு கைவரப்பெற்றார் முதுதமிழ்ப் பெரும்புலவர் (M. A.) என் னும் பட்டாபிதானத்துக்கு உரியரென்றுணர்க.

## கல்வியறிவின் பயன்

இனித் தமிழ்ப்புலமையால் இகபர வீடுபேறு சாதித்து அடையுமாறு கூறுதும்:

இன்னிலையரான தமிழ்ப்புலவர் அறத்தாற்றாற் பொரு ளீட்டி இன்னிலைக்கு விதித்தகருமம் வழாதுசெய்து போகந் துய்த்துத் தருமமுந் தக்கார்க்குச் செய்க. பொருளீட்டுங் கால் அருளொடும் அன்பொடும் பொருந்தியீட்டுக. என்னை? அருளொடும் அன்பொடும் பொருந்தி வாராத பொருள் பசுமட்கலத்துள் நீர்போலச் செய்தானையுங் கொண்டிறத் தலின். இல்லறநெறி நிற்பார், வறியார்க்கு வேண்டுவன வுதவி அவர்வறுமை களையவல்லராதலும், தாம் எடுத்துக் கொண்ட நல்வினையை முடிக்கவல்லராதலும், தம்பகைவர் தருக்கறுக்க வல்லராதலும், வேண்டும் இன்பம் நுகரவல்ல ராதலும், பொருளுடையராய வழியேயாகலின், அப்பெற் றித்தாய பொருளை நெறியால் நிரம்ப ஈட்டுக. பொருளீட் டுங்கால் தம்புலமை அதற்குத் துணைக்காரணமா மென்று கொண்டு ஈட்டல் தக்கதன்று. என்னை? அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலின். ஆகவே, அறிவுடையராதற்காகும் ஊழ் செல்வமுடையராதற்கு

ஆகாது; செல்வமுடையராதற்காகும் ஊழ் அறிவுடையரா தற்கு ஆகாது. நாயனாரும்,

> "இருவே றுலகத் தியற்கை திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு"

என்றெடுத்து அருளிச்செய்தார். இன்னும், யார்க்கும் பொருளின் உண்மையும் அதுகாரணமாக எய்தும் இன்பமும் முன்வினையான் அமைந்து கிடந்தன; பொருளின் இன்மையும் அதுகாரணமாக எய்துந் துன்பமும் அங்ஙனமே முன்வினையால் அமைந்துகிடந்தன. அவை இம்மையறிவு முயற்சியாலும் அஃதின்மையாலும் உளவாவன என்று கொண்டு மகிழ்தலுங் கவறலும் அறிவின்மையாம். இங்ஙனமாதலின், கல்வியறிவு தெள்ளியராய் நின்று நன்றுசெய்து இகத்தில் நற்புகழும் பரத்தில் துறக்கம் வீடுபேறுகளும் எய்துதற்கே சாதனமாவதாம் என்க. இனி, பொருள் பழவினையான் வருவதென்றுகொண்டு அதனை ஈட்டும் முயற்சியின்றி மடிபுக்கிருக்காது, அதனை ஊக்கமுடையராகி ஈட்டுக;

> "முயற்சி திருவினை யாக்கும்"
> "மடியிலான் றாளுளா டாமரையி னாள்"
> "ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
> வூக்க முடையா னுழை"

என்பவாகலின். இனி, கல்வியறிவுடையார் பொருளைக் கல்வியினாலும் உழவினாலும் ஈட்டுதல் சிறப்பாம். வாணிகத்தினானும் சேவனத்தினானும் பொருளீட்டுதல் அத்துணைச் சிறப்பின்றாம். யாதினாலெனின்,— கல்வி, உழவுதொழிலாற் பொருளீட்டும் புலவர் சுவதந்திரராயிருந்து இகபரசாதனங் கவலை புகுதாமற் செய்தற்கு வல்லுநராவர்; மற்றிருவகையான் ஈட்டும் புலவர் கவலையும் பரதந்திரமு முடையராய் இகபரசாதனம் முட்டுற்றிருந்து செய்யும் நீரராவர்; அதனாலென்க.

THE MADRAS ... TAMIL

இங்ஙனம் பொருளீட்டிக் கல்வியினால் இகபரசாதனம் பேணிவாழும் நற்புலவர், தஞ்சொற் செயல்களால் யார்க்கும் உபகாரிகளாய் வாழ்க. அங்ஙனம் உபகாரிகளாதலைப் பயன்நோக்கிச் செய்யற்க; கடனாகக்கொண்டு செய்க. இனிச் செய்யுந் தொழிலெல்லாம் பரமேசுரார்ப்பணமாகச் செய்க. தொழில்களைத் தமக்கென்று கொண்டு செய்வோர் அவற்றால் துடக்குறுவர்; பரமேசுரார்ப்பணமாகச் செய்வோர் அவற்றால் துடக்குறார். அவர் அவற்றால் துடக்குறாமையொன்றோ, பரமேசுரன் அருண்ஞானமுமெய்திப் பிறப்பு இறப்பில் பெரு வாழ்வும் எய்துப.

"கிரியையென மருவுமவை யாவு ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்"

ஆதலின், கருமங்களைப் பயன் நோக்காது பரமேசுரார்ப்பணமாகச் செய்வோர் பிரமஞானமெய்தி வீடுபேறு கூடுவரென்பது வேதாகமத் துணிபாம்.

"அன்பு மருளு மறிவுக் கடையாளம்"

என்பவாகலின், கல்வியறிவுடையார் அவ்விரண்டனையுந் தமக்கு அணியாகக்கொண்டு போற்றல் வேண்டும். அன்பு தொடர்புடைய உயிர்கள் மாட்டும் அருள் அவ்வாறன்றி எல்லாவுயிர்களிடத்தும் நிகழும் அறிவு வியாபாரமாதலின், அன்பினும் அருள் சிறந்த ஞானசாதனமாம். அன்பு இல்லறத்தாரறிவு வியாபாரமும், அருள் துறவறத்தாரறிவு வியாபாரமுமாம். இல்லறத்தின் தொடர்புபற்றியெழும் அன்பே துறவறத்தின் தொடர்புபற்றாது அருளாய் முதிரும். நாயனாரும் "அருளென்னு மன்பீன் குழவி" என்று அருளிச்செய்தார். பொருட்செல்வம் நல்லோர் பாலன்றிப் பூரியர்பாலும் உளதாவதாம். அருட்செல்வமே நல்லோர் பாற்றானே யுளதாவதாம். ஆகலின், அருட்செல்வமோ செல்வங்களுள் வைத்துச் சிறந்த நற்செல்வமாம். நாயனாரும்

166

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள"

என்றெடுத்து அருளிச்செய்தார். இன்னும், பொருளுடையார் இவ்வுலக நுகர்ச்சியே எய்துப. அருளுடையார் இவ்வுலக நுகர்ச்சியும், அவ்வுலக நுகர்ச்சியுந் தப்பாது எய்துப. இன்னும், அருட்செல்வமுடையார் இம்மையிற்றானே தெய்வத்தன்மையுற்று எல்லாவுயிர்களாலுந் தொழப்படும் நீர்மையுடையருமாவர். இங்ஙனமாதலின், கல்வியறிவுடைய நன்மக்கள் எப்பொழுதும் அப்பெற்றித்தாய அருட்பெருஞ் செல்வத்தைக் குறிக்கொண்டு கடைப்பிடித்து ஈட்டல் நன்றாம். இவ்வருளறம் இங்ஙனஞ்சிறந்து நேராக ஞானசாதன மாதலினன்றே,

என்றும்,

"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி"

"ஒன்றாக நல்லது கொல்லாமை"

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்றும்,

"கொல்லாவிரதங் குவலய மெல்லா மோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே"

என்றும், உண்மை நூல்கள் அங்ஙனம் முறையிட்டன என்க. இனிச் சீவகாருண்ணியம் பேணாது, கொலையூன் உண்போர் சிலர், புலவரென்றுங் குரவரென்றும் பிரமஞான போதகாசிரியரென்றும் உலகத்தில் நிலவுகின்றார்.

"உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு"

"கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலு
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னுலுஞ்
சங்கையி லாத ஞான தத்துவ முணர்ந்திட் டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே"

என்று உண்மை நூல்கள் முறையிடுதலை அவரறியார் போலும்!

யாவர்க்காயினுந் தாம் அனுட்டியாத உறுதியினைப் பிறர் அனுட்டிக்கப் போதித்தல் பெரும் பேதைமையாம். நாயனுரும்

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்"

என்று அவ்வாறு எடுத்தருளிச் செய்தாரென்பது. குண குற்றங்கள் பழவினை காரணமாக இம்மையின் மக்கள்மாட்டு நிகழுதலின், குற்றச் செயலுடையராய ஒருவர் அக்குற்றச் செய்திகளின் கேடுணர்ந்து, அவை தவிர்ந்து நற்குண நற் செய்கையுடையராய், தாம் முன்செய்த குற்றந் தீதாதலைப் பிறர்க்கு எடுத்துச்சொல்லிக் குணப்பிரசங்கஞ்செய்தல் தக்க தேயாம். அவர் அவ்வாறு நன்று நாடிச்செய்யுங் குணப் பிரசங்கத்தினை முன்னைக் குற்றச்செய்தி காரணமாக அவ மதித்தல் தக்கதன்றும்.

இனித் தமிழ்ப்புலமை யுடையார் கடைப்பிடித்துச் செயற்பாலன: தங்குலநலம் பேணல், தந்தேசநன்மை பேணல், தஞ்சமய நன்மை பேணல், நன்மாணுக்கர்க்குக் கல்வி கற்பித்தல், நல்ல நூலுரைகளை இயற்றுதல் என்றிவை முதலாயின. முற்காலத்துத் தமிழ்ப்புலவர் இப்பொது நன் மைகளைக் கடைப்பிடித்துச் செய்து புகழுடம்பு நிறுவிப்

பரவாழ்வு பெற்றார். இக்காலத்துத் தமிழ்ப்புலவருட் பெரும் பாலர் இவை செய்யாது, தங்குடும்பம் ஓம்புதலொன்றுமே செய்து, கல்வியறிவுப் பெரும்பயன் கொள்ளாது, கொன்னே காலங்கழித்திடுவர்!

இனிக் கல்வியென்னும் நற்பொருட் புலமையாளர் இறைமுதற் கடவுள் திருவருள் நாடி, அவனையும் அவன ருள் பெற்ற பெரியாரையும் பாடி, உய்திதேடுதலன்றிப் பொய்ம்மையாளரான உலசமாந்தரைப் பொருட்பேறு கரு திப் பாடுதல் பெருங் குற்றமாம்.

> 'பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்
> புலவீர்காள்''

என்று சமயாசாரியரும்,

> ''ஒழிவொன்றில்லாதபல்லூழிதோறூழிநிலாவப்போம்
> வழியைத்தருநங்கள்வானவரீசனிற்கப்போய்க்
> கழியமிகுநல்லவான்கவிகொண்டுபுலவீர்கா
> ளிழியக்கருதியோர்மானிடம்பாடலென்னவதே''

என்று ஆழ்வாரும் பணித்தருளினார்.

இனித் தஞ்சமய நன்மைநாடும் புலவர் நியாயநெறி யானே அதனைப் பரிபாலனஞ் செய்க. சமயாபிமானங் கொண்டு குதர்க்க சமயவாதம் ஒரு ஞான்றுஞ் செய்யற்க. சமயங்களெல்லாம் ஒரு முதற்கடவுள் ஆணையின் ஒவ்வோர் வகுப்பினராகிய அதிகாரிகள் பொருட்டுத் தோற்றுவிக்கப் பட்டு நிலைபெறுவனவாதலின், குதர்க்கத்தால் தஞ்சமயம் நாட்டிப் பரசமயம் நிந்தித்தல் குற்றமாம். சமயங்கள் ஒரு முதல்வன் ஆணையிற்றோன்றிச் சோபானமாய்த் தாரதம மியமுற்று நிலைபெறுமாறு "ஞானமிர்தம்'' என்னுங் கிரந் தத்தில் விரித்துக்கூறினும்.

இன்னும், இக்காலத் தமிழ்ப்புலவர் சற்புத்திரர்ப் பெற்று, அவரைக் கல்வி யறிவுடையராக்கி, குடும்பபாரம்

அவர்மேல் இறக்கிவிட்டு, பிரவஞ்ச வைராக்கியமுற்றுத் துறந்து, மெய்யுணர்ந்து அவா வறுத்துப் பரவீடுபேறு கூடுமெண்ணஞ் சிறிதுமிலராய்,

"சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறும்—இற்செறிந்து"

மக்கள் மனைவி ஒக்கற் பற்று முறுகி, அவாநெறிப் படரும் நீரராவர்.

"அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு"

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்"

என்று நாயனார் அருளிச்செய்தலின், விடாதுவந்த இருவகைப்பற்றும் விடற்குத் துவரத்துறந்து பற்றற்றான் பற்றினைப் பற்றுதல் ஒருதலையாற் செயற்பாலதென்க. நன்மனச் சனகனாதியரும் மந்திரி முதலியோர்மீது பூபாரம் வைத்து ஏகாந்தம் மருவியே நிட்டை கூடிப் பற்றறுத்துச் சீவன்முத்தர் ஆயினாரெனின், பரவீடுபேறு மனைவாழ்க்கை துறந்து, விரதம்பேணி, ஏகாந்தம் மருவி, மெய்புணர்ந்து, அவாவறுத்தார்க்கே உளதாவதென்பது துணிபாம். இங்ஙனமாகலின், நிலையாமைநாடி, நெஞ்சிற்றுறந்து, மெய்யுணர்ந்து, அவாவறுத்து, செம்பொருள் ஞானச்செல்வராய் வாழ்தலே ஒருநன்மகனுக்குக் கல்வியறிவின் முக்கியப்பயனென்பது கடைப்பிடியாயிற்று.

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்"

என்றெடுத்து அருளிச்செய்தலின், நெஞ்சிற் றுறந்ததென்றாம்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்"

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

# அசம்பிரேக்ஷிய காரித்துவம்.

## (ஆராயாது செயல்)

---

சோமசருமன் அரையன் மக்களை நோக்கி, "யாவனொருவனுடைய தீச் செயல்களைக் கண்ணுற்றாயினுஞ் செவியுற்றாயினும் அறிவுடையோன் அதைப் புரியலாகாது. அங்ஙனமாகையில் வெள்ளறிவ னென்னும் பெயரிய ஒரு மயிர்வினைஞன் மணிபத்திர னென்பானது கருமங் கண்டுழித் தேறாமல் அங்ஙனம் புரிந்து இடருற்றனன்'' என, அதைக் கேள்வியுற்ற இளங்குமார் "அஃதெவ்வாறு? இயம்புதி" என வினவ, ஆசிரியன் உரைப்பான்:—

அவாசிக் கண்ணதாய பைடணபுரி வாசியாகிய மணிபத்திர னென்போன் நன்னெறி பற்றி யொழுகலான் உளதாய நல்குரவாற் பரிபவமுற்று, இவ் வறுமை கெட்டது, சிச்சி! தயை சாந்தி முதலாகிய குணங்கள் பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத் தோன்றுகின்றன என்று கணந்தோறும் ஆகுலித்துக் குடும்பப் பாதுகாப்பின் ஏக்கத்தினல் அறிவு மழுக்க மடைகின்றது, தானிய முதலிய பொருளிலான் வீடு இடுகாடொக்கும், அவன் கல்வி முதலிய குணச்சிறப் புற்றோனாயினும் மனித ரெண்ணிக்கையினுறான், இங்ஙனம் பலவகைத்தாய கவற்சி மிடிமையினலெய்துகின்றது, ஆதலால் பட்டினியிருந்து உயிர் துறப்பல் எனத்துணிந்து கண்வளர்ந்தான். பதுமநிதி நீத்தோன் வடிவமாய் அவன் கனவி லடைந்து, "யான் உன் ஒழுக்கத்தால் கட்புலனாக நாளை இவ்வுருவத்தோடு வருவேன், அப்போழ்து என் சென்னிமேல் தண்டத்தாற் புடைப்பையாயின், யான் குன்றாப் பொற்குவை யாவேன்" எனக்கேட்டு,

அவன் துயிலொழிந்து, இக் கனவு உண்மையோ, அன்றேல் இஃது எப்போழ்தும் எனக்கு உளதாய பொருட் சிந்தையின் தோற்றமோ, என் றிவ்வனம் மறுநாட் கருதிக்கொண்டிருக்குங்கால், இரவிற் கண்டாங்குவந்த அந் நீத்தோனைக் கண்டு, நிகழ்ந்த கனவு மெய்யெனத் துணிவுற்று, அவன் சிரமேல் ஓர் தண்டங்கொடு தாக்க, அவன் பொன் மயமாய் ஒளிவிட்டு நின்றமையால், ஒன்றிற் பொதிந்து வீட்டில் வையாநிற்புழி, அவன் இல்லாட்கு நகங் களைந்துகொண்டிருந்த மயிர்வினைஞனை நோக்கி, 'உனக்குச் சிறிது அருத்தந் தருவேன், இவ்வற்புதத்தை எங்கணுஞ் சிறிதும் புலப்படுத்தற்க' என வற்புறுத்தி விடுக்க, அவன் 'அந் நெறி நிற்பல்' என மேற்கொண்டு வீட்டிற் சென்று அறிவின் சிறுமையால் தன்னுள் ஆராய்வானாயினான். வைகறையில் ஒரு துறவியை யழைத்து வந்து அன்னோன் மண்டையிற் கோல்கொண் டறையின் அவன் சுடர்விரி பசும் பொன்னாவன் எனத் தேறி, மற்றைநாள் துறவிகள் குழுவிற்சென்று மிக வணங்கி, 'நீவிர் எத்திறத்தோர்க்கும் அறிவுணர்த்திக் கரை யேறுறுநிற்கின்றனீர், மற்றும் எவ்வெவர் இல்லத்தும் பிச்சைக் கேகாநிற்கின்றீர், ஆதலால் இத்தினம் நாயினேன் சிறு குடிலுக்குத் தேவரீர் திருக்கூட்டத்தோடு எழுந்தருள்வீராக' என, அவர்களில் தலைவன் இம் மாசுதீர்ப்போனை நோக்கி, 'நாடோறும் அந்தணர் உன் மனைக்கு வாரா நிற்க, நீ இற்றைக்கு எமக்கு ஏன் இயம்புகின்றனை? அவ் வேதியரையே யழையாய்' என, அக்காலை நாவிதன் 'நும்மாட்டுப் பேரறச்செயல்கள் இருக்கின்றமை யான் அறிகின்றேன், ஆதலால் நீவிர் என் வேண்டுகையை எட்டுணையும் மறாமல் திருவுளம் வைத்தருள்வீர்' எனப் பணிவாக மொழிந்து, அவன் கரத்தைப் பற்றி இல்லிற் கொடுவந்து அம் முனியின் கபாலத்தில் உலக்கையாற் சாத்தினவளவில், அவன் களைத்து நிலத்தில் அடியற்ற பனைபோல் வீழ்ந்தனன்.

இதற்குள் தபசிக்குழாம் வந்து மெய்ம்மறந்து கிடக்கின்ற வனைப் பார்த்தவளவிற் பேரிரைச்சலிட, இக் கலி பலியை அவ்வூராள்வோன் காவலாட்கள் கண்டு, ஆண்டு எய்தி, அந் நாவிதனைப் பிணித்துத் தந்தலைவன்பாற் கொடுபோய் விட, அவ்வூராளி மஞ்சிகனை நோக்கி, 'இஃதென் செய் தனை!' என உறுக்கி வினவ, அம் மங்கலன், 'மணிபத் திரனகத்துக் கண்டாங்கு யான் செய்தனன்' என, அத் தலைவன் அவ் வணிகனை விளித்து, 'உன்பால் நிகழ்ந்த தென்னையோ?' என, அவன் ஒன்றும் உரையாதிருந்தனன். அதன்மேல் அதிகாரத்தலைவன் அம்பட்டனைப் பார்த்து, 'இவன் ஆராயாமல் இக் கருமம் புரிந்தன னாதலால் இவ னைக் கழுவேற்றுக! இங்ஙனம் முன் ஒரு பார்ப்பினி பராம ரிசியாம வியற்றின கருமத்தால் கீரியைக் குறித்து ஆகு லித்தாள்' என, மணிபத்திரன் 'இஃதெங்ஙனம்? அருள் வாய்' என, அவ்வூராளி சொல்வான்:

## கதை - 1

'உச்சயினிபுரத்தில் வதிந்த தேவநாம வேதிய னொரு வன் மனைவியோடு இல்லற நடாத்து நாளிற் குழவியில்லாக் குறையால் இருவரும் ஒரு கீரிப்பிள்ளையை மைந்தனைப் போற் கருதி வளர்ப்புழி ஒரு மக வுண்டாயிற்று. மனைவி அம் மதலையை ஓர்நாள் தூங்குவித்துக் கணவனைப் பார்த்து, "யான் உதகத்தின் பொருட்டுச் செல்லாநின்றேன், நீர் நங் கான்முளையைப் பார்த்திரும், ஒருவேளை கீரி கடிக்கும்" என் றிங்ஙனம் வகுத்துத் தண்ணீர்க்குச் செல்ல, பின்னர் அக் குழந்தை தொட்டிலிற் கண்வளர்ந்தது. அவ் வந்தண னும் ஒரு தடாக்கரும வயத்தனாய்ப் புறஞ்செல்ல, அத் தருணத்தில் ஒரு கிருஷ்ண சருப்பம் பிலத்தினின்றும் புறம் போந்து தொட்டிலின்மேற் செல்லாநிற்கக் கண்ணுற்ற நகு

லம் அதை அக்கணமே விரைந்து பற்றி உதறிக் கொன்று பல கண்டங்கண்டு குருதியாற் பூசுற்ற முகத்துடனே தினது ஆற்றலைக் காட்ட விரும்பி விரைந்து துவாரமுகமாக வருகையில், வந்த பார்ப்பினி செந்நீரால் நிறைந்த அதன் வதனத்தைப் பார்த்தவளவில் அது தன் பிள்ளையைக் கடித்து மடித்ததென்று உள்ளித் துள்ளித் துணுக்குற்று நீர்க்குடஞ் சிதைவுறும்படி அதன் தலைமேற் போட்டுக் கொன்று உடனே உட்புகா நிற்கையில், மகன் உறங்குதலையும் அருகே கரும்பாம்பின் துணிக்கைக் குவையையுங் கண்டு, 'அந்தோ! கெட்டேன், யான் என் அருங் குழவியை நன்காராய்வின்றிக் கொலைசெய்தேனெனச் சோகமுற்றுப் புலம்பா நிற்புழி அவள் தலைவன் ஆண்டு எய்தி, "குழந்தை இதோ இருக்கையில், நீ வெறுமையென மகவிழந்தே னென்று, ஏன் கதறிக் கலுழ்கின்றனை? என்னடி பேதாய்!' என, மனைவி "நீர் யாதோ பேரவாவால் என் மொழி தள்ளிப்போனமையால் அதன் பயன் இதோ வாய்த்தது, இது மிக்க அவாவினன் முடிமேற் சக்கிரஞ் சுழன்றதை யொத்தது' என, அவன் 'அஃதெவ்வண்ணம் உரைத்தி?' என அவள் உரைப்பாள்:

## கதை - 2

"அமராவதி நகரத்து இன்புற்றிருந்த வேதியர் நால்வர் மிடியால் துன்புற்று, இப்போழ்து நாம் அடைந்த பொருளின்மையை இன்மையாக்கும் இடம் நாடிச் செல்வோமாக, பொருளில்லார்க்கு வனநடு வதிதலினும் இன்பில்லையென்றிங்ஙனம் கடைப்பிடித்து நால்வரும் மறுதேயம் போகா நிற்கையில், க்ஷிப்பிரா நதிக்கரை யணித்தாகப் பைரவாநந்தி யென்னும் யோகி யொருவன் எல்லாம் வல்லோனாய் வீற்றிருக்கின்றனனென அறிந்து, அம்மடத்தில் அவனு

மைச் சென்று இயன்றமட்டும் பூசிக்க, அத் துறவி இவர்கள் வழிபாட்டிற் கிரங்கி 'உம் வரவின் காரணமேது?' என, 'அவர்கள் அடிகளே! எம்மை நலிகின்ற நல்குரவைத் தொலைப்பான் மிக்க பொருள் விழைவால் எம் நாடு துறந்து புறம் போந்தனம்; பொருட்குவை துணிவின் செய்கையாலன்றி எய்துவதன் றாதலின் இதன் நிமித்தஞ் சாந்துணையும் முயலவேண்டுமென்று துணிந்து ஈண்டு நுஞ் சரணடைந்தேம்; இனித் தேவரீர் எம் விழைவை முடிப்பீர், மறுப்பீரேல் எம்முயிரை நும்பால் விடுக்குதும்' என, யோகி இவர்கள் பரபரப்பையுங் கடைப்பிடியையும் உணர்ந்து நான்கு சித்தியைச் சிந்தித்து அன்னோரை நோக்கி, 'நீவிர் இமயகிரி நெறிபற்றிப் பிசகாது போமின், போவுழி எவன் வர்த்தி யாண்டு விழுமோ அவற்கு ஆண்டுச் சித்தியாம்' என்றுரைத்து அவர்கள் தலைமீது நான்கு திரிச்சீலைகளை வைத்தபின், அப் பொன் விருப்போர் அங்ஙனம் அவனாணையைச் சிரமேல் தாங்கி இமயமலை யிடத்திற் போகச் சிறிதாறு சுடக்கையில் ஒருவன் வர்த்தி வீழ்ந்தது. அக்காலை அன்னவன் அங்குத் தொட்டுப் பார்ப்புழித் தாமிரக்கனியாயிருக்க, அவன் தனைவிட்டு நடந்த ஏனையோரை நோக்கி, 'மித்திரரே! நும் அவாக் கெடத் தாமிரங் கொண்மின்' எனக் கேட்டு, மூவரும் 'பேதாய்! இதனால் என்ன பயன்? இஃது எத்துணை பெறினும் நம் மிடிமை எட்டுணையும் அகலாது; ஆதலால் யாம் முன் செல்லுதும் என உரையாடி முற்செல்லா நிற்க, அவன் தன் ஆற்றலளவு செம்பு வாரிக்கொடு வந்த நெறி சென்றனன். பின்னர் முன்னர்க் கூறிய அம் மூவரும் ஒரு கூப்பாடு செய்மை போவுழி அங்கு ஒருத்தன் தலைத்திரி வீழ, அவன் அங்ஙனந் தொட்டு மற்றோரை நோக்கி, 'இவ் வெள்ளிகளைக் கைக்கொடு மீள்வோம்' என, அவ்விருவரும் 'முற்படப் பொற்குவையிருக்குமாதலால் யாம் போகுதும்' என, அவர் போய பின் அவ

னும் வெண்பொன் னிராசியிற் றன்வலிக்கியன்றன சுமந்து சென்றனன். பின்பு அவ்வெஞ்சிய இருவரும் நடக்கையில் ஒருவன் சிரத்திரி நிலத்தில் வீழ்வுற, அவன் தோண்டிக் காண்புழிப் பொற்றிரள் இருந்தமையால் அவன் களிப்பின் பெருக்கில் அமிழ்ந்தினவனாய்; 'நண்பனே! நம் இச்சைமட்டுஞ் சொன்னத் திரட்கொடு செல்லுதும் வருதி' என, அப் பேராசைப் பேதை 'அறிவிலாய்! முன்னே மணித்திரளிருப்பனவாம், ஆதலால் நான் செல்வல்' என, பின்பு அவன் 'யான் இச் செம்பொன் ஏற்றுக்கொண்டு உன் வரல் நோக்கிக் கொண்டிருப்பல், நீ விரைவில் வருதி' என, 'அங்ஙனம் ஆக' என் றகன்று வெயிலின் வருந்திப் பசி நீர் வேட்கையாற் சித்தி நெறி தப்பி இவன் அவண் உழல்கையில், அங்கொரு மனிதன் தலையில் ஒரு சக்கிரஞ் சுழலவும் அவன் உடலெங்குஞ் செந்நீரால் மூழ்கி யிருக்கவுங் கண்டு, அவனை நோக்குற்று, 'நீ யாவன்? உன் தலைமேல் இந்நேமி சுழல்வதென்னை?' என் றிம்மாற்றம் வினவுபவளவில், அவ் வாழி இவன் உச்சிமீது வந்திருந்தது. இவன் துணுக்குற்று, இஃதென்னை? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போ லாயிற்றெனக் கவலை யுற்று, 'இந் நேமி என் மத்தகத்தின்மீ துறுவ தென்னை?' என,

முன் சக்கிரி: 'இதுகாறும் எனக்கு அநுபவமிருந்தது; இக் காலையில் மற்றொருவன் சித்தித்திரியோடெய்தி உசாவுவன், அப்போழ்து, இவ்வாழி அவன் தலையைப் பற்றிக் கொளுமென் றெனக்குக் குபேரன் வரமிருக்கின்றது' என,

சக்கிரத்தலைப் புதியோன்: பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல் எனக்காயிற் றென்று தன்னிற் கவன்று நெட்டுயிர்ப்பெறிந்து, பண்டைய நேமித் தலையனை நோக்கி, 'நீ இங்கெய்தி எத்துணை நாளாயின? விளம்புதி' என,

முன் சக்கிரி: 'எனக்குக் காலவரையறை தெரியாது, இராமன் அரசியற்றுங் காலையில் நான் மிடிபட்டு இங்கு இச் சக்கிரத்தாற் பிடிபட்டனன்' என,

வேதியன்: அதைக் கேட்டு, 'ஈங்கு வல்சி நீர் தருபவரெவர்?' என,

பூர்வ சக்கிரி: 'பசி தாகம் இவ்வுழி வருத்துதலில்லை, முழுதும் இத்துன்பே நுகரவேண்டும், இது நிதிக்கோன் நிதியைக் கவர்வான் வருபவர்க்கு அச்சுறுத்தும்பொருட்டு வைத்திருக்கின்றது. இவ்வச்சத்தால் ஒருவரும் இங்கு வாரார்' என் றிங்ஙனம் நிகழ்வன யாவுஞ்சொல்லி, 'இப் போழ்து என் மெய்க்கு ஆற்றப்பெறுத வேதனை யுளதாயிற்று; ஆதலால் நான் செல்வல் எனச் செல்வுழிச் சென்றனன்.

பின்னர் முன்கூறிய சுவர்ணசித்தி, சொல்லி யாங்கு நெடுநேரம் இவன் வருநெறி நோக்குற்றிருந்துங் காணுமையால் தேடி வந்து இவன் சென்னியிற் சக்கிரஞ் சுற்றுகின்றமை கண்டு ஐயுற்று அருகெய்தி, 'நண்பனே! இஃதென்னே! என்னே!' என, அவன் 'இது பேராசையின் பயன்' என, சுவர்ணசித்தி, 'ஓகோ! இது பிள்ளை வரத்துக்குப் போனவிடத்திற் புருடனைப் பறிகொடுத்தாற்போ லாயிற்றே' எனச் சற்றுக் கலங்கிப் பின், 'வெள்ளறிவோர்க்குக் கல்விப் பயிற்சி சிறிதுளதாயின் பிறனறிவைக் கேளாது செத்த சிங்கத்தை யுயிர்ப்பித்தவர்போற் கேடுறுவார்கள்' என, அதைக் கேட்டுச் சக்கிரதரன் 'அஃதெங்ஙனம்?' என வினவ, பொன் வாய்ப்பினன் இறுப்பான்:

## கதை - 3

'துளசாபுர மென்னும் மூதூரில் நால்வர் ஒரு சாலை மாணுக்கராய்க் கல்வி பயில்கையில், அவர்களில் மூவர்க்கு மந்திரவித்தை கைவர, அப்போது அவர்கள் "அரசனை யடுத்துப் பெரும்பொரு ளீட்டுதலன்றோ வித்தை யுணர்ச் சிக்குப் பயன்!'' என, அது கேட்டு அவருள் ஒருவன், 'வாருங்கள், நம்முள் இவ் வொருவன் கல்வியறிவிலன், இவற்கு ஈட்டும் நம் பொருளிற் கூறு கொடேம், ஆதலால், இவன் இந்நொடியிற்றானே தன் இல்லத்திற்கு ஏகற்பாலன்" என, அதைக்கேட்டு மற்றொருவன், "இவன் கல்வி கல்லா னாயினும் இளமை தொட்டு நம்மோடு விளையாட் டயர்ந்தோ னாயினன், அன்றியும் நம்மினும் உலக நடையில் தேர்ந்த வன், அரசன்மாட்டு உலக நடை யறிந்தவனிலுங் கல்வி மாத்திரம் பயின்றோன் புகமெய்தான், ஆதலால் இவற்கு நாலிலோர் கூறு கொடுக்குதும்'' என, அதை எவரும் ஒப் பிப் பின்பு நால்வரும் வேற்றுத் தேயம் நோக்கிப் போவுழி, அங்கே ஓரடவியில் உயிர்நீத்த அரிமாவொன்று கிடந்தமை கண்டு, ஒருவன் "நாம் பிழைப்பிக்கக் கற்ற வித்தையை இவ் விறந்ததன்பால் இயற்றித் தெளிவோம்" என, அதை உலகநடை வல்லோன் கேள்வியுற்று, "இவ்வரிமாவைச் சீவிப்பிப்பின் இஃதெல்லோரையுந் தின்னுது விடாது; இதன்பாற் பரீக்ஷை செயல் ஒழியற்பாலது" எனப் பல வகையால் மறுத்தனன். அம் மூவரும் அந் நன்மொழியை யெறிந்து செருக்கினுல் அச் சிங்கத்தை யுயிர்ப்பிக்கத் தொடங்க, மற்றவன் "இத் தகுதியில் செயற்குச் சதுர னுவான் சேய்மையாகற் பாலன்" என் றுரைத்து, நீளப் போய் ஒரு நெடுமரத்தின் மிசை யிருக்க, பின்னர் இவர் கள் அம் மறவிலங்குக்கு உயிர்தந்த மாத்திரத்தில் அது மூவ ராவியையும் வாங்கிற்று. ஆகலாற் கல்வியினும் அறிவு

பெருமையது' என, அப்போது சக்கிரி 'இது காரணமன்று; அறிவுடையோன் வீட்டிற் பல காப்பு அமைத்திருப்பினும் நாச முறுகின்றான்; பேதையாயினான் காட்டகத்தில் தனித் திருந்தும் உய்கின்றனன்; முன் ஆயிரம் புத்தி மல்லாந்த தையும், நூறு புத்தி தொங்கினதையும், ஒரு புத்தி நீரில் விளையாட் டயர்ந்ததையுங், கேட்டிலேயோ?' என, பொன் வாய்ப்பினன் 'அஃதெவ்வாறு? அறைதி' என நேமிதிரி தலையன் விடை விடுப்பான்:

## கதை - 4

'மகத தேயத்தில் ஒரு மலர்ப் பொய்கையில் அறிவா யிரத்தன், நூறறிவன் என்னு மிரண்டு மீனங்கட்கும் ஓர றிவ னென்னுந் தவளைக்கும் நட்புளதா யிருக்குங் காலை யில், ஒரு திவசம் ஆண்டு வலையனொருவன் வந்து, "பிற்றை ஞான்று ஈண்டுள கொழுமீன்களை வலையெறிந்து கவர்வே னுக" என்றுரை கூறி யிறந்தமையை யறிவுற்ற அம் மண் டுகம், தன்னுற்றார்க கறிவுறுத்துழி, அறிவாயிரத்தன் "நான் நீர்நடை பலவுங் கற்று வல்லேன்" என, நூறறி வன் "யாம் நிலைபெயர லாகாது, யாது ஆகற்பாலதோ அஃதீண்டே யாருக" என, அதைக் கேட்ட தவளை "வாரீர் நட்டோரே! நான் இதோ போகின்றேன், நீவிரும் நடமின்" என, அவ்விரண்டும் "நீ ஓரறிவ னுகின்றனை, ஆதலாற் போவையானுற் போ, யாம் வருவே மல்லேம்" என, பின் அத்தவளை தன் குழுவோடு வேறிடம் போயிற்று. மறு நாள் செம்படவன் வீசிய வலையிற் சிக்கிய பற்பல மற்சி யங்களோ டகப்பட்ட அறிவாயிரத்தனைத் தலைமேற் சுமந் தும், நூறறிவனை வாலைப்பற்றியும் நடக்கையில், இதை ஓரறிவன் கண்டு தன் பெண்டிரை நோக்கி, "அறிவாயிரத் தனுக்கும் நூறறிவனுக்கும் இங்ஙனங் கேடெய்திற்று,

நான் ஓரறிவன் நீரில் விளையாடுகின்றேன்'' எனக் குதூகலத்தோடு சொல்லிற்று. ஆதலால் மிக்கறிவோனுக்கும் ஊழினால் இவ்வணந் துன்புளதாம்' என, பொன்வாய்ப்பினன் 'நீள்செவியன் நன்மதி தடா நிற்கையில் இசைபாடிக் கட்டுண்டாற்போல் உனக்கு இப்பேரிடர் உளதாயிற்று' என, சக்கிரதரன் அஃதெங்ஙனம் நிகழ்ந்தது? உரை' என, சுவர்ணசித்தி சொல்லுவான்:

## கதை - 5

'நெடுஞ்செவியன் சுமதி யென்னுங் கழுதை நரிகளிரண்டும் இடைவிடாமல் ஊரினர் பைங்கூழை மேய்ந்து வனத்தில் தங்குழி, ஒருநாள் விலாப்புடைக்கத் தின்று இரண்டுந் தேக்கெறிந்து குந்தியிருக்கையில், நெடுஞ்செவியன் "இந் நிலவெறிக்கும் இரவில் எனக்குப் பொழுது கழிவின்று, ஆதலால் யான் கானஞ் செய்வேன்'' என, சுமதி "நீள்செவியா! நீ பாடற்க, உழவர் உன் குரலைக் கேட்டுத் துயிலொழிந்து உன்னைப் புடைப்பார்கள், மௌனமாயிரு'' என, நீள்செவியன் ''உனக்கு இவ்விசையைக் குறித்து உணர்வின்மையால் என்னைத் தடுக்கிறாய்'' என்று அந் நரியை வைது தன் பெருங்குரல் முழுதுந் திறந்து பாடிற்று. அப்போழ்து அவ்வுழுநர் விழிப்புற்று அக் கழுதையைக் குண்டுருட்டாய்ப் பிணித்து நையப் புடைத்தனர். நரி அதைக் கண்டு ''மாமா! என் மொழி தள்ளி இசைபாடினமையால் இப் பயன் அடைந்தனை'' என்று இகழ்ந் துரைத்தது'' என, சக்கிரதரன் 'நன் மொழி வினவியும் மந்தரனெனுந் தந்துவாயன் மரண முற்றனன்' என, பொன் வாய்ப்பினன் 'இஃதெவ்வண முளதாயிற்று? இயம்புதி, என, சக்கிரி சொல்லுவான்:

## கதை - 6

'நாராயண நகரத்தில் மந்தரனென்னுந் தந்துவாயன் பல்வகைப்பட்ட வத்திரம் நெய்து வரும் ஊதியத்தால் மனைவியோடு உண்டுடுத்துக் காலந்தள்ளி வருகையில், அவன் தறி முறிந்தமையால் மரம் வேண்டுற்றுக் காட்டிற் புக்கானாகித் திரியாநிற்கையில், ஒரு பெரிய வாகையைப் பார்த்து வெட்டத் தொடங்குழி, அதன்மேலிருந்த யக்ஷன் "இவ் வென்னிடத்தை வருத்தாதே, நீ விருப்புற்றதை வெறுப் பின்றித் தரா நிற்பேன்" என, சாலியன் "நான் என் இல்லம் புகுந்து எவரையும் உசாவி அவர் சொன்ன வண் ணங் கேட்பேன்" என்று அவ் வண்ணம் வீடு நோக்கி வருங் கால், நெறியில் எதிர்ந்த மித்திரனும் நாவிதனை, "என் செய்வது? இயம்புதி" என, அன்னோன், "நீ இராச்சியங் கேள், நீ அரசும் நான் அமைச்சு மாவோம்" என, அதைக் கேட்டபின் அந் நடந்த செய்தியைத் தன் மனைவியாகிய சாலிச்சிக்குத் தெரிவிக்க, அம் மடந்தை, "இராச்சியத்திற்கு வரம்பில் இடையூறுகள் இருக்கின்றன வாதலால், அது கேட்கற்பாற்றன்று; வேறொரு வதனமும் இருகரமுங் கேட் டுப் பெறுவையாயின் திவசத்திற்கு இருசீரை நெய்தால் நம் இல்வாழ்க்கை செவ்வன் நடக்கும்" என, அதை மேற் கொண்டு மீட்டும் அவ் வனத் தரு வருகிற் சென்று அவ் வியக்கனை நோக்கி, "எனக்கு மற்றோர் சென்னியும் ஈபத் தமுந் தருதி" என, அவன் "அங்ஙனமாக" எனச் சொல் லியவளவில், வினையவாறு அடைந்து உவப்பெய்தித் திரு மிக் கிருகத்திற்கு வருகையில், மாக்கள் இவ் விபரீதத்தைக் கண்டு இஃது ஓரிராக்கதனென் றெண்ணுற்றுத் தலையால் ஒரு கல்லெறிந்து கொன்றனர். ஆதலால், வரற்பாலது பிழை யாதென்று உணர்வுற்று வல்லோர் வீணாசை கொள்ளார். அங்ஙனம் வீணெண்ணங் கொடு கிருபண னென்போன்

கேடுற்றனன், என, சொன்னசித்தி 'அஃதெவ்வாறாயது? இயம்புதி' என, சக்கிரதான் சாற்றுவான்:

## கதை - 7

'பண்டாரபுரத்திற் கிருபணசருமனென்னும் வேதியனொருவன் இரந்து வயிறு நிரப்பி எஞ்சிய தவசங்களைப் பெய்து நிரப்பிய பானையைச் சிக்கத்தின்மீதிருத்தி அதனடியிற் படுப்பன். இங்ஙனம் ஒழுகுகையில் ஒருநாள் கிடந்தவாறே, சிறுவிலைக் காலமெய்தின் இப் பண்டம் விலைப்படுத்தி அப்பொருட்கு ஒரு காராடு கொண்டு அது பல்கிய பின்னர் அவற்றை ஆவிற்கு மாற்றி, அவ்வாப் பெருகிய பின்னர் அவற்றிற்கு ஈடாக வாம் பரி கொள்வேன்; பின்பு அப் பரி குட்டிகள் ஈன்று விருத்தியாயபின் அவற்றை விற்று யான் செல்வமுடையனாவேன்; பின் ஒரு பார்ப்பனக் கன்னிகையை நாடி மணம்புரிவேன்; அம் மாதகட்டு ஓர் மகவுளதாம்; அது தவழ்கையில் யான் பெண்டிரை நோக்கி, அடி பெண்ணே! குழவியை யெடுவென்பேன்; அவள் பணி யூற்றத்தால் எடாள்; அப்போழ்து யான் அவட்கு இங்ஙனம் ஒருதை கொடுப்பல் என இங்ஙனம் எண்ணமிட்டு ஒருதை யுதைக்க, அவ்வுதை அரிசிப்பானையில் தாக்கி அஃதுடைபட்டு இருந்த பண்ட முழுவதும் கொட்டுண்டு இறைந்து பயன் பெறாதாயிற்று. ஆதலால் வீண்கற்பனை கற்பித்தலாகாது' என, அதைக் கேள்வியுற்ற பொன் வாய்ப்பினன் 'உன்மீது குற்றம் யாது? இது பற்றுள்ளத்தின் பெருமை. கிருபணத்துவத்தினாற் சந்திரசேனராசன் மிகத் துன்புற்றன்' என, சக்கிரதரன் 'அஃதெங்ஙனமாயது?' என, சுவர்ணசித்தி சொல்லுவான்:

## கதை - 8

அயோத்தியா நகரத்திற் சந்திரசேன னென்னும் அரையன் தன் மகன் வலிமுகத்தோடு ஆடலயர்வதில் மிக்க வேட்கையுற்றமை கண்டு பற்பல வலிமுகங்கொணர்ந்து சாலையில் வளர்ப்பிப்புழி, அங்கு மடையனுக்கும் குற்றேவல் செய்வோர்க்கும் பகை மூண்டமை யறிந்து அவற்றுள் ஓர் சதுரப்பாடுடைய முசு, "இவண் கலாம் நிகழ்ந்திருக்கின்றமையால் இவ்விடந் துறந்து காட்டகம் புகுவேம்'' என, அதைக் கேட்ட வானரக் குழு "நீ மூத்தமையால் அறிவிழந்து பலபலபடி பிதற்றுகின்றாய், இங்கு அரையனையடுத்துப் பலவண்ண உண்டிகளுண்டு குழீஇ யிருந்தேம். இந்நலத்தை வலிய வீசி வனத்தில் தழைதின் றுழல்வது நன்றன்று. யாதொன்று எய்தற் பாலதோ அஃதிங்ஙனே எய்துக'' என, இம் மொழிகேட்டு அக் கிழக் குரங்கு தன் குடும்பத்தோடு வேறிடம் புக்கது. பின்னர் ஒருநாள் பணி செய்வோன் மடையனைக் கரதண்டத்தால் ஓச்சி யெறிந்தமையால் அவன் அவனை எரிகொள்ளி கொண் டெறிந்தான்; அக் கனற்பொறி வைத்தூற்றிற் பற்றிக் குதிரைச்சாலை யாவற்றினும் மூண்டு அதனகத்துள பரிகளிற் சில எரிந்திறந்தன, சில உடற் பாதிகரிந்து வீழ்ந்தன, சில கண் முதலிய உறுப்புகள் வெந்தன. இச் செய்தி அரசனறிந்து அக்கணத்திற் குதிரை மருத்துவரைக் கூய், "அவ் வெசுவ வேக்காடு ஒழிதற்கு எது செய்யலாவது?'' என, அவ்வா மாத்திரர் "குரங்கு நெய்யாலன்றிக் குணமுறாது'' என, அண்ணல் உடனே ஏவல் புரிவோர் ஆனனம் ஏறிட்டு, "இவ் வானரக் குழுவைக் கொலைசெய்து இப் பண்டிதர் சொல்லியாங்குப் புரிந்து, குணமுறுவிமின்கள்" என் றேவ, அவர் அன்னவாறு செய்தனர். இதை அம் முதுகடுவன் அறிந்து, பெரிதும் வருந்தி, இப்பழி வாங்குவேன் என் றுறுதி

செய்து, காட்டகத்துத் திரிதருகையில், வழியில் மிகப் பொலிவுள்ள ஒரு பெருஞ்சரசைக் கண்டு இக் குளத்தகத்து மக்கள் நட்பின்மையின் இவண் ஒரு பெரும்பேய் இருக்க வேண்டுமென்று உள்ளிச் செய்மைக்கணின்று ஒரு தாமரைத்தாளைப் பிடுங்கி அதன் நாளத்தினால் நீரை உறிந்து குடித்தது. இதை ஆண்டு வதிந்த கணம் கண்டு, அதினின்று மர்க்கடத்தின் அருகுற்று, "உன் சதுரப்பாட்டை மெச்சி நான் பிரசன்னமாயினேன், இவ் வென் மணி வடத்தை ஏற்றுக்கொள்!" எனத் தன் களத்தின் மாலையைக் கழற்றிக் கொடுத்தது. அப்போது குரங்கு பிசாசத்தை, "உதகத்தில் உனக்கு வலி எவ்வள விருக்கின்றது?" என, அப் பைசாசம் "ஆயிரம் பெயர் ஒருங்கே நீரில் இறங்கினும் அவரைப் புறம்போக வொட்டேன்" என, இதைக் கேட்ட வலிமுகம் "உனக்கு நிரம்ப உணவு கொடு வருவல்" என்று அவ் விரத்தின மாலையைக் கழுத்தி லணிந்து கொண்டு, சந்திரசேன வரையன் பதிபுக்கு அவனைத் தரிசித்து, "சுவாமி! உம் சோறு நெடுநாள் உண்டு வளர்ந்தேன், ஆதலால் உம்மைக்காண வரலாயினேன்" எனப் பணிந்து சொல்ல, அரையன் "இவ் வரதன வடம் உனக்கு யாங்குக் கிடைத்தது" என, வானரம் "சுவாமி! காட்டில் ஓர் மலர்த் தடம் இரா நின்றது, அதில் வைகறையிற் குதிப்பவனுக்கு இன்ன மணிகள் அகப்படுகின்றன" என, அம்மொழி கேட்டுத் தோன்றல் "யான் அங்கெய்துவல்" என, வானரம் "மிகவும் நன்கு" எனத் தாழ, பின் மன்னன் சேனைக் குழாஞ் சூழ வானரத்தின் பின்சென்று அச் சரசின் அணித்திறுத்தான். பின்னர் அக் கங்குல் கழிந்து விடியற்காலையில் சாகாமிருகம் எழுந்து ஏந்தலை யெழுப்பி நோக்கி, "நுமக்கு அரதன விருப்புளதேல் இதுவே நற்பருவம்" எனக் கேட்டு, அரையன் காலாட்களோடு தடத்திற் செல்லா நிற்கையில், வானரம் அவனைப் பார்த்து, "எல்லோருந்

தடத்தகம் புக்கு மணிகள் வாரிக்கொண் டெய்தியபிற்றை நாம் இருவரும் புக்கு அம் மணிகள் கொள்ளுதும்'' என, அவன் ''அங்ஙனமாக'' எனப் போக்கிய பதாதிகள் வாவியிலிறங்கின மாத்திரையில் அப் பாரிடம் அவர்களை அந் நீரில் அமிழ்த்திச் சோக் கொன்றது. பின்பு சந்திரசேனன் ''சேவகர்கள் சென்று நெடுநேரஞ் சென்றது, இதுகாறும் எய்தவில்லை, என்?'' என்று பிலவங்கத்தைக் கேட்க, அது வானுறவோங்கிய ஒரு மர நெடுங்கிளையிற் பாய்ந்தேறி அரசை நோக்கி, ''நீ என் குலமுழுதையுங் கொல்வித்தாய், ஆதலால் அக் கடனை நான் இங்ஙனங் கைக்கொண்டேன்; நீ எனக்கு அன்னந் தந்தமை பற்றி உன்னை உய்வித்தேன்'' என, இப் பேச்சைக் கேட்டு அண்ணல் இரங்கி அத்தியாசை கொண்டு முயலுங் கருமங் கேட்டைத் தராநிற்குமென்று உள்ளினவனாகக் கோயிற் புக்கனன். அங்ஙனமாய கருமம் நீ புரிந்தமையால் அஃதுனக்கு இத் துன்பம் பயந்தது. நல்லது இனி யான் ஏகுவன்' என, அப்போழ்து சக்கிரதரன் 'குறைவுற்ற காலையில் நட்டோர் பயன்படுகின்றார்கள். அங்ஙனமாக, நீ எற்றுறந்து எவ்வாறகலுதி?' என, சுவர்ண சித்தி 'கள்வன் இராக்கதனைப் பிடிப்புழி வானரம் பேசினமையால் அது பிடிபட்டது, ஆதலால் நான் இவ் வாழியை யஞ்சுகின்றேன்' என, சக்கிரி 'இஃதெங்ஙனம்?' என, பொன்வாய்ப்பினன் சொல்வான்:

## கதை - 9

'மதுரைப்பதி காவலனாகிய பத்திரசேனக் கோமானுடைய இரத்தினவதி யென்னும் பெயரிய கட்டழகியாகிய மகளைக் கவரக் கருத்துற்று ஓரிராக்கதன் போந்து அற்றம் நோக்கிச் சின்னாள் திரிவுற்று அவ்வுபாய நடவாமை கண்டு ஒருநாள் பதிவிருக்க, அக் கன்னிகை அதுகண்டு அடுத்து

நின்ற தோழிமுகம் நோக்கி, உயிர்ப்பாங்கி! இவ் வரக்கன் என்னை எல்லு மெல்லியும் வருத்துகின்றனன். இதற்கு 'ஏதேனும் ஓர் சூழ்ச்சி செய்யவேண்டுவல்' என, அது செவிபுக்க இராக்கதன் இம் மாதைக் கவரும்பொருட்டு யாம் வந்திருக்கையில் இவ்வெண்ணங் கொண்டே எம்மினும் வலிய மற்றொருவன் வந்திருந்தால் என் செய்வேமென்று அச்சமுற்று அரையன் குதிரைச் சாலையில் ஒரு கலிங்க வுருக்கொண்டிருந்தனன். அங்ஙன மிருப்புழி, பரிமாக்கொடு போம் பொருட்டு, அவணுற்ற கள்வனொருவன், இஃது ஏனையவற்றினும் மிக நன்றாயிருந்தமை கண்டு, அதன் வாயிற் கலினம் பெய்து புறத் தீர்த்து வந்து, அதன்மீ தூர்ந்து வீட்டின்பால் நடாத்தா நிற்கையில், அஃது இங்கு மங்கு மோடத் தலைப்பட, சம்மட்டியால் அறைந்து பார்த் துஞ் செவ்வனே செல்லாமையால், அக் கள்வன், இது காறும் யாங்கண்ட பற்பல மாக்களில் இஃதொத்ததைக் கண்டோமில்லை, ஆதலால் இஃதேதோ கிருத்திரிமமா யிருக் கின்றதென் றுள்ளங் கலங்குறுகையில், அக் குதிரை தொன் மாத்தின்கீழ் ஈர்த்தோட, அப்போது மேலிருந்த கள்வன் விரைந்து ஆலின் வீழைப்பற்றித் தொத்தி அத் தருமீதேற, இராக்கதன் விளாசலுக் கஞ்சி யோடினன். அதைக்கண்ட அம் மரமீதிருந்த வானரம், "அடா! இவன் மனிதன், நீ அரக்கனா யிருந்தும் என் இரிகின்றனை?" என, அதைக் கேட்ட சோரன் வெருண்டு கீசகத்தின் வாலத்தைப் பற்றி வருத்த, அரக்கன் குரங்கு வஞ்சகமுளதென்றெண்ணி மீண் டும் விரைந்தோடினன். ஆதலால் அக் கவிக்கெய்திய இன் னல்போல் எனக்கும் உளதாமென்று இந் நேமியைக் குறித்து அஞ்சுகின்றனன்' என, சக்கிரி 'தெய்வம் எதிர்ப் பின் யாவரும் இங்ஙனம் இடுக்கண் அனுபவிப்பர் கேண்மோ, இலங்கேசன் திரிகூடாசல மொத்த மலையும், கடலொத்த அகழியும், தான் அரக்கனும் பேராற்றலுடையானும் சுக்

கிரன் குருவுமாக, இவ் வண்ணம் ஒன்றுக்கொன்று குறைபாடின்றி யிருந்தும், அவனை ஒரு குரங்கு அவமானத்தால் தலை தாழ்ப்பித்தது. ஆதலால், விதிவலிமுன் யாவன் சூழ்ச்சிவலியாயினும் யாது பயன்படும்? அவ்வூழ் ஒன்றியிருப்பின் தீயவும் நல்லவாய்விடும். இவ்வண்ணமே சிதடன் கூனன் முக்கட்பெண் இவர்கட்கு முன்னம் நேரிட்டதொன்று கேட்டிலையோ?" என, பொன்வாய்ப்பினன், 'அஃதெங்ஙனமோ? இயம்புதி' என, சக்கிரதரன் சொல்வான்:

## கதை - 10

மதுபுரக் காவலனாகிய மதுசூதனனென்பவற்கு முக்கட்பெண் தோற்றினமையாற் சோதிடம் வல்லோனைக் கூய், "இதற்குச் செயற்பால தென்?" எனக் கேட்புழி, சோதிடம் வல்லோன் "சார்வ பௌம! கேட்குதி, எவனாயினும் சொல்வதை முன்னர் நன்காராய்ந்து சொல்லவேண்டும்; அங்ஙனம் ஆராயாது சொல்லின் சண்டகருமன் கதிபோலாகும்" என, அரையன் "அவன் யாது உரைத்தனன்?" என சோதிடம் வல்லோன் சொல்லலுற்றனன்:

## கதை - 11

"தண்டகாரணியத்திற் சஞ்சரிப்போனாகிய சண்டகருமனென்னும் ஓர் இராக்கதத் தலைவன் அவண் நேரிட்ட ஓர் அந்தணன் தோள்மேலேறி நடத்திக் கொண்டு போவுழி, அவ் வேதியன் அவ் வரக்கன் அடிகள் மிக மெல்லியவாயிருப்பனவற்றைப் பார்த்து 'ஐய, அரக்கத் தலைவ, உன் காலடிகள் எப்படி மெல்லியவாயின?' என, அரக்கன் 'நான் நீராடி ஈரம் புலராளவும் நிலன்மீது செல்லேன்' எனக் கேட்டுச் சிறிதாறு முன்னே தாங்கிப் போய்ப் பிறகு இராக்கதன் ஓர் குளனில் மூழ்கப் புக்குழிப் பார்ப்பானைப் பார்த்து,

'யான் நித்த கருமஞ் செய்து வருகாறும் நீ அடிபெயரற்க, இங்குத்தானே நிற்றி' எனச் சொல்லி, பின்னர் நீானஞ் செய்தனன். அந்தணன் இதைப் பார்த்து, இவன் மூழ்கிப் புறம் போந்தானுனல் நாம் இவன் வயிற்றழலில் மூழ்கா திரேம், ஆதலால் ஓடி உய்ய இதுவே நல்ல அமயம், நீரா டிக் கால்புலருமுன் இவன் நடவானல்லவோ வென்று தனக்குள் தெரிந்துகொண்டு விரைந்தோடினுன். அது கண்ட அரக்கன், யான் வாய்பதறிக் கைக்கெட்டினது வாய்க் கெட்டாமல் இழப்புற்றேன், கடிதிற் பிற்சென்று கவர்வே மெனினுங் கொண்ட நோன்பு குறையுறுகின்ற தென்று மறுக்கமுற்று, ஆங்கே நெட்டுயிர்த்து வாளா நின்றனன். ஆதலால் யாதும் உய்த்துணராது இயற்றலாகாது" எனச் சொல்லிப் பின்னர்ப் பன்னூல்களையும் நன்காய்ந்து கடைப் பிடித்து, "இம் முக்கண் அரிவையைப் பார்க்க வொண்ணுது; என்னையோ வெனின், விரூபமகவுளதாயின் அதைக் காண லாகா தென்பது நூற்றுணியாம்; மற்றும் இஃது ஆன்றோர் ஒழுக்கமுமாம்" என, ஏந்தல் அம்மொழி யுட்கொண்டு அக் கன்னியை வேற்றுழிவைத் தளித்தபின்னர், அவள் பூத்த மையால் இவள் மணத்திற்கு இயைபவனுக்குப் பெரும் பொருட்குவை தருவலெனத் தேயந்தோறும் மணவோலை போக்கினமையைக் கேட்ட இரந்துண்ணும் மண்டையரா கிய ஓர் குருடனும் கூனனும் விவாக விருப்பால் மன்னன் பாற் புக்கனர். அவருட் குருடன் அரயனை நோக்கி, "நுங் கன்னிகையை எமக்குத் தரிற் கோடும்" என, இறைவன் இச் சுயம்வரற்கு நங் கன்னிகையைக் கடிபுரிவது தக்க தென்று உள்ளி, அவனுக்கு மகட்கோடை நேர்ந்து, அங் ஙனமே கடிமுடித்து அளவில் பொருள் தந்து, "நீ கண மும் நீட்டியாமற் பரதேயம் போதி" என்றனன். அவ் விடைகொண்டு மூவரும் பரதேயம் புக்கிருப்புழி, அவள் அக் கூனற்கு வயமாய் அவனை நோக்கி, "இக் குருட்டுச்

சவத்தை நஞ்சிட்டுக் கொல்லின் நாம் இடையூறின்றி வாழ் வோம்'' எனக் கேட்டு அவன் செத்த பாம்பொன்றைத் தந்தனன். அவ்வணங்கு அதை யேற்றுக் கண்டித்து அடுப் பின்மேல் வேக வைத்துப் பொறியிலியை, "இத் தசை நிற் குறித்துக் கொணர்ந்தேன்; இச் சுல்லி யெரித்துக் கொண் டிரு, நான் வேறு கருமத்திற் புகுகின்றேன்" என, அக் கண்ணறை அவ்வாறே இளந்தழலா எரித்துக்கொண் டிருப் புழி அக் கிருட்டின சருப்ப ஆவி கண்ணில் தாக்கி அவ் விடத்தினூற் கண்ணுரோகந் தீர்ந்து முன்போற் கண் தெரிந் தமையால், இவர் இருவரும் இவன் குருட் டுதவியால் நகைத்து விளையாட் டயர்வதைக் கண்டு, காலால் நெறிகா ணும் பண்டை மாட்சிபோல் வந்து கூனனைப்பற்றி ஈர்த்துச் சீற்றத்தால் தூக்கி அவள் முகத்தில் எற்றின வளவில், அவள் மூன்றும் விழி மறைந்து இக் கூனன் கூனும் நிமிர்ந் தது. ஆதலால், 'தெய்வ ஒற்றுமை யிருந்தால், யாவும் நல்ல வாம்' என, சக்கிரதரன் 'நல்லது, நீ உன் கிருகத்துக்கு ஏகுழி வழித்துணையோ டேகு. ஊர்வழி தனித்துச் சேற லும் எல்லோரும் உறங்குகையில் விழித்திருக்கையும், தலை யாய பொருளு மின்பமுந் தனக்கே யுளவாகுக வென்னும் விருப்பமும் ஒழியற்பாலனவென நூல்க ளறைகின்றன. இங்ஙனம் நூல் நெறி கடவா ஒழுக்கினன், புயங்கத்தினின் றும் ஓர் வேதியன் உய்ந்தவண்ணம் உய்வன்' என, சுவர் ணசித்தி 'அப்பனவன் உயல் எவ்வாறு நிகழ்ந்தது?' என, சக்கிரி சொல்வானாயினன்:

## கதை - 12

'நாசிக தேயத்தனாகிய தத்தனென்பவன் அன்னையை நோக்கி, "யான் ஆரியன் கருமத்தால் ஓர் ஊர்க்குப் போகு வல், விடைதருதி'' என, அவ் வின்றாள் "குழந்தாய்! ஒரு

வனு யேகற்க" எனக் கேட்டு, அவன் "தாயே! நெறி ஊறின்றி யிருக்கின்றதே" என, அவள் மீண்டும், "அப்பனே! எஃதுளதாயினும் நீ நெறித்துணை யின்றிச் சேறலாகாது" என்று கூபத்தில் ஓர் நண்டைப்பற்றி ஓர் கலயத்திற்பெய்து கொடுத்து, "இதையேனுந் துணைக் கொடுபோ" என, அவ்வாறே அவன் ஆய்மொழி மேற்கொண்டேகுழி, நெறியில் வேனிலால் வேசற்று ஓர் தருநிழலிற் கண்வளரா நிற்குமிடத்து, யாண்டிருந்தோ அவற் றீண்ட வந்த ஓர் அரா இம் மட்கலயத்திற் பெய்திருப்பது என்னென்று அதனுள் தலைநீட்டுகையில், அஞ் ஞெண்டு இஃதோர் காரராவென் றுணர்வுற்றுக் கொடுக்கா லிடுக்கிக் கொன்றது. பின்னர் அந்தணன் விழித்து இப்பணியைப் பார்த்து "இஃதெங்ஙனம் இறந்ததெனச் சூழ்வுழி, அதன் சென்னியை அலவன் கத்தரிக்கக் கண்டு இத்துணைச் செயலும் இதுவே புரிந்தது, மாதா தந்த வழித்துணையாற் பிழைத்தேன், 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்றது பொய்யாதென்று அந் நண்டைக் கைக்கொடு இல்லம்புக்கு அன்னைக்கு அட்டாங்கம் நிலந்தோய வீழ்ந்து பணிவுதோன்றத் தழுதழுத்து வாழ்த்தி நிகழ்ந்த செய்திகளை விளம்பி இன்புற்றிருந்தனன்" என, பொன்வாய்ப்பினன் "இது தக்கதேயாம். ஏனெனில், மந்திரம், தீர்த்தம், பெரியோர், சோதிடன், மருத்துவன், குரு இன்னோர்பால் எவன் எவ்வணம் பாவனை புரிவானோ அவன் அவ்வணம் பேறு பெறுவன்" என் றிங்ஙனம் நேமியானைத் தேற்றித் தன் மனைக் கேகினன்.'

இங்ஙனம்

**சோமசரும னென்போன் அரசன்மக்கட்கு உரைத்த**

அசம்பிரேக்ஷிய காரித்துவம் முடிந்தது.

# வீரசோழியப்
# பதிப்புரை.

## தெய்வாசாரிய வணக்கம்.

*யானை யானனப் பிரணவச் சிகரனை யிதயத்*
*தான மேயவாஞ் சண்முகன் றனைமறை மூல*
*மான வாதியை யருட்கயி லாயநா தப்பேர்*
*ஞான சற்குரு நாதனை நாடொறு நவில்வாம்.*

## சரஸ்வதி வணக்கம்.

*வெள்ளிதழ்த் தாமரை நள்ளணங் கிணையடி*
*உள்ளுதூஉந் தமிழ்வளங் கொள்ளுதல் குறித்தே.*

## தமிழாசிரிய வணக்கம்.

*எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்*
*முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்ன*
*கத்துயர் மரபினேன் முத்துக் குமார*
*வித்தக னடிதலை வைத்து வாழ்த்துவனே.*

## அவையடக்கம்.

*செந்தமிழ் விந்தைகை வந்தபா வாணரென்*
*சிந்தையிற் சந்தத முந்தி வாழ்குநரே.*

*மலர்தலை யுலகிற் குலவுபற் பலவள—நலமெலா மிலகிய தலமெனு நிலவிய—பொலிவுடைப் புண்ணிய பூமி யாகிய பரத கண்டத்தில் வழங்கும் பாஷைகளுள் ஆதிகாலந் தொட்டுள்ளன சமஸ்கிருதமுந் தமிழுமாம். இவற்றில் ஒன்று சிவபெருமானிடத்தும் மற்றது சுப்பிரமணியக் கடவுளிடத்தும் உற்பவித்தன என்னும் ஆகம ஐதீகப் பிரமாணங்களே இதற்குச் சான்றாகும். "ஆதியிற் றமிழ் நூலகத்தியற்*

குணர்த்திய-மாதொரு பாகனை வழுத்துதும்" எனவும் "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணை 'யாத்-தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழு தேத்தக்-குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" எனவுந் தமிழிற்கும் ஈசுவரோற்பத்தியே கூறுவாருமுளர். சமஸ்கிருதத்திற்குப் பாணினீயம்போலத் தமிழிற்கு ஆதி யிலக்கணஞ் செய்தவரன்றித் தமிழ்மொழியைத்தந்தவர் அகத்தியரல்லரென்றறிக. அழகினுனும் வலிமையானுமன் றிக் காலத்தினுனும் ஒன்றற்கொன்று சமத்துவமுடைய தென்றெப்பித்தற்கன்றே ஒன்றை வடமொழியென்பார் மற் றதைத் தென்மொழியென்பதூஉம் ஒன்றைச் சிவபெருமான் தந்ததென்பார் மற்றதைச் சுப்பிரமணியக்கடவுள் தந்தரு ளியதென்பதூஉம்! வடக்குக்குத் தெற்குஞ் சுவாமிக்குச் சக் தியும் பிந்தியவென்றுற் சமஸ்கிருதந் தமிழிற்கு முந்திய தென்க. சமஸ்கிருத தமிழ்க்கடல்களின் கரைகண்ட பேராற் றலுடைய சிவஞானயோகீசுவரர்

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினு ரென்றுலிவ்
இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ

என இரண்டனதும் ஒப்புமையை மெய்ப்படுத்தினர்.

ஆதிகாலத்தாரியரோடு சமஸ்கிருதம் இமயமலைக்கப் பாலிருந்து வந்ததென்றும், ஆரியர் வடபாலிற் புக்குக் கங்காதீரதேசங்களை வென்று கைப்பற்றியபோது அங்கே வசித்தவர்கள் தமிழரென்றும், ஆரியரைச் செயிக்க முடி யாமையானும் ; அவர்க்குக் கீழ்ப்பட்டிருக்க மனமொவ்வா மையானுஞ் சுயேஷ்டபங்கம் உறுவதினுந் தமது நாட்டைக் கைவிட்டுப் பிறவிடஞ்சேர்ந்து சஞ்சரித்தலே தமக்குச் சிறப் பென்று கருதித் தமிழர் தென்றிசைச்சென்று வதிந்து

தமக்குள்ளே சேரசோழபாண்டிய இராச்சியங்களை ஏற்படுத்தினர்களென்றுந் துணிவார் பலருளர். இவர் மதத்திற்குச் சார்பான அயற்சாட்சிகளும் பலவுள. இஃதுண்மையாயின் இந்தியாவிற்கு ஆதிபாஷை தமிழென்றே முடியும்.

காசியிலிருந்த வடமொழிச்சங்கத்தாரோடு மாறு கொண்டு, அவரிறுமாப்பை அடக்கும்பொருட்டு அகத்தியர் நெடுநாட் பொதியமலையிற் தவம்புரிந்து, சுப்பிரமணிய சுவாமி வரத்தினுற் தமிழுக்கிலக்கணஞ்செய்து, சமஸ்கிருத நூலாரைத் தலைகவிழச் செய்தாரெனிற் தமிழின்மான்மியம் வேறுசொல்லவும் வேண்டுமா? கலைக்கியான நூல்களுஞ் சாஸ்திரப்பயிற்சியுஞ் சமஸ்கிருதத்தில் முற்பட்டதும் அதிலிருந்து பலநூல்களும் அவற்றோடு பல்லாயிரமொழிகளுந் தமிழில் வந்ததும் மெய்யே. அதனுற் தமிழ் பிந்தியதென்றெங்ஙனம்போதரும்! வடமொழி மந்திரத்து வாழ்ந்தார் கொண்ட அகந்தையை ஆண்டுச் சிற்றில் நிகர்த்த தென்மொழியைச் சிறப்பித்துக் கூடகோபுரம் வகுத்து மாடமாளிகையாக்கி அடக்கினமையால் வடமொழி முந்தியதா? ஒருகாலத்திற் குடிசையாயிருந்து பின் மண்டபமாயினதால் அக்குடிசை தோன்றியகாலம் அயலில் வகுத்த மண்டபத்திற்குப் பிந்தியதென்று சாதிப்பது தர்க்கலக்ஷணமாகுமா? விபரீதம்! விபரீதம்!!

இகழ் இமிழ் உமிழ் கமழ் கவிழ் குமிழ் சிமிழ் என ழகரப்பேறு பெற்ற பதங்கள் போலத் தமிழ் என்னுஞ் சொல் தனிமைப் பொருள் குறித்த தமியென்னும் வினை அடியாற் பிறந்து, வினைமுதற் பொருண்மை உணர்த்திய விகுதி குன்றித், தனக்கிணையில்லாப்பாஷை என்னும் பொருள்பயப்பது. அங்ஙனமாயின் தமியேன் என்பது போல இழிவுபொருளன்றோ பயக்குமெனின்; அற்றன்று,

ஒரே தாதுவிற் பிறந்தும் அடியேன் அடிகள் எனவும் அளி யேன் அளியாய் எனவும் நிற்பனவற்றுள் ஒன்று இழிவு பொருளும் மற்றையது உயர்வுபொருளும் உணர்த்தின வென்க. செவிக்கினிமை பயத்தலான் மதுரம் என்னும் பொருட்பேறுடைத்தாகித் தமிழென வழங்கிய தென்பாரு முளர். அஃதெவ்வாறாயினும் ஆகுக. தமிழ் என்பது தென் மொழிக்குத் தென்சொல்லாகிய பெயரே யாமெனக்கொள்க. இதை ஒழித்துத் திராவிடமென்னும் வடமொழியே தமி ழென்றாகியதெனச் சற்றும் ஆலோசனையின்றிக் கூறுவாரு முளர். அவர்மதஞ் சாலவு நன்றாயிருந்தது!! தமிழிற் தமிழ் என்னும் பதம் வரமுன்னர்ச் சமஸ்கிருதத்திற் திராவிடம் என்னுமொழி உளதாகில் அப்பெயர் எப்பொருளை உணர்த் திற்றோ? உலகத்தில் எஞ்ஞான்றும் பெயரா பொருளா முந் தியது? பொருளெனில் அப்பொருள் இருக்கும் இடத்தா அஃதில்லாத பிறிதுதேயத்திலா அதன்பெயர் முன்னர் நிக ழும்? இஃதுணராது தமிழ்வழங்கிய இடத்திற் தமிழுக்கோர் பெயரிருந்ததில்லையென்றுஞ் சமஸ்கிருதத்திலிருந்து அதற் குப் பெயர் வந்ததென்றுஞ் சொல்வது யார்க்கும் நகை விளைக்குமே. இஃதொன்றோ! யாதொரு தமிழ்மொழியில் இரண்டோரெழுத்துச் சமஸ்கிருதமொழிக்கொப்ப நிகழுமா யின் அது சமஸ்கிருதத்தினின்று பிறந்ததெனச் சாதிக்கின் றனர். மேலைத் தேசவாசிகளின் இங்கிலீஷ் முதலிய அந் நியபாஷைகளில் இன்றியமையா வீட்டுச் சொற்களாகித் தந்தைதாயரைக் குறிக்கும் பாதர் மதர் என்பனவாதியும் வடமொழி அடியாய்ப் பிறந்த தென்பரா? அப்படியாயின் வடமொழியைக் காணமுன் அத்தேசத்தாரெல்லாந் தாய் தந்தையரை அழைத்தற்கோர் வீட்டுச்சொல் இல்லாதிருந் தனரென்றன்றோ முடியும்? ஆண்டுள்ள பாதர் மதர் ஒப்ப ஈண்டும் பிதா மாதா ஆயிற்றெனில் யாது குற்றம்? தருக் கத்திற் காகதாலீய நியாயத்தினுண்மை அறியாமலும் ஆரிய

மொழிக்கும் அதன் அயல் நாட்டு மொழிகளுக்கும் உள்ள சம்பந்தசார்புகளின் காரணத்தை ஆராயாமலும் இவ்வாறு கழறும் இவர் கற்பனைக்கு யாது செய்யலாம். இவர் வாய்க்கு விலங்கிட யாரான்முடியும்!

இன்னொருசாரார் தமிழ் என்னுந் தென்மொழிப்பதமே வடமொழியிற் திராவிடமென மரீஇயது என்பர். இவரும் உண்மை கண்டவரல்லர். இருகூற்றாருந் திராவிடமென்னுஞ் சொல் வந்தவரலாறும் அதன்பொருளும் அதன் வழக்கியலும் அறியாராயினர். இருவருந் தம் மனத்தின்கண் நிகழும் ஓரோர் துணிவுபற்றி, வல்லார்பாற் புல்லும் ஆயுதமென்றாற் போலத், தமது துணிவை நாட்டுவான் புக்கு மிக்கிடர்ப்பட்டுப் போலியாதாரங்கள் காட்டி வாய்வல்லான் சொல்லே மன்று கொளுமென்று வாளா நம்பித் தம்வன்மை காட்ட முயன்ற யுத்திமான்களன்றி ஆகமப் பிரமாணங் கொண்டு சாதித்தவரல்லர். ஹேமசந்திரநாநார்த்தத்தின்படி திராவிடம் என்னுஞ் சொல் திரா என்னும் அடியாற் பிறந்து ஓடிவளைந்தது என்னும் பொருளுடையது. இது மகாநதிமுதற் குமரியீறாக ஓடிவளைந்த கோடிமண்டலத்தை உணர்த்துவது. இது பலதேசத்தார் நிகழ்ச்சியும் நடையுந்தோன்ற வடமொழியில் ஈராயிரம் வருஷத்தின்முன் உச்சயினிபுரத்தில் இயற்றி ஆடிய ஒரு நாடகத்தில் முதன்முதல் எடுத்தாளப்பட்ட தென்பதூஉம், அதில் விதர்ப்பநாடு மத்தியாகப் பிராச்சிய தக்ஷிணாத்திய திராவிட பாரசீயமென அயனாடுகள் குறிப்பிக்கப்பட்டனவென்பதூஉம், பின்னர் இவற்றை இழிதகைமைத்தாய கொடுமொழியையும் பலபாஷை விரவிய சங்கரமொழியையும் முறையே குறித்த சாண்டாளி சாவரி என்னும் பதங்களோடு சேர்த்து அவ்வத்தேச பாஷைகளைக்குறிக்கும்படி பிரயோகிக்கப்பட்டதென்பதூஉம் பிராகிருதநிர்ணயவியாக்கியிற் கரதலாமலகம் போற்காட்டப்பட்

டன, மேலுந் திராவிடம் என்பது தமிழ்மொழிக்கிட்ட பெயராயின் பஞ்சதிராவிடமென்பதென்னை? தமிழ் தெலுங்கு கன்னடம் மராஷ்டிரம் கூர்ச்சரம் என்னும் ஐந்துபாஷை யையுந் திராவிடமெனவே அஃது இவ்வைந்துமொழியும் வழங்கும் நிலத்தின் பெயரென்பது தானே போதரும். ஆகவே இச்சொல் வடமொழியிற் கோடி மண்டலத்தின் குறியீடாகவே நின்றதென்க. அன்றியும் ஈராயிர ஆட்டை மொழியையா பதிணுருயிர வருஷப் பாஷைக்கிட்ட பெய ரென்பது. இவற்றாற் தமிழ் திராவிடமாயதூஉந் திராவிடந் தமிழாயதூஉம் இரண்டுந் தவறென்றுணர்க.

தமிழ் தற்பாஷை என்பதற்குப் பூர்வாசிரியர்கள் கீழ் வாய்க்கணக்கிற்கும் விரவியல்செய்யுட்கும் மணிப்பிரவாளத் திற்கும் வேற்றுமைவகுத்த இலக்கணமே சாட்சிபகராதா? தற்காலத்தில் இங்கிலீஷ் பிராஞ்சியாதி மொழிகள் சேர்ந்த தமிழ்ச்செய்யுட்குள்ள ஊனம் அக்காலத்தில் வடமொழிச் செறிவுக்குளதாயின் வடமொழி தமிழுக்குத் தாய்மொழி யென்றெவ்வாறு பெறப்படும்? கடைச்சங்கத்திலுங் கடைக் காலத்துப் பிறந்த நாயனர்குறள் ஔவைபாடல் திரிகடுகம் நான்மணிக்கடிகை பஞ்சமூலம் எலாதி பழமொழி முதலிய வற்றில் வரும் ஆரியமொழி எத்துணைச் சிறுபான்மைய?

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்று டொழாஅ ரெனின்.

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா — நின்று
சலியா திளந்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்று னுழவும் — இளைஞனுய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்று
முள்ளன போலக் கெடும்.

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறியிற்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை — யல்லாக்
கடையார்க்குந் தம்மூரென் றூரில்லைத் தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநெடுங் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான் — பலன்படா
மாவிற்குக் கூற்றம் வளைஞெண்டிற் குப்பார்ப்பு
நாவிற்கு நல்லார் வசை.

அறுநால்வ ராய்ப்புகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப் — பெறுநால்
மறைபுரிந்து வாழுமேன் மண்ணொழிந்து விண்ணோர்க்
கிறைபுரிந்து வாழ்த லியல்பு.

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கு — நல்லாய்
மணலின் முழுகி மறைந்து கிடக்கு
நுணலுந்தன் வாயாற் கெடும்.

இற்றையனவாகிய குமரகுருபரசுவாமி நூல்களைத் தன்மையை?

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இவையெல்லாஞ் சமஸ்கிருதத்தினின்று பிறந்தனவாமே! இவ்வாறுமயங்குவார் கல்வியறிவில்லாதார் மாத்திரமன்று தமிழிலக்கணக்கடன் முழுதுண்டு, இலக்கணக்கொத்து ஏப்ப மிட்டுவடிந்து, நிலம் நீர் எனப் பொதுவெழுத்தான் வரினுந் தமிழ் தமிழே என்று வற்புறுத்துவான் "பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத்தானு - மீரெழுத்தானு மிலங்குந் தமிழ் மொழி" என்று சூத்திரமியற்றிய சுவாமிநாததேசிகரே, தம்மரபின் முன்னோர் மதத்தையும் மறந்து, "நூலுரை போதகா சிரியர் மூவரு-முக்குணவசத்தான் முறைபிறழ்ந்

தறைவரே" என்னுந் தன்விதிக்குத் தன்னையே இலக்கிய மாக ஒப்பித்தாற்போல, "அன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென் — றறையவு நாணுவ ரறிவுடை யோரே" யென்று மாழ்கினர். இது வடமொழிப் பயிற்சியே மிக்குடையராய் அதன்மேற்கொண்ட பேரபிமானத்தானும் அம்மொழியின்மேற் தென்மொழியன்றிப் பிறிதுமொழி தெரியாக்குறைவானும் நேர்ந்த வழுவன்றோ? உலகத்தில் எப்பாஷைக்குஞ் சிறப்பெழுத்துச் சில்லெழுத்தேயாம். உரப்பியும் எடுத்துங் கனைத்தும் ஒவ்வொன்றையே வேறு மும்மூன்றாக விகற்பித்துச்சரிக்கும் ஐவர்க்கத்தையுங் கூட்டெழுத்தையும் ஒழித்தால் எட்டெழுத்தாலொரு பாஷையின்றேயென்று சமஸ்கிருதத்தையும் புரட்டிவிடலாமே. இங்கிலீஷ் பாஷையில் வடமொழிக்கில்லாத எழுத்துக்கள் F Z இரண்டாதலால் இரண்டெழுத்தாலொரு பாஷையின்றேயென அதனையும் மறுப்பார்போலும். இரண்டற்குப் பொதுவாயுள்ளனவற்றை ஒன்றற்கே உரியனவாகத் தீர்த்து நடுவு நிலைமை குன்றல் இவர் போலியர்க்குப் பெருங்குற்றமாம். உண்மை உரைப்பின் உரோமாபுரிப்பாஷையாகிய லத்தீனுக்கும் இங்கிலீஷுக்குமுள்ள சம்பந்தமே சமஸ்கிருதத்திற்குந் தமிழுக்குமுள்ளதெனக்கொள்க. அளவில்லாத கிரந்தங்களையுடையதாயினும் லத்தீன் மொழிவிரவாத கிரந்தமொன்றும் இங்கிலீஷில் இல்லாதவாறு போலவே சமஸ்கிருதமொழி சற்றாகிலும் விரவாத கிரந்தந் தமிழுக்கில்லாதிருக்கலாமாகவே "அன்றியுந் தமிழ்நூற் களவிலே யவற்றுளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ" என இலக்கணக்கொத்துடையார் முழங்கிய முழக்கம் வெற்றொலியாயினமை அறிக. அன்றியும் வடமொழியில் இல்லாத புணர்ச்சியிலக்கணங்களுங் குறியீடுகளும் வினைத்தொகை குறிப்புவினை முதலிய சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணைக்கூறுபாடும் பால்விகுதிகளும் அகம்புறம் என்

னும் பொருட்பேதங்களும் ஐந்திணையியல்புகளும் அவற்றின் துறைகளும் வெண்பா கலிப்பா கலித்துறை முதலிய செய்யுளிலக்கணங்களும் இவை போல்வன பிறவுங் காலத்திற்குக் காலம் பிற்றைநாளிற் றோன்றாது ஆதியிலக்கணமாகிய அகத்தியத்திலே முற்ற உரைக்கப்பட்டமையால் தமிழ் சமஸ்கிருதத்தினின்று பிறவாத தற்பாஷை என்பது பசுமரத் தாணிபோல் நாட்டப்படும். இவையெல்லாம் ஒருவர் காலத்தில் அவ்வொருவராலேயே நூதனமாகப் படைக்கப் படற்பாலனவா? அகத்தியர் மகாரிஷீசுவரர், அன்னோர் இவற்றைக் கற்பித்தல் எளிதன்றோ வெனின்; நன்று கடாயினாய், ஐந்திர பாணிநீய வியாகரணங்களை நன்குணர்ந்தும், அவற்றுள்ள அதிகார முறைமை ஒத்துமுறைமை சூத்திர முறைமைகளின் சிறப்பினைச் சீரிதிற் கண்டும், யாதொரு கிரமமும் முன்னொடு பின் சம்பந்தசார்புமின்றித் தமிழுள் இயல் இசை நாடக இலக்கணவிதிகளும் இயற்றமிழுள்ளும் எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி விதிகளும் நெறி முறைபிறழக் கண்டபடி விரவத் தமது இலக்கணநூல் இயற்றியமையானே அஃது எத்துணை வல்லாராயினும் ஒருவருக்கரியதென்று உணர்க. அன்றியும் இஃது எத்தேசத்து எந்தப்பாஷையினது அனுபவத்திற்கும் யுத்திக்கும் முழு விரோதமென்க.

தமிழ்ப்பாஷையின் காலவருத்தமானம் அபோதகாலம் அக்ஷரகாலம் இலக்கணகாலம் சமுதாயகாலம் அநாதாரகாலம் சமணகாலம் இதிகாசகாலம் ஆதீனகாலமென எண் கூறுபடும். வரிவடிவின்றி ஒலிவடிவுமாத்திரமாய் நிகழ்ந்த காலத்தை அபோதகாலமென்றும். அஃது அகத்தியர்க்கு முன் சென்றகாலமாகும். அகத்தியர் தமிழ்மொழியை அவலோகிதமுனிவர்பாற் கற்றுணர்ந்தாரென்னும் அருகர்மதமுஞ் சுவாமியிடந் தமிழ்மொழியையுஞ் சுப்பிரமணியக் கடவுளிடம் அதன் இலக்கணத்தையும் ஓதியுணர்ந்தாரெனக்

கூறுஞ் சைவர்மதமும் அகத்தியர்க்கு முன்னுந் தமிழுண்மைக்குச் சான்றாம். சிலர் சுவடி எழுத்து நெடுங்கணக்கு முதலிய சொற்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு அளவுக்கு வரிவடிவெழுத்தும் முன்னர் இருத்தல் வேண்டும் எனக் கூறுவர். இங்ஙனமாகவும், வடமொழி தென்மொழி மகோததி பருகிப் – படிமிசைத் தமிழ்மகா பாடியம் வகுத்துக்– குசைநுனி யதனினுங் கூரிய மதிபெறீஇத்– திசையெலாந் தன்பெரு மிசைநிறீஇ உயர்ந்த மகானாகிய (பெயர் சொல்லவும் வாய்கூசுகின்றதே) சிவஞானமுனிவரர் இதனை மறந்து, அகத்தியராற் தமிழ் பூமியில் உற்பத்தியாயினதெனக்கொண்டு, அகத்தியம் "அச்செந்தமிழ் நிலத்துமொழியோடு முற்பட்டுத்தோன்றுநூல்" எனவுஞ் "செந்தமிழ் நிலத்துமொழி தோன்றுங்காலத்துடன்றோன்றியநூல்" எனவும் மயங்குவாராயினர். "சிறிய கேள்வியோர் கழியவுஞ் செருக்குடை யோரென்–றறிஞர் கூறிய பழஞ் சொலென்னளவிற்றே" யாயினுமாகுக. "முந்து நூல்" "முந்தை நூல்" என்பன முதனூற்குப் பெயர்களாகவும், இளம்பூரணரும் நச்சினார்க்கினியாரும் அவ்வாறே பொருள்கூறி "நிலத்தொடு" என்பதற்குச் செந்தமிழ் நிலத்து வழக்கொடு எனப் பொருளுரைத்திருப்பது கண்டாராகவும், "நிலத்தொடு முந்துநூல்கண்டு" என்பதற்கு எண்ணுப்பொருளில் நிலத்தையும் (அதாவது நிலத்தின் கணுள்ள இயற்றமிழ் வழக்கையும்) முதனூலையுங் கண்டு எனச் செம்பாகமாகப் பொருள் வெட்டவெளிபோலக் கிடப்பதாகவும், இவர் உடனிகழ்ச்சிப் பொருள்கொடுத்து "முந்து" என்பதை வினைத்தொகையாக்கி, அறுகம்புல்லிற் றடக்கிய யானைபோல, இவ்வாறு இடர்ப்பட்டது காலகதியோ அன்றேல் பிற ஆசிரியர் மதங்களை மறுத்தலும் ஆங்காங்குத் தமது நூதனமதத்தை நாட்டுதலுந் தமக்கு என்றும் இயல்பாயினமை பற்றியோ அறியேம்.

நடுவிஞ் யகமி லக்காய் நலமுழிந் திடுவே மெங்க
ளிடையினக் கீர னில்லா திருப்பினென் றவைசொல் வோனே
விடையினுன் றமிழ்நூல் கூறும் விதிவிலக் குணரா னென்றுற்.
படியினில் யாவர் வல்லார் பாற்றமி ழடங்கிற் றம்மா!!

"அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு" "பொற்பொதிய மாமலையான் மொழி" பொற்பொதிய மாமுனி புகன்ற தமிழ்" "குறுமுனிவ ஞர்தமிழ்" என வில்லிபுத்தூரராதியர் கூறியவெல்லாம் உபசாரவழக்கென்க. அல்லதூஉஞ் சுவிகாரபுத்திர தருமமெனக் கொள்ளினும் அமையும்.

அகத்தியரால் நெடுங்கணக்கு ஏற்பட்டதுமுதல் அகத்தியம் நிறைவேறியது வரைக்குஞ் சென்றகாலத்தை அக்ஷர காலமென்றும். அது சிறுகாலமாயினுங் கைக்குழந்தை மழலைபயின்று சிற்றில் கோலிவிளையாடிய பருவமாதலிற் பெற்றுருற்றூர்க்குப் பேரானந்தந் தந்த வயதாயிற்று. பின் நிகழ்வது இலக்கணகாலமாகலானும் இலக்கியம் பிறந்த வழியே இலக்கணம் அமைவதாதலானும் அக்ஷரகாலமே தமிழுக்கு ஆதியிலக்கியகாலமென்றுங் கொள்க. அன்றியுஞ் சுருதியொப்பச் செவிவாயிலாய் அதற்கு முன்காலத்தினின்று வந்தனவும் பலவுளவாதல் வேண்டும். அவ்வாறிருந்தன வென்றே துணிவாரும் பலருளர். இதனை இவ்வாறு அக்ஷர காலம் ஏற்பட்ட பிறபாஷைகளின் உவமானப் பிரமாணத் தாலுமுணர்க.

அப்பால் இலக்கணகாலம். இது தொல்காப்பியன் அதங்கோட்டாசான் துராலிங்கன் செம்பூட்சேய் வையாபிகன் வாய்ப்பியன் பனம்பாரன் கழாரம்பன் அவிநயன் காக்கைபாடினியன் நற்றத்தன் வாமனன் என்னும் பன்னிரு சீஷரும் அகத்தியரிஷியிடத்தில் அவர்செய்த பேரகத்தியஞ் சிற்றகத்தியம் இரண்டும் முற்றக் கற்றுத் தத்தம்பெயரால் வேறு வேறிலக்கணமும் அனைவரும் ஒருங்குசேர்ந்து புறப்

பொருட் பன்னிருபடலமும் எழுதிய காலமாம். அகத்தி லிருந்து சிற்றில்கோலி ஆடிய சிறுமகவு ருதுவாயினாற்போல இதுவுந் தமிழணங்கிற்கோர் விசேஷ பருவமேயாம்.

அப்பாற் சமுதாயகாலம். அது மதுரைச் சங்கத்தார் காலமாகும். சர்வபூஷணாலங்காரதாரியாய்த் தமிழ்மாது தருணதாதிசையடைந்து அரங்கேறிய மகோற்சவகாலம் அதுவேயாம். அப்பொழுது அவளுடைய சீருஞ்சிறப்பும் இத்துணையதென்று சொல்லற்பாலதன்று. அக்காலத்திற் றான் அவள் சமஸ்கிருதநாயகனை மணந்தது. மணந்துமென்! மாமியார்வீட்டு மருமகன்போல இன்றியமையா வேட்கைக் குரியபோதன்றி மற்றும்படி ஒருசார் ஒதுங்கியிருந்தமை யாற் தமிழ் தன் சிறப்பிற் சற்றுங் குறையாதிருந்தனள். இது தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கமென மூன் றாகும். இவற்றுள் முதற்சங்கத்தார் காலத்தே உற்பவித்து இடைச்சங்கத்தார் காலத்திற்கே உரியவாயினவெனவும் அகத் தியரோடு தொல்காப்பியரும் இடைச்சங்கத்தில் இருந்தன ரெனவுங் கடைச்சங்கத்திலுந் தொல்காப்பியர் வீற்றிருந் தனரெனவுங் கூறுவாருமுளர். அது யுத்திக்கிசைந்ததன்று. அவரவர் நூற்பெருமையான்வந்த உபசாரவழக்காகக்கொள் ளலாம். அகத்தியத்தோடு தொல்காப்பியராதியோர் நூல் களுந் தலைச்சங்கத்தார் காலத்து நிலவியும் அகத்தியத்தையே அஞ்ஞான்றோர் ஆதாரமாகக் கொண்டாரென்றும் அகத்தியரு டைய விரோதத்தினாற் தொல்காப்பியம் அப்போது தலையெ டாமலிருந்ததென்றுந் தொல்காப்பியத்தின் சிறப்புத்தோன் றத் தோன்ற அஃது அகத்தியத்திற்குச் சரியாயெழுந்து இடைச்சங்கத்தாருக்கு இரண்டும் ஆதாரமாயினவென்றும் ஈற்றில் அகத்தியம் மகத்துவந்தாழத் தொல்காப்பியம் மேம் பட்டுக் கடைச்சங்கத்திற் தானே தனிநின்றதென்றுங் கொள் வதே தகுதி. பாண்டியன் அவைக்களத்து "அதங்கோட்

டாசாற் கிறபத்தெரித்து'' எனப் பனம்பாரனாரால் கூறப் பட்டமையிற் றொல்காப்பியமும் ஏனைப் பதினொருவர் நூல் களும் முன்னர் உற்பத்தியாயும் பின் தலைச்சங்கத்தில் அரங் கேறியதாகக் கொள்க.

நூலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான் — மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்குங்
கத்தன் மதுரையிற்சொக் கன்.

என்னுங் காளமேகப்புலவர் வாய்மொழியைத் துணைக் கொண்டு தலைச்சங்கத்து வீற்றிருந்த புலவர் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மரெனவும் இடைச்சங்கத் துப் புலவர் நானூற்றுநாற்பத்தொன்பதின்மரெனவுங் கடைச் சங்கத்துப்புலவர் நாற்பத்தொன்பதின்மரெனவுங் கூறுவா ருளர். அது சரியன்று. அவ்வச்சங்கத்து வீற்றிருந்தோர் முறையே அகத்தியனார் விரிசடையத்தனார் முருக முதல் வனார் முடிநாகராயர் நிதிக்கிழவனார் அதங்கோட்டாசிரியனார் பனம்பாரனார் தொல்காப்பியனார் முதலாய ஐஞ்ஞூற்று நாற் பத்தொன்பதின்மரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசி யார் வெள்ளூர்க்காப்பியன் சிறுபாண்டரங்கன் திரையன் மாறன் துவரைக்கோமான் கீரந்தையார் முதலாய ஐம்பத் தொன்பதின்மருஞ், சிறுமேதாவியார் சேந்தன் பூதனார் மதுரையாசிரியர் நல்லந்துவனார் மருதனிளநாகனார் உருத்திர சன்மனார் கபிலர் பரணர் கணக்காயனார் மகனார்நக்கீரனார் முதலாய நாற்பத்தொன்பதின்மருமெனவும், அவ்வச்சங்கத் திற் றத்தங் காவியம் அரங்கேற்றிய புலவர் தொகை நாலா யிரத்து நானூற்றுநாற்பத்தொன்பதும், மூவாயிரத்தெழு நூறும், நானூற்று நாற்பத்தொன்பதுமெனவும், நூலும் உரையும் இரண்டுஞ் சங்கத்தார் காலத்தனவாகிய இறைய னாரகப்பொருளுரையாற் றெள்ளிதினுணர்க. அல்லாமலும், இதனையே

"ஏழெழு னைஞ்ஞூறு மேலே ழொடுபஃதும்
ஏழெழுஞ் சங்க மிரீஇனர் — ஏழேழ்சேர்
நாற்பதினு ஞூறுமுப்பா னேழ்நூறு நானூற்று
நாற்பதினென் பான்கவிஞர் நாடு."

என்னுஞ் சங்கத்தார் காலத்துச் செய்யுளும் வற்புறுத்தும்.

மூன்று சங்கத்திற்குங் காலம், முதற்சங்கத்திற்கு முன்பின் நாலாயிரத்தைஞ்ஞூறும், இரண்டாஞ் சங்கத்திற்கு மூவாயிரத்தைஞ்ஞூறும் மூன்றுஞ்சங்கத்திற்கு இரண்டாயிரமுமாக ஆகப் பதினாயிரம் வருஷமென்ப. அவற்றுள் முதற்சங்கங் காய்சினவழுதிமுதற் கடுங்கோன்வழுதி ஈறாக எண்பத்தொன்பதின்மர் பாண்டியரையும், இடைச்சங்கம் வெண்டேர்ச்செழியன்முதல் முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மர் பாண்டியரையுங், கடைச்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியீறாக நாற் பத்தொன்பதின்மர் பாண்டியரையுமுடையன. பாண்டியருட் கவியரங்கேறினர் முதற்சங்கத்தெழுவரும் இடைச் சங்கத்தைவருங் கடைச்சங்கத்துமூவருமாம். தலைச்சங்கத்தரங்கேறிய நூல்கள் தொல்காப்பியம் காக்கைபாடினியம் அவிநயம் நற்றத்தம் வாமனம் புறப்பொருட் பன்னிருபடலம் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் பரிபாடல் முதுநாரை முதுகுருகு களரியாவிரை முதலியன. அவர்க்கு நூல் அகத்தியம். அதில் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் மூன்றும் வகுத்துரைக்கப்பட்டன. அவற்றுட் தொல்காப்பியம் முதலியவற்றில் இயற்றமிழும், பெருநாரை பெருங்குருகு முதலியவற்றில் இசைத்தமிழும், முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் முதலியவற்றில் நாடகத்தமிழும் விரித்துரைக்கப்பட்டன. இவர் சங்கம் இரீஇயது கடல் கொள்ளப்பட்ட தெக்ஷிண மதுரையென்ப. இடைச்சங்கத்தரங்கேறியன கலி குருகு வெண்டாளி முதலியன. இவர்க்கு

நூல் அகத்தியம் தொல்காப்பியம் மாபுராணம் இசைநுணுக்கம் பூதபுராணமென்பன. இவர் இரீஇய இடங் கபாடபுரம். கடைச்சங்கத்தில் அரங்கேறியன நெடுந்தொகைநானூறு குறுந்தொகைநானூறு நற்றிணைநானூறு அகநானூறு புறநானூறு ஐங்குறுநூறு எழுபதுபரிபாடல் கலி பதிற்றுப்பத்து நூற்றைம்பது கூத்துவரி சிற்றிசை பேரிசைமுதலியன. இவர்க்கு நூல்முற்கூறியவும் புதியாநுட்பம் பிரணிகை சாயித்தியமாதியவுமாம். இவர் சங்கம் இருந்த இடந் தற்காலத்துள்ள உத்தரமதுரை. இஃது இடைச்சங்கம் இருந்த கபாடபுரம் முடத்திருமாறன் காலத்துக் கடல் கொண்டபின் தோன்றியது. சங்கத்தார்காலத்து நூல்கள் அனேகம் இக்காலத்தில் இல்லாமல் அடியோடே இறந்துவிட்டன.

இற்றைக்கு ஏறக்குறைய ஈராயிரம் வருஷத்தின்முன்பு உக்கிரப்பெருவழுதிகாலத்திற் சங்கத்தார் அதிக அகந்தை கொண்டு தெய்வசிந்தனையில்லாராய்ப் புலவர்களை அவமதித்துத் தம்நெறிபிசகினபோது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாராலும் ஔவை இடைக்காடராலும் அவமானப்பட்டுக் கர்வபங்கமடைந்து அத்தோடே சங்கமுமுடிய ஏதுவாயிற்று. சங்கத்துள் அரங்கேறினவற்றுட் தேவர்குறளே கடைசியானது. அதன்பின் ஏறக்குறைய இருநூறு வருஷஞ் சேரசோழபாண்டியர் அவைக்களத்திற் தனக்குப்போராதரவில்லாதிருந்துஞ் செந்தமிழ்ச்செல்வி தன் சிறப்புக்குறையாமல் உலாவிக்கொண்டிருந்தனள். அக்காலத்தினையே ஐந்தாவதான அநாதாரகாலமென்று குறிப்பித்தோம். அதனைப் புத்தர்காலமெனினும் இழுக்காதென்று கொள்க.

அப்பாற் சமணர்காலந் தொடங்கியது. தமிழில் மிக அருமையான இலக்கிய இலக்கண கலைக்கியானநூல்கள்

அநேகஞ் சமணவித்துவான்களாற் செய்யப்பட்டிருக்கின்றன. சங்கத்தின்பிற்காலஞ் சமணர் தலைப்பட்டது. தாயிறந்தபெண்ணுக்கோர் சற்குணநிறைந்த சிற்றுத்தாள் வாய்த்ததுபோலும். புத்த வைஷ்ண வித்துவான்கள் ஆண்டாண்டுத் தலைமைபெற்ற காலத்திற் தமது மதசார்பான சிலநூல்கள் இயற்றினதன்றிச் சர்வசனோபகாரமாகிய கிரந்தம் ஒன்றுஞ் செய்திலர். இது தமிழ் தம்பெயருக்கு மோனையாகாத கோபம்போலும். சமணரோ அங்ஙனமாகாது தமிழ்விருத்தியில் மிகமுயன்றவர்கள். தமிழ் கற்கப்புகும் மாணாக்கர் பெரும்பான்மையும் படிக்கும் நிகண்டு நன்னூல் காரிகை நம்பியகப்பொருள் முதலிய சிறு கிரந்தங்கள் மாத்திரமல்ல, புலவர் பெருமான்களாலுங் கல்விவல்ல அரசராதியோராலும் வியந்து துதிக்கப்படுஞ் சிந்தாமணிமுதலிய பெருங்காப்பியங்களும் அனேகம் அவர்களாற் செய்யப்பட்டன. பெரியவுங் கடியவுஞ் சிறந்த நடையையுடையவுமாகிய பலகிரந்தங்களுக்கு மிகமாண்புபொருந்திய உரைகளெழுதிவைத்த நச்சினார்க்கினியாரும் பின்பு சைவமதத்தை அனுசரித்தவராயினும் முன்னர்ச் சமணர்கூட்டத்தைச்சேர்ந்தவர். இதனால் மேற்கூறிய கிரந்தமெல்லாம் ஈண்டுவகுத்த சமணகாலத்திற் செய்யப்பட்டனவென்று கொள்ளற்க. இவற்றுட் சில பின்வரும் இதிகாசாதீன காலங்களில் எழுதப்பட்டன. அவர்கள் தன்மை இன்னதென்று மெய்ப்பித்தற்கு எடுத்துக்காட்டாக இதனை ஈண்டுக்கூறினோம். இவர்களுள் சிந்தாமணியெழுதி இப்போது ஆயிரத்தெண்ணூறு வருஷமிருக்கலாம். இவர்களிடந் தமிழ் பரிபாலனம்பெற்றது ஒருத்தேசம் முந்நூறு வருஷத்திற்குண்டு.

இவர்கள் காலத்தில் அனேக சமஸ்கிருதப் பதங்கள் தமிழில்வந்து கலந்தனவாயினும், வண்டு கைக்கொண்ட கிருமிபோலவும் வேரின்வாய்ப்பட்ட எருப்போலவுஞ் சமஸ்கிருத

நிறமும் மணமுமின்றி ஆர்த்தபம் மயிடம் பகுதி விகுதி முதலியனபோலச் சுத்த தமிழுருவமாகவே திரிந்துவந்தன.

அப்பால் முன்பின் எண்ணூறுவருஷம் இதிகாசகாலம். பற்பல புராணகாவியங்களுங் கலைஞான நூல்களும் இக்காலத்தில் எழுதப்பட்டனவாயினுந் தமிழிற் சிறந்த இதிகாசங்களாகிய நைடதம் பாரதம் இராமாயணம் இரகுவமிசமென்பன தோன்றிய காலமாதலில் இதிகாசகாலமென்றும். வடமொழியிலிருந்து புராணேதிகாசங்கள் சமயசாஸ்திர ஸ்தல மான்மியங்கள் கணித சோதிடாதிகள் சுத்த சமஸ்கிருதாகாரமாய்த் தமிழில் மொய்க்கத்தலைப்பட்டதும் வடமொழிப் பிரளயத்தைக்கண்டு தமிழ் சகிக்கலாற்றாது மூழ்கியதும் இக்காலத்திலே தான். அது மட்டோ போகர்முதலிய ஆயுணூலாரும் பிரகர்முதலிய கணிதவல்லாருஞ் "செந்தமிழணங்கின் திருமேனியெலாம் – வெந்தழல்கொழுந்தி வெதுப்பியவாவெனக் – கொடுந்தமிழ் மலிந்து கொப்புளித்தெழுந்து" புண்படச்செய்ததும் இக்காலமே. இதில் அதிவீரராமன் புகழேந்தி ஒட்டக்கூத்தர் கம்பர் அம்பிகாபதி தமிழ்த்தண்டி வில்லிபுத்தூரர் வரந்தருவார் முதலிய பெரும்புலவர்கள் சேர சோழ பாண்டிய தேசங்களில் எழுந்து சொலித்தனர். தொண்டை மண்டலத்திற் கச்சியப்பசுவாமிகள் சேக்கிழார் முதலிய புராண கவீச்சுரர்கள் சிறப்புற்றோங்கினர். ஈழமண்டலத்தில் அரசகேசரி செகராசசேகரர்முதலிய தமிழ்வல்லோர் தலைப்பட்டனர். பின்பு படிப்படியாகத் தமிழ்க்கல்விக்கு அரச பரிபாலனங் குறைந்தது. சமஸ்கிருதம் வல்லாருக்கு மேன்மையுண்டாயது. தமிழ் தனிநில்லாது தத்தளித்து வடமொழி வல்லார் கைப்பட்டு அம்மைவார்த்த உடம்புபோலத் தேகமெல்லாஞ் சமஸ்கிருதத் தழும்பு ஏறியது. கொப்புளித்த திருமேனியிற் கொடுமுள்ளும் ஏறியதென்னத் திசைச் சொற்கள் வந்து மரீஇயின. ஈற்றில் ஏழரைநாட்டுச் சனியும்

பிடித்தாற்போல "ஆவின மழைபொழிய இல்லம் வீழ அகத் தடிமை சாவமனை யாள்மெய்நோவ — மாவீரம் போகுதென்று விதைகொண்டோட வழியிலே கடன்காரர் மறித்துக்கொள் ளச் - சாவோலை கொண்டொருவனெதிரே யெய்தத் தள்ள வொண்ணு விருந்துவரச் சர்ப்பந்தீண்டக் — கோவேந்தன் றாதர்நின்று கடமைகேட்கக் குருக்களுந்தட் சணைக்குவந்து குறுக்கிட்டாரே" யென்று துலுக்கசேனை வந்து விழுந்து தேசத்தைச் சூறையாடி ஆங்காங்கு இறவாதெஞ்சிய புத்த கங்களையும் அழித்தகன்றனர்.

அப்பாற் தற்காலத்துநிகழும் ஆதீனகாலமாம். இது சந்தானகுரவர் காலத்தையுஞ்சேர்த்து இற்றைக்கு எழுநூறு வருஷத்தின்முன் தொடங்கியது. சரஸ்வதியாலயமாய்க் கல் விக்களஞ்சியமாக முதன்முதற் தமிழ்நாட்டில் மடமேற்படுத் தியமகான்மா ஸ்ரீகைலாசபரம்பரைத் திருவாவடுதுறை யாதீ னத்துப் பிரதம பரமாசாரியராய் எழுந்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ நமச்சிவாயதேசிகரே. இவர்மரபில் முன்னர் நான்காஞ்சந் தான குரவராகிய உமாபதி சிவாசாரியராற் சில சித்தாந்த சமயசாஸ்திரங்களேயன்றிச் சாலிவாகனசகாப்தம் சூஉா அளவிற் கோயிற்புராண முதலிய பல அரிய இலக்கியங் களுஞ் செய்யப்பட்டன. பின்னர் ஈசான தேசிகரெனத் திரு நாமம் வழங்கப்பெற்ற சுவாமிநாத குரவரவரால் இலக்கணக் கொத்தும், அவரது மாணாக்கர் சங்கரநமச்சிவாயதேசிகரால் நன்னூல் விருத்தியும், வேலப்பதேசிகராற் பறியலூர்ப்புரா ணமும், அகத்தியர் வரத்தாற் செகத்திலுற்பவித்து அவர் ஒரு கடலுண்டுமிழ்ந்தால் யாமிருகடலுண்டுமிழேமாவெனத் தென்கலை வடகலைக்கடல்களை முற்றக்கற்றுணர்ந்திருந்த சிவ ஞானயோகீசுவரராற் தொல்காப்பியசூத்திரவிருத்தி தருக் கசங்கிரகம் அன்னம்பட்டியும் புத்தம்புத்துரை காஞ்சிபுரா ணம் முதுமொழிவெண்பா முதலிய மிக்க சாதுரியகிரந்தங்

களுங் கற்றுவல்லோர் அனைவராலும் நன்குமதிக்கப்படும் பெருஞ் சிறப்பினையுடைய திராவிடமகாபாஷியமுஞ் செய்யப்பட்டன.

கல்வி விருத்திசெய்து சமயஸ்தாபனம் பண்ணும்பொருட்டுத் தமிழ்நாட்டிற் தருமபுராதீனம் திருவண்ணுமலையாதீனம் மதுரையாதீனம் மங்கலபுரத்துச் சங்கமாதீனம் முதலிய மடங்கள் ஆதீனங்கள் வேறும் பல அங்கங்கே தர்மசீலோத்தமர்களால் ஏற்படுத்தப்பட்டன. அவற்றின் கண்ணும் இவ்வாறே காலத்திற்குக்காலஞ் சமயசாஸ்திரங்களன்றி இலக்கிய இலக்கண கலைஞானநூல்கள் செய்தோர் தருமபுரத்திற் குமரகுருபரசுவாமிகள் சம்பந்தசரணுலய சுவாமிகள் சம்பந்தசுவாமிகள் வெள்ளியம்பலத் தம்பிரான் சச்சிதானந்த தேசிகர் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாரூர் வைத்தியநாதநாவலர் முதலியோருந், திருவண்ணுமலையாதீனத்தில் அமிர்தலிங்கசுவாமிகள் குகைநமச்சிவாயர் ஞானப்பிரகாசசுவாமிகள் ஆடியபாதசுவாமிகள் சுப்பிரமணியசுவாமிகள் முதலியோரும், மங்கலபுரத்திற் சிவப்பிரகாசசுவாமிகள் முதலியோரும் அனேகர் உளர். தம்மையடைந்தவர்க்குக் கல்விகற்பிப்பதும் அவருட் பரிபக்குவ தசையுடையோரை ஞானுசாரியராக அபிஷேகஞ்செய்துவைப்பதும் புலவராய்த் தம்பால் வந்தோர்க்குப் பலபரிசளிப்பதும் அவருட் சிரேஷ்ட வல்லமையுடையோரைத் தமது ஆதீனவித்துவான்களாக நியோகித்துச் சிறப்புச்செய்வதும் இன்னோரன்ன பிறவுமாகிய ஆதீனபரிபாலனம் இல்லாதொழியின் இதுவரையிற் தமிழ் மிகவுங் குறைந்து போய்விடும். தமிழின் மகிமை இப்பொழுது இவர்களாலேயே நிலைபெற்றது.

அரசாட்சியாருந் தமது வித்தியாசாலை மாணுக்கருக்கு அவரவர் சொந்தப்பாஷையையுங் கற்பிக்கும் விருப்புடையராய்த் தமிழ்ப்பிள்ளைகளுக்கும் அவரது சுயபாஷையாகிய

தமிழை ஒரோவழி ஓதுவிக்கின்றனர். நீந்துதற்றொழிலைக் கற்பிப்பான் ஒரு நீராசிரியன் கற்பானை ஏரி நதி கிணறு குளங்களில் இறங்கவிடாது குடத்திற் றண்ணீர்மொண்டு சிறுகுழியில்விட்டுக் கால்மறையாத் தண்ணீரில் மாரடிக்க விட்டாற்போலக், கடனீரெனில் உடல்கசியும் உப்புப்பூக் குங், குளநீரெனிற் சளிபிடிக்குந் தலைநோவுண்டாம், யாற்று நீரெனிற் சர்ப்பந்தீண்டும் முதலைபிடிக்கும் என்று ஓரோர் நூலுக்கு ஓரோர் குற்றஞ்சாற்றி ஒன்றிலும் இறங்கவிடாது ஒருநூலில் ஒரு குடமும் இன்னொருநூலிற் பின்னொருகுடமு மாக அள்ளி வைத்துப் படிப்பிக்கும் அவரது முயற்சியாற் பெரும்பயன் விளைவதேயில்லை. அவரிடங்கற்றுத் தமிழ்வல் லோராயினரை யாண்டுங் கண்டிலேம். அன்றியும் இவ்வித்தி யாசாலைகளில் நிகண்டு கற்றிலக்கியவாராய்ச்சி இல்லாதார்க் குச் சிற்றிலக்கணங்களைமாத்திரங் கற்பித்தலால் அன்னோர் வா வந்தானெனக்கண்டு கா கந்தானென்றுஞ் சா செத்தானெ னக்கண்டு தா தெத்தானெனவுங் கூறுவார்போலத் தமிழைப் பலவாறு விபரீதப்படுத்துகின்றனர். இதனாற் றமிழுக்கு வருங்கெடுதியைக் குறித்துமிக அஞ்சுகின்றோம். இவ்வாறு விளைந்த விபரீதங்களுக்குச் சில உதாரணங்காட்டல் தகுதியா யினும் பிறர்க்கு விரோதமாமென்று விடுத்தனம். இலக்கியங் களைப் போதுமான அளவு கற்பிப்பாராயின் இலக்கணத்தை ஒருங்கே ஒழித்துவிடினுங் குற்றமுறாது. இலக்கிய வல் லாருக்கு இலக்கணந் தானேயமையும். இஃது எந்தபாஷைக் குஞ் சாதாரணதர்மம். இங்கிலீஷ் பாஷையில் மகா பாண் டித்தியமுள்ளோர் சிலர் தாம் இங்கிலீஷிலக்கணஞ் சிறி துங் கற்றதேயில்லையென்று சொன்னதை நாம் காதாரக் கேட்டிருக்கின்றோம். தமிழில் நல்ல பிரபந்தங்கள் நூல் கள் எழுதினோர் பலர் அவ்வாறிலக்கணப்பயிற்சி இல்லாதா ரென்பது யாருமறிவர்.

மேல்வகுத்த காலங்களுள் இந்நூலுடையார் காலஞ் சமணர் காலமென்று கொள்க. வீரராசேந்திரனெனவும் விக்கிரமசோழனெனவும் பெயர்வழங்கிய வீரசோழன் காலத்தில் அவன்கீழ்ப் பொன்பற்றியூரிற் சிற்றரசுபுரிந்த புத்தமித்திர அரசனால் எழுதப்பட்டு அவ்வீரசோழனது பெயர் வகிக்கப் பெற்றமையே இந்நூலெழுதி முன்பின் ஆயிரத்தைஞ்ஞூறுவருஷஞ் சென்றிருத்தல்வேண்டுமென்பதற்குச் சான்றும். மேலும் "ஏதமறு சகாத்தமெழுநாற்றில்'' ஸ்ரீ கச்சியப்பசுவாமிகள் ஸ்காந்தம் அரங்கேற்றியபோது "திகடசக்கரம்'' என மொழிபுணர்ந்ததற்கு விதிகாண்பிக்கும்பொருட்டு இந்நூல் கொண்டுவரப்பட்டமையானும், அக்காலத்துப் புலவர்களுக்கு இந்நூற் பெயருந்தெரியாமலிருந்தமையானுந், தமது காலத்து நூலாயின் அவர்கள் தமக்கு நூதனமாயிருந்த அவ்விதியை ஆட்சேபியாமல் ஒத்துக்கொள்ளார்களாதலானும், இந்நூலின் அருமையை அவர்கள் மிக வியந்து கொண்டமையானும் இஃது அவர்காலத்திற்குப் பல நூறு வருஷங்களின் முன்னர்ச் செய்யப்பட்டதென்பதற்கு மயக்கமில்லை.

இந்நூலாசிரியர் ஒருசமணர், உரையாசிரியருஞ்சமணரே. அந்தச் சிறப்பில் அவர்க்குப் பெருந்தேவனென்று பெயர் குறித்திருப்பினுஞ் சமணர் தமது வித்துவான்களைத் தேவரென்று சாதாரணமாய்ச்சொல்லும் வழக்கமுண்டாதலின் இவரதியற்பெயர் வேறாயிருக்கலாம். பாரதப்பெருந்தேவனுங் கவிசாகரப்பெருந்தேவனும் ஆயிரம் வருஷத்துக்கு மேற்பட இவர்காலத்துக்கு முன் இருந்தவர்களாதலின், அவர்கள் இவரினின்று வேறென்பது சொல்லவேண்டியதில்லை. அன்றியும் அவர்கள் சமணரல்லர். உரையில் எடுத்துக்காட்டாகப் பலசெய்யுட்களை விக்கிரமசோழன் மகன் மகனாகிய அநுபமனசோழனது புகழாகப்பாடிச் சேர்த்த

தனுல் உரையாசிரியரும் ஆசிரியரும் ஒரே காலத்தினரா யிருத்தல்வேண்டும். உரையைக் "கடனாகவே நவின்றான்" என்றுரைச்சிறப்புப் பாயிரத்தார் கூறினமையால் அவர் புத்தமித்திரனார் மாணாக்கரிலொருவரென உத்தேசிப்பாரும் பலருண்டு.

முதல் வழி சார்பு மொழிபெயர்ப்பென்னு நாலனுள் இது சார்புநூல். அகத்தியத்தின்வழி இயற்றமிழ் விரித்துணர்த்திய தொல்காப்பியமுங் காதந்திர காவியதரிசனங்களும் இதற்கு முதனூலென்ப. பொருளதிகாரத்துரையில் நாடகத்தமிழும் விரவிவரும். அலங்காரத்தைத் "தண்டி சொன்ன — படிவடநூலின் படியேயுரைப்பன்" என ஆசிரியர் கூறியது தண்டியாசிரியர் வடநூலில் இயற்றிய காவியதரிசனமாமெனக்கொள்க. அதனைத் தமிழில் வடநூலின் படி தண்டியாசிரியர் இயற்றிய தண்டியலங்காரமெனச் சிலர் மயங்குப. சிலர் ஒரு தண்டியே வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லராய் உபயகவியென நாமம் வழங்கப்பெற்றிருந்தனரென்றும் அவரே காவியதரிசனம் தண்டியலங்காரம் இரண்டிற்கும் ஆசிரியரென்றும் ஆதலால் அவற்றுள் எதனை முதலாகக்கொள்ளினும் அமையுமென்றுங் கூறுப. இருசாரார் கூற்றுந் தப்பென மறுக்க. தண்டியலங்காரம் இயற்றினார் அம்பிகாபதியின் புத்திரர். அம்பிகாபதி கம்பர் மகன். கம்பர் குலோத்துங்க சோழன் காலத்தில் வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியார் முன்னர் "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற்" தமது இராமாயணம் அரங்கேற்றியவர். இதற்கு நூற்றேழு வருஷத்தின்முன் குமரகோட்டத்தில் அரங்கேறிய ஸ்காந்தத்திற்கு வீரசோழியத்தினின்று இலக்கணவிதி காட்டப்பட்டதாதலால் இஃது பொருந்தாமை காண்க. அன்றியுங் காவியதரிசனஞ்செய்த தண்டியாசிரியர் ஒரு சமணர். தண்டியலங்காரமுடையார்

சைவர். ஆதலால் இருவரும் வேறு. மிகப்பழைய நூலாகிய காவியதரிசனமே வீரசோழியவலங்காரந் தண்டியலங்காரம் இரண்டிற்கும் முதனூலாயிருந்ததென்க.

கரலிகிதங்களால் ஏட்டுப் பிரதிகளிற் காலந்தோறும் புக்க அக்ஷரவழுவுஞ் சொற்சிதைவும் வாக்கியப்பிறழ்வும் இத்துணையவென்று சொல்லற்பாலதன்று. இதிகாச சிரோரத்தினமாகிய இராமாயணத்தை எழுதி அரங்கேற்றிய கம்பர் சோழன்மேற் கொண்ட சில வெறுப்பினால் அவனூரை விட்டு இருபது முப்பது வருஷஞ் சேரனிடம் போயிருந்து, பின்பு சோழனைக்காண அபேட்சையுடையராய்த் திரும்பி வரும் வழியில் ஒருமடத்திலே சிலவித்துவான்கள் சேர்ந்து இராமாயணப்பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தனர். அது தனது இராமாயணப் பிரசங்கமெனத் தெரியாதிருந்துங் கற்றாரைக் கற்றார் காமுறுதல் இயல்பாதலின், கம்பர், யாது பிரசங்கமாயினுமாகுக கல்விப்பிரசங்கங்கண்டுங் கம்பன் புறம்பொழுகலாமாவென்று, தன்னையின்னானென்று அன்னோர்க்குத் தெரிவியாது யாரோ வழிப்பிரயாணக்காரன் போல உள்ளே சிலநேரம் போயிருந்து, ஒன்றையொன்று பார்த்தெழுத எழுதப் பிரதிகள் தோறும் புக்கவழுக்களுந் திரிபுகளும் அதிகப்பட்டிருந்தமையால் அது தனது இராமாயணமென்று மட்டிடாமற், தன்வாக்குஞ் செய்யுட்களும் இடைக்கிடை யாரோ சொருகுகவிகள் சேர்த்திருப்பதாகச் சொன்னாராம். ஒருவர் காலத்திலே இவ்வளவாயின் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்துத் திரிவு எப்படியிருக்கலாமென்பதை அனுமானித்துக்கொள்க.

ஒருதேசத்தில் வழங்கிவரும் பிரதிகளைமாத்திரம் பார்த்தார்க்கு இம்மாறுபாட்டின் பெருக்கந் தோன்றாது. மதுரைப்பிரதி திருநெல்வேலிப் பிரதிக்கு வேறு. யாழ்ப்பாணத்துப் பிரதி இவ்விருதேசப் பிரதிகட்கும் வேறு. தஞ்சா

ஆர்ப்பிரதி முதன் மூன்றற்கும் வேறு. சென்னபட்டணப் பிரதிகள் இவையெல்லாவற்றிற்கும் வேறு. எழுத்ததிகாரத்துஞ் சொல்லதிகாரத்தும் அத்துணைப் பெரும் வித்தியாசமில்லை அதற்கு நியாயஞ் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. அப்பால் மூன்றதிகாரங்களிலும் பிற்காலத்தோராற் செய்யுள்உரை உதாரணமென்றிவையெல்லாந் தங்கடங்கள் மனம் போனவழியே மாற்றப்பட்டன. சில செய்யுளும் உரையும் ஒருங்கே தள்ளப்பட்டன. பழைய உதாரணங்களை நீக்கிப் புது உதாரணங்கள் பின்னூல்களிலிருந்தெடுத்துப் பதிலாகச் சேர்க்கப்பட்டன. தென்தேசப் பிரதிகளில் அலங்காரத்தின் பிற்பகுதி முழுவதும் யாப்பிற் சிலபகுதியும் மூலமும் உரையும் ஒருங்குபிறழ்ந்து செய்யுட்டொகையோடு மாறிப் போயின. இதனாற் பிற்காலத்தாராற் சேர்க்கப்பட்ட உதாரணங்கள் இப்பதிப்பிலும் பலவிடத்துச் செறிந்திருக்குமென்றஞ்சுகிறோம். அது கண்டு நூலின் பழமையை மறுக்கற்க.

மூன்று விரலைக்காட்டிக் கட்டிலிற்கால் போலப் பஞ்சபாண்டவரையும் ஆறுகோணத்திலும் நிறுத்துக என்பான் தொகைவிபரீதத்தோடு விரலை வாலென்றுங் கட்டிலைக் கடலென்றும் பஞ்சபாண்டவரைப் பிஞ்சுப்பாகற்காயென்றும் மாற்றி எழுதிவைத்தால் அம்மொழியைச் சரிப்படுத்தல் இலேசாகுமா? அதுபோலவே "விலாசம் பரிசர்ப்பம் விதூதம் சமம் நாபம் நமதூதி பிரகமம் நிரோதம் பரியுபாசனம் வச்சிரம் புட்பம் உபநியாசம் வருணசங்காரம் இவை பயிர் முகத்தில் அங்கம் பதின்மூன்று" என்பது "பிவாசம் விருத்தியபம் விவாசம் தாவனபம் சயதூரகம் மரிசோதம் பரியானம் பாவைச்சிரம் செல்வம் வருணசங்கரம் இவை பிரதிமுகத்திலங்கும் பதின்மூன்று" எனக்கிடந்த எட்டுப் பிரதிகளோடு பட்ட பிரயாசைக்குப் பிரயாசையென்னுஞ் சொல் போதுமா? முதலினின்று முடிவுவரைக்கும் ஓரொருவரி

ஒரோரு கொடியாகவே கொண்டுழைத்தோம். ஏடுகளிலிருந்த பிரகாரம் கஅசு - வது பக்கத்திற் பதிப்பித்திருக்கும் "மாலவனமுதலிய" என்னுஞ் செய்யுளை எடுத்துத் திருத்த முயல்வோர்க்கு இந்நூலில் யாமெடுத்த உழைப்புச் சிறிதே விளங்கும்.

பிரதி எத்துணைப் பழையதோ அத்துணை அதன் மாறுபாடுகள் குறைவு. ஆனாலும் பூர்வபிரதிகள் பாண வாய்ப்பட்டு எழுத்தொன்றற்குப் பாணவரி மூன்றென்றால் யாது தான் செய்யத்தக்கது!! "ஔவையாராணையொன்று" என்று சாபம்பெற்றுக் கிடந்த பிரதிகளின் ஏடுகளை ஒன்றைவிட்டொன்று பிரித்து எடுத்ததே பேரற்புதமாயிற்று. பழம்பிரதிகளுள் ஸ்ரீ௵ஸ்ரீ திருவாவடுதுறைப் பெரியசற்குருநாதசுவாமிகள் தயைகூர்ந்து கட்டளையிட்டருளியது நெடுங்காலத்தது. கைவிட்டுக் கடன்கொடுத்த கைப்பிரதிகள் திரும்பி உடையார்பால் மீள்வதரிதாகிய இயல்பினையுடைய இக்காலத்தில், முன் நம்மை அறியாதவர்களாயினும் நமது பிரார்த்தனையை மறுது கிருபைபுரிந்ததுமன்றி, ஆதீனத்துப் பழம்பிரதிகளுட் பலநாளாகத் தமது பரிசனத்தைக் கொண்டு தேடுவித்து எடுத்தனுப்பிய பரிபூரண கிருபைக்காக மிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். பெரிதும் ஈனஸ்திதியிலிருப்பதால் உங்கள் காரியத்திற்கு உபயோகமாகாதென்றெண்ணுகின்றோம் என்று சுவாமிகள் கட்டளையிட்டருளிய பிரதியே அவர்கள் ஆசீர்வாதத்தினால் நமக்கு மற்றெல்லாவற்றினுஞ் சிரேஷ்ட பிரதியாயினது. சமுசயம் நிகழ்ந்த இடமனைத்திலும் அதனையே ஆதாரமாகக்கொண்டு மற்றத் தேசத்துப் பிரதிகளை அதற்கு உபபலமாக வைத்துப் பரிசோதனைசெய்து எடுத்த முயற்சியை ஒருவாறு நிறைவேற்றினோம்.

ஆயினுந், தற்காலத்திற் தமிழ்நாடுகளில் வழங்கும் பிரதிகள் அனைத்தினும் இப்பொழுது யாம் அச்சிட்டு வெளிப்படுத்தும் ரூபம் மேலானதென்று கொள்வதேயன்றி, ஏட்டுப்பிரதியின் ஆதாரமில்லாது யாம் ஒருமொழியும் மாற்றிலேமாயினும், இதுதான் ஆசிரியரெழுதிய சுத்தரூபமென்று கொள்ளற்க. அனைத்துமாறுபாடுந் திருத்தி ஆதிரூபங்காட்டுதல் இனி எத்துணைவல்லார்க்கும் அரிது. பிறநூற்றுணிவிற்கு மாறுபட்டுந் தற்காலவழக்கத்தை விரோதித்துஞ் சரியான அர்த்தம் புலப்படாமலுஞ் சமுசயம் நிகழ்ந்த இடத்தும் எல்லாதேசத்துப் பிரதியும் ஒத்திருந்தனவற்றை யாம் சிறிதுந் திருத்திப் பதிப்பித்திலேம். அவற்றைத் தம் மதத்தின்படி திருத்துதல் அறிவுடையோர்க்கு இயல்பன்று.

> முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
> பொன்னேபோற் போற்றுவர் பொற்புலவர் - அன்னோர்
> நடையிடையத் தம்வழியே நாட்டிமொழி மாற்றல்
> கடையிடையர் மாட்டுவினைகாண்.

என்னுஞ் செய்யுளிற் கூறியபடி அஃது துணிவு திரிபு ஐயம் இவற்றினை முறையே உடைய உத்தமர் மத்திமர் கடைஞருள் விபரீத அறிவினையுடைய மத்திமர்க்குஞ் சந்தேக ஞானத்தையுடைய அதமர்க்கும் உரியதொழில் என்றுணர்க. பிரதிகள் அனைத்தும் ஒத்திருந்தமைபற்றி நாந் திருத்தாதொழித்துவிட்டவற்றை வழுவெனக் கண்டுழித் திருத்திக் கொள்ளுதல் நூலைவாசிப்போர்கடனும். ஆதலால் அவர்க்கு

> ஓராதெழுதினே னாயினு மொண்பொருளை
> ஆராய்ந்து கொள்வ தறிவுடைமை - சீராய்ந்து
> குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
> கற்றறிந்த மாந்தர் கடன்.

என்று உரையாசிரியரே எழுதியிருப்பதை இவ்விடம் நினைப்பூட்டுகின்றோம். நல்ல வித்துவான்களுள்ளும் அனேகர்

தாம் வீரசோழியமென்னும் பெயரைக் கேட்டதன்றி நூலைப் பார்த்தறியேமெனப் பலபல சமயங்களில் நமக்கு நேரே சொல்லினர். ஆதலால் அழிந்திறந்துபோன நூல்களுட் தானுமொன்றாகி இன்னுஞ் சிலகாலத்தில் மருந்துக்கும் அகப்படாமற்போய்விடுமென்றஞ்சி, அதன் பாலிய யவ்வன சொரூபங் கிட்டாதாயினுங் கிடைத்தவரைக்கும் அதனைக் காப்பாற்றுதலே இதனை இப்போது அச்சிடுவித்த நோக்கமென்றுணர்க.

வடநூற்பயிற்சி இல்லாத எனக்குப் பொருள் யாப்பலங்காரங்களில் வரும் அரிய சமஸ்கிருத விதிகளிற்றுணை செய்தோராய, அடியேனது பரமாசாரியர் வேதாரணியாதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கைலாயநாதசந்நிதிக்கும், சென்னபட்டணம் பச்சையப்பமுதலியார் பாடசாலைச் சமஸ்கிருத பண்டிதராகிய ஸ்ரீமத் மண்டைக்குளத்தூர் – கிஷ்ணசாஸ்திரியாருக்கும், யாழ்ப்பாணம் நீர்வேலி ம-ா-ா-ஸ்ரீ சிவ. சங். சிவப்பிரகாசபண்டிதருக்கும் மிக்க வந்தனஞ்சொல்லுகின்றனன்.

சந்தனத் தாருவைச் சார்ந்திடு வேம்புந் தகைமணமே
தந்திடு மென்பவச் சால்பெதற் காமிந்தத் தாரணியில்
அந்தமில் கேள்வி அறிஞரை நாளு மடைந்த வென்சொல்
சந்தமுறு திருந்தாற் றவறூர்வயிற் சார்வதுவே.

---

# திருவாரூர்ச்சிறப்பு.

## A.

தக்ஷிண தேசமாகிய தமிழ்நாடு, சிதம்பரம் காஞ்சீபுர முதலிய எண்ணில்லாத சிவதலங்களையுடைமையால், மற்றை எத்தேசங்களினுஞ் சிறப்புற்றது. அதனுள்ளும் சோழமண்டலம் மிகச் சிறப்புற்றது. அது அகத்திய மகாமுனிவருடைய கமண்டலத்தை விநாயகக்கடவுள் காக வடிவாய்ச் சென்று கவிழ்ப்ப, அதனாலே பொழியப்பட்டுச் சையகிரியினின்றுந் தோன்றிப் பெருகுந் திவ்விய தீர்த்தமாகிய காவேரிநதியையுடையது.

அச்சோழமண்டலத்திலே, சூரியகுலத்தர்களாகிய சோழராஜாக்களுக்கு உரிய இராசதானிகள் ஐந்தனுள் ஒன்றாகியும், காவற்கடவுளாகிய விட்டுணுவினுடைய மனைவியாகிய இலக்குமியினாலே பூசிக்கப்பட்டதாகியும், பிரமாவின் சரீரமாகிய பிரமாண்டத்துக்கு மூலாதாரஸ்தலமாகியும் உள்ளது திருவாரூர். அத்திருவாரூரின்கண் இருந்து அரசியற்றிய சோழராஜாக்களுள்ளே மனுநீதிகண்ட சோழரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் உயிர்களுக்கெல்லாங் கண்ணும் உயிரும் போன்றவர். வன்மீகநாதராகிய சிவபெருமானுக்கு நிபந்தம் அமைத்து, பூசை முதலியவைகளைச் சிவாகம விதிப்படி வழுவாது சிரத்தையோடு நடத்துவிப்பவர்.

அவர் செங்கோனடாத்தி அரசியற்றுநாளிலே, அவர் செய்த சிவபுண்ணியமிகுதியினாலே, அவருக்கு ஒருபுத்திரன் அவதரித்தான். அவன் பல கலைகளையுங் கசடறக் கற்று வல்லனாகி, அறிவொழுக்கங்களிற் சிறந்து, இளவரசாதற்குத் தக்க பருவத்தையுடையனாய் வாழுநாளிலே, ஒருநாள், இராசமாளி

கையினின்றும் புறப்பட்டு, இராசகுமாரர்களுஞ் சேனைகளுஞ் சூழத் தேரிலேறி வீதியிற் சென்றான். செல்லும்பொழுது வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டு போய், அத் தேர்க்காலினடியில் அகப்பட்டிறந்தது. அதுகண்ட தாய்ப்பசுச் சுழன்று ஓடிவந்து, அலறிச் சோர்ந்து, நடுங்கி விழுந்தது. சோழபுத்திரன் அது கண்டு, "அபாயம் வந்ததே" என்று தடுமாறி, மனத்துயரங்கொண்டு, அறிவழிந்து, தேரினின்றும் வீழ்ந்தான்; அலறுகின்ற தாய்ப்பசுவைப் பார்த்து உயிர் பதைத்துச் சோர்வான்; இறந்து கிடக்கின்ற கன்றைப் பார்த்துப் பெருமூச்செறிந்து இரங்குவான்; "நாமொருவன் பிறந்தது என்னுடைய தந்தையாருக்கு இப்பழி வந்தெய்துதற்கோ" என்பான். "எனக்கு அபுத்திபூர்வமாக வந்த இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் உளதாயின், என்னுடைய தந்தையார் அறியுமுன்னமே பிராமணர் விதிக்கும் பிரகாரஞ் செய்துகொள்ளல்வேண்டும்" என்று சிந்தித்துப் பிராமணரிடத்தே சென்றான்.

தன்கன்றை இழந்த பசு அத்துயரத்தைச் சகிக்கமாட்டாது பெருமூச்செறிந்து, கண்ணீர் வாரச் சென்று, இராசமாளிகைவாயிலிற் கட்டிய ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் அடித்தது. அதுகேட்ட மனுநீதிகண்டசோழர் சிங்காசனத்தினின்றும் இறங்கி, விரைந்து போந்து, வாயிலை அடைய; வாயிற்காவலாளர்கள் எதிர்வந்து வணங்கி, "மகாராஜாவே, இங்கே ஒரு பசு வந்து ஆராய்ச்சிமணியைத் தன்கொம்பினால் அடித்தது" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். மனுநீதிகண்ட சோழர் அது கேட்டு, வருத்தமுறுகின்ற பசுவைப் பார்த்து, "இப்பசுவுக்கு யாது இடையூறு நிகழ்ந்தது" என்று மந்திரிகளைக் கோபித்துப்பார்க்க, அம்மந்திரிகளுள் ஒருவன்வணங்கி நின்று, "மகாராஜாவே, உம்முடைய புத்திரன் தேர்மேலேறி வீதியிற் போம்பொழுது, ஒரு பசுக்கன்று அத்தேர்க்காலில்

அகப்பட்டிறந்தது. அதன்றுயாகிய இப்பசு இங்கு வந்து ஆராய்ச்சி மணியை அடித்தது" என்று விண்ணப்பஞ்செய்தான். அதுகேட்ட மனுநீதிகண்டசோழர் பெருந்துயரங் கொண்டு இரங்கி ஏங்கி, "என் செங்கோன்முறைமை நன்று நன்று" என்பார்; "இது யாது செய்தாற்றீரும்" என்பார்; கன்றையிழந்த தாய்ப்பசுவின் முகத்தைப் பார்த்துச் சோர்வார். மந்திரிகள் அதுகண்டு அச்சோழருடைய பாதங்களை வணங்கி நின்று "மகாராஜாவே, மனந்தளர்ந்தருளுவது இதற்குப் பரிகாரமாகாது. உம்முடைய புத்திரனைக்கொண்டு கோவதைக்குத் தரும நூல்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்விப்பதே தருமம்" என்றுர்கள். அதற்கு மனுநீதிகண்டசோழர் "நீங்கள் கூறும் பிராயச்சித்தம் கன்றையிழந்தலறும் இப்பசுவினது நோய்க்கு மருந்தாகுமா? நான் ஏகபுத்திரனை இழக்கின்றேன் என்று கருதி நீங்கள் எல்லீருஞ் சொல்லிய இவ்வார்த்தைக்கு நான் இசைந்தேனுயின், நடுவுநிலைமை தவறுதா! உயிர்களுக்குத் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும், உயிர்களாலும் எய்தற்பாலனவாகிய ஐந்து பயத்தையும் நீக்கி அவைகளைக் காப்பவனன்றே அரசனெனப்படுவான். நான் என்புத்திரன் செய்த பாவத்தின்பொருட்டுப் பிராயச்சித்தஞ் செய்தற்கு உடன்பட்டுப் பிறனொருவன்செய்த பாவத்தின்பொருட்டு அவனைக் கொல்வேனுயின், ஆதிகாலத்திருந்த மனுவினுலே செய்யப்பட்ட தருமநூல்விதி இப்பொழுது மனுவென்னும் ஒரு சோழனுல் நீக்கப்பட்டது என்னும் பழிமொழி உலகத்திலே நிலைபெறுதா" என்றுர். அப்பொழுது மந்திரிகள் "மகாராஜாவே, இப்பூமியின்கண்ணே இதுபோல முன்னும் நடந்திருக்கின்றதே. இக்குற்றத்தின்பொருட்டு உம்முடைய புத்திரனைக்கொல்லல் முறையன்று. தருமநூலில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தஞ் செய்வதே பண்டு

தொட்டு ஆன்றோர் வழங்கிய வழக்கு" என்றார்கள். அதற்கு மனுநீதிகண்டசோழர் "நீங்கள் தருமநெறியின் உண்மையைச் சிறிதும் சிந்தியாது பேசுகின்றீர்கள். எந்தலோகத்திலே எந்தப்பசு கன்றையிழந்த துன்பத்தினால் ஆராய்ச்சி மணியை அடித்தது! சொல்லுங்கள். அன்றியும் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொன்றானே. ஆதலால் அவனைக் கொல்வதே துணிபொருள் என்று சிந்தியுங்கள். நான் இப்பசுவினது துயரத்தை நீக்க வல்லனல்லேன். ஆதலால் இப்பசுத் தன் கன்றையிழந்து துயருறுதல்போல நானும் என் புத்திரனையிழந்து துயருறுதலே நீதி" என்று சொல்லி, எவ்விடத்தும் எக்காலத்தும் எவராலுஞ் செயற்கரிய செய்கையைச் செய்யத்துணிந்தார். உடனே மந்திரிகள் அஞ்சி, அவ்விடத்தினின்று நீங்கினார்கள்.

மனுநீதிகண்டசோழர் தம்முடைய புத்திரனை அங்கு வரவழைத்து, ஒருமந்திரியைப் பார்த்து, "நீ இந்தப் பிள்ளையை வீதியிலே தேர்க்காலின் கீழே கிடத்தித் தேரை நடத்தக்கடவாய்" என்றார். அம்மந்திரி போய், அவ்வாறு செய்யாது தன்னுயிரை விடுத்தான். அதனையுணர்ந்த மனுநீதிகண்டசோழர் தம்முடைய புத்திரனைத் தாமேகொண்டு வீதியிற் சென்று, தம்முடைய குலத்துக்கு ஒருபுத்திரனே உளன் என்பதைச் சிந்தியாது, தருமவழி நடத்தலொன்றையே சிந்தித்து, அவனைக்கீழே கிடத்தி அவன் மார்பிலே உருளை அழுந்தும்படி தேரை நடத்தினார்.

மனுநீதிகண்டசோழர் செய்த இச்செயற்கருஞ் செய்கையைக் கண்டு, மனிதர்கள் தரியாது கண்மழை பொழிந்தார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். சர்வலோகைக நாயகராகிய தியாகேசர் இடபவாகன மேற்கொண்டு, தேவர்களும் பூதர்களும் புடைசூழ எழுந்தருளிவந்து முன்

னின்றார். மனுநீதி கண்டசோழர் அவரைத் தரிசித்து வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கினார். அப்பொழுதே பசுக்கன்றும் இராஜகுமாரனும் மந்திரியும் உயிர்பெற்றெழுதலும், அதுகண்ட சோழர் தாம் இத்தன்மையினரென்றறியாதவராயினார். அவர் தமது பாதத்தில் வந்து வணங்கிய புத்திரனைத் தழுவி மனமகிழ்ந்தார். பசுத் தன்னையணைந்த தன்கன்று உண்ணும்வண்ணம் பாலைப்பொழிந்து தனக்குண்டாகிய துன்பநீங்கிற்று. தியாகேசர் மனுநீதிகண்ட சோழருக்குத் திருவருள் செய்து மறைந்தருளினார்.

இப்படியே தருமநெறியில் வழுவாதொழுகும் எண்ணில்லாத மெய்யன்பர்களுக்குப் பரமப்பிரசாதஞ் செய்துகொண்டு சருவசீவதயாபரராகிய தியாகேசர் எழுந்தருளியிருக்குந் திருவாரூரினது மகிமை நம்மாலே சொல்லற்பாலதன்று. அத்திருவாரூருக்கு வன்மீகநாதக்கடவுளுடைய திருக்கோயில் இருதய கமலம்போலும். அத்திருக்கோயிலிலே தேவாசிரயனெனப் பெயர்பெற்ற ஆயிரக்கால் மண்டபமொன்றுண்டு. தியாகேசரைச் சேவிக்கும்பொருட்டு இத்துணைத்தென்று அளவிடப்படாத பேராசையோடு வந்துகூடும் விட்டுணு பிரமா இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் அம்மண்டபத்திலே நிறைந்திருப்பார்கள். விபூதி உருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்தவர்களும், திருவைந்தெழுத்தை உச்சரிப்பவர்களும், ஓடும் பொன்னும் ஒப்ப நோக்குபவர்களும், நல்வினையால் வரும் இன்பத்தினும் தீவினையால் வரும் துன்பத்தினும் சமபுத்திபண்ணுபவர்களும், பசுபதியாகிய சிவபெருமானுடைய திருவடிக்கண்ணதாகிய மெய்யன்பொன்றையே உயர்வொப்பில்லாத பெருஞ்செல்வமெனக் கொண்டு இடையறுதொழுகுந்தைலதாரை போலும் இயற்கைத்தாகிய அவ்வன்பால் விழுங்கப்பட்டவர்களும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் வீட்டுநெறி நான்கின்வழியே நிற்ப

வர்களுமாகிய திருத்தொண்டர்களுடைய திருக்கூட்டம் அத் தேவாசிரய மண்டபமெங்கும் நிறைந்திருக்கும். அம்மெய் யடியார்களுடைய பெருமையை ஒன்றுக்கும் பற்றாத நாம் எங்ஙனமறிந்து எங்ஙனந்துதிப்போம்.

இனி எம்பெருமானாகிய ஆலாலசுந்தரர் தென்னாட்டிலே திருவவதாரஞ்செய்து, இந்தத் திருத்தொண்டர் திருக்கூட் டத்தைத் தரிசித்து, திருத்தொண்டத்தொகை செய்தருளிய சரித்திரத்தைச் சொல்வாம்.

---

# இந்திரன் பழிதீர்த்த படலம்.

## B.

கிருதயுகத்திலே, தேவேந்திரன், சுவர்க்கலோகத்திலே மந்தாரநிழலிலே சுதர்மை என்னுந் தேவசபையிலே முப்பத்துமுக்கோடி தேவரும் சேவிப்ப, இரத்தின சிங்காசனத்தின் மேலே வீற்றிருந்து, தேவப்பெண்களுடைய நிருத்தத்தையும் கீதத்தையும் கண்டும் கேட்டும், களிப்பாகியமதுக் கடலிலே மூழ்கினன். அப்பொழுது தேவகுருவாகிய பிருகற்பதிபகவான் அங்கேவந்தார். பெண்மயலில் அகப்பட்ட இந்திரன் அதுகண்டும், இருக்கைவிட்டெழுந்து அவருடைய திருவடிகளை வழிபாடு செய்யாது, வாளாவிருந்தான். அது கண்ட பிருகற்பதிபகவான் விரைந்துபோய்விட்டார். உடனே இந்திரனுடைய செல்வம், சிறிது குன்றியது. இந்திரன் அதனையறிந்து எனக்கு இந்தக்கேடு குருவை வழிபாடு செய்யாத அதிபாதகத்தினலே விளைந்தது என்று தெளிந்து, துன்பமடைந்து, பிருகற்பதியைத் தேடத் தொடங்கி, அவருடைய உலகத்தினும் மற்றையுலகங்களினும் தேடிக்காணமையால், சத்தியலோகத்தை அடைந்து, அங்குந்தேடிக் காணது, பிரமதேவர் திருமுன்சென்று, அவரை வணங்கித் துதித்து, முன் நிகழ்ந்த சமாசாரத்தை அவருக்கு விண்ணப்பஞ்செய்தான். பிரமதேவர் அது கேட்டு, இந்திரனுக்குக் குருநிந்தையினலே பின் நிகழ்வதனை முன் அறிந்துகொண்டு, இந்திரனை நோக்கி, நீ உன் குருவாகிய வியாழனைக் காணுமளவும், அசுரகுலத்திற் பிறந்தும் அறிவொழுக்கங்களாலே சிறந்தவனும் துவட்டாவுடைய புத்திரனும் மூன்று சிரசுகளையுடையவனுமாகிய விசுவரூபனை உனக்குக்

குருவாகக்கொள்வாயாக என்ருர். இந்திரன் பிரமதேவருடைய சூழ்ச்சியை அறியாமையால் அதற்கு உடன்பட்டு, அவரை வணங்கி அனுமதிபெற்றுக்கொண்டு போய், விசுவ்ரூபனைத் தன் குருவாகக் கொண்டான்.

இந்திரன் தன்பொருட்டு ஒருயாகஞ்செய்யும்படிவேண்ட, விசுவரூபன் அதற்கு உடன்பட்டு, புறத்திலே தேவர்களுக்குச் செல்வம் பெருகுக என்று சொல்லி, அகத்திலே அசுரர்களுக்கெல்லாம் உய்யுந்திறம் உண்டாகுக என்று நினைந்து, யாகஞ்செய்தான். இவ்வஞ்சகத்தை இந்திரன் ஞானதிருட்டியினலே அறிந்து, தன் குலிசாயுதத்தினலே விசுவரூபனுடைய தலைகள் மூன்றையுஞ் சேதித்தான். அவைகள் மூன்றும் காடையும், ஊர்க்குருவியும், சிச்சிலியுமாய்ப் பறந்தன. இந்திரன், தன்னைப்பிரமபாவம் கோபித்துவந்து பற்றினமையால், பெருந்துயரம் அனுபவித்தான். தேவர்கள், அந்தப் பாவத்தை மரங்களினிடத்தும், மண்ணினிடத்தும், பெண்களினிடத்தும், நீரினிடத்தும் புகுத்தினர்கள். அவர்கள், நமக்கு இப்பாவந்தீருமுறைமை எப்படி என்று கேட்க, தேவர்கள் இப்பாவம் நீரினிடத்து நுரையாயும், மண்ணினிடத்து உவராயும், பெண்களினிடத்துப் பூப்பாயும், மரங்களினிடத்துப் பிசினும், கழியக்கடவது என்ருர்கள். பின்னும் அவர்கள், இப்பழியைத் தாங்கிய எங்களுக்கு வரும் நலம் யாது என்று கேட்க, தேவர்கள் கருப்பமுள்ள பெண்கள் கருவுயிர்க்குமளவும் கணவரைப் புணர்ந்து வாழக்கடவர்; மண்ணைத்தோண்டிய குழி அதனல் வடுவொழியக்கடவது; நீர் இறைக்குந்தோறும் ஊறக்கடவது; மரம் வெட்டினலும் தழையக்கடவது என்று நன்மையை அருளிச்செய்தார்கள். இதனல் இந்திரன் அழுக்கு நீங்கிய இரத்தினம்போலப் பிரமபாவம் நீங்கி, விளக்கமுற்ருன்.

துவட்டாவானவன் தன் குமாரனாகிய விசுவரூபனை இந்திரன் கொன்றமையைக் கேள்வியுற்று, கோபித்துப் பெருமூச்செறிந்து, பழிவாங்க நினைந்து, ஒரு யாகஞ்செய்து, யாககுண்டத்தினின்றுந் தோன்றிய விருத்திராசுரனை, இந்திரனைக் கொல்லும்படி, ஏவினான். விருத்திராசுரன் வடவாமுகாக்கினிபோலக் கோபங்கொண்டு, இந்திரனிடத்துச் சென்றான். இந்திரனும் வெள்ளையானை மேற்கொண்டு எதிர்த்தான். இருவரும் யுத்தஞ்செய்யும்பொழுது, இந்திரன் விருத்திராசுரன் மேலே தன் குலிசத்தை யெறிந்தான்; விருத்திராசுரன் இடிபோல ஆரவாரித்து, ஓரிருப்புலக்கையினாலே இந்திரனைப்புயத்திலே அடித்தான். உடனே இந்திரன் மூர்ச்சையடைந்து, சிறுபொழுதிலே மூர்ச்சை நீங்கி, இப்பகைவனோடு போர்செய்ய யான் வலியிலேன் என நினைந்து, சத்தியலோகத்தை அடைந்து, பிரமதேவரை வணங்கித் துதித்து, தான் படுகின்ற துயரத்தைச் சொன்னான்.

பிரமதேவர் இந்திரனோடு வைகுண்டத்தை அடைந்து, மகாவிட்டுணு திருமுன் சென்று, அவரை வணங்கித் துதித்து, நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ்செய்தார். மகாவிட்டுணு இந்திரனை நோக்கி, இந்திரனே, உன்கையிலுள்ள குலிசம் மிகப்பழையது, பகைவருயிரைக் கவரவல்லதன்று, வேறு புதியதொருகுலிசம் வேண்டும், அது பெறுதற்கு உபாயஞ்சொல்வோம். நாம் திருப்பாற்கடல் கடையும்பொழுது தேவர்களும் அசுரர்களும் ஆயுதங்களோடு வரலாகாது என்று, ஆயுதங்களெல்லாவற்றையும் ததீசிமுனிவரிடத்தே சேர்ப்பித்தோம். அம்முனிவர் நெடுங்காலஞ் செல்லவும், தேவர்களாயினும் அசுரர்களாயினும் வந்து கேட்டிலாமையால், அவ்வாயுதங்களனைத்தையும் விழுங்கிவிட்டார். அவைகளெல்லாம் ஒன்றாகத் திரண்டு முதுகந்தண்டைப் பொருந்தின, அது குலிசாயுதமாம். நீ போய்க் கேட்கு

முன்னே சிவகாருண்ணியமே வடிவமாகவுடைய அம்மு னிவர் அதனை உனக்குத் தருவார் என்றார்.

அதுகேட்ட இந்திரன் விட்டுணுவை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு, தேவர்களோடு ததீசிமுனிவருடைய ஆச் சிரமத்தையடைந்து, அவரை வணங்கித் துதித்தான். ததீசி முனிவர் இந்திரன்முதலிய தேவர்களை நோக்கி, இன்சொற்க ளைச் சொல்லி, நீங்கள் மிக மெலிந்து வந்தீர்கள், உங்களுக்கு நிகழ்ந்த காரியம் யாது? சொல்லுங்கள் என்றார். இந்திரன் அது கேட்டு, தயாநிதியாகிய சுவாமீ, நீர்மருதமொன்றை விரும்பி இத்தேவர்களோடு வந்தேன்; அது பகைவராகிய அசுரரைக் கொன்று எமது குடியை உய்விக்க வல்லது, அது உம்முடைய சரீரத்திலுள்ளது என்று விண்ணப்பஞ்செய் தான். உடனே ததீசிமுனிவர் சூரியனைக்கண்ட செந்தாமரை மலர் போலத் திருமுகமலர்ந்து, இந்திரனை நோக்கி, நாய்கள் நம்முடையதெனவும், நரிகள் நம்முடையதெனவும், தாய் தந் தையர்கள் நம்முடையதெனவும், யமன் நம்முடையதெனவும், பிணிகள் நம்முடையதெனவும், பேய்கள் நம்முடையதென வும், நினைத்துக்கொண்டிருத்தல்போல நாமும் நம்முடைய தென்று நினைத்துக்கொண்டிருக்கும் சரீரம் யாருடையது! பாம்பு தன்றோலையும் பறவை தன் கூட்டையும் தாமென்று கொள்ளுமா! அவ்வாறே உயிரும் இச்சரீரத்தை நானென்று கொள்ளுதல் கூடுமா! இரக்கஞ் சிறிதுமில்லாத அசுரர்க ளாலே பெருந்துயரத்தை அனுபவிக்கும் தேவர்கள் உய்யும் பொருட்டு இப்புன்புலால் யாக்கையைக் கொடுத்துப் புண் ணியத்தையும் புகழையும் பெற்றுக்கொள்வேனேயாயின், யான் எடுத்த இச்சரீரத்தினுலாகும் பயன் இதைவிட வேறு யாது! என்றருளிச்செய்து, சமாதிகூடிப் பிரமநாடிவழிக் கொண்டு கபாலத்தைக் கிழித்துப்போய், விமானத்திலேறிச் சுவர்க்கத்தையடைந்து, வீற்றிருந்தார்.

தேவதச்சன் ததீசிமுனிவருடைய முதுகந்தண்டைக் குலிசமாகச் செய்துகொடுக்க, இந்திரன் வாங்கிக்கொண்டு, தேவசேனையோடு சென்று விருத்திராசுரனை வளைந்துகொண்டான். தேவசேனையும் அசுரசேனையும் செய்த போரில் அநேகர் இறந்தார்கள். அது கண்டு, இந்திரனும் விருத்திராசுரனும் போர்செய்யத் தொடங்கினார்கள். இந்திரன் ஆக்கினேயாஸ்திரம் விட்டான்; விருத்திராசுரன் அதனை வாருணாஸ்திரம் விட்டுத் தடுத்தான். இந்திரன் வாயுவாஸ்திரம் விட்டான்; விருத்திரன் அதனை நாகாஸ்திரம் விட்டு விலக்கினான். இந்திரன் நாகாஸ்திரம் விட்டான்; விருத்திரன் அதனைக் காருடாஸ்திரம் விடுத்துத் தடுத்தான். இந்திரன் மோகாஸ்திரம்விட்டான்; விருத்திரன் அதனை ஞானாஸ்திரம் விட்டு மாற்றினான். இந்திரன் விடுத்த தெய்வப் படைகளனைத்தையும் இப்படியே விலக்கி, விருத்திராசுரன் வேலுயுதம் விடும்படி நெருங்கினான். இந்திரன் அதுகண்டு, மானமாகிய காற்றுக் கோபமாகிய அக்கினியை மூட்ட அது சுடுதலைப் பொறுக்கலாற்றாதவனாகி, தன்கையிற் குலிசத்தை விதிர்க்க; விருத்திரன் அதற்கஞ்சி, சமுத்திரத்தில் விழுந்து ஒளித்துக்கொண்டான். இந்திரனும் அவனோடு விழுந்து அவனைத் தேடிக் காணாது, பிரமதேவரையடைந்து, விண்ணப்பஞ்செய்தான். பிரமதேவர் அகத்தியமகா முனிவரிடத்துச் செல்லும்படி விடுப்ப, இந்திரன் அம்முனிவரிடத்துச் சென்று, விண்ணப்பஞ்செய்தான். உடனே அகத்தியமுனிவர் உண்மையறிவானந்தவடிவாகிய சிவபிரானுடைய ஊழித்தீப் போலும் சிவந்த திருமேனியைத் தியானித்துக்கொண்டு, அசுரன் ஒளித்துக்கொண்டிருக்கும் சமுத்திர நீரையெல்லாம் உழுந்தளவினதாக்கி, தமது உள்ளங்கையில் எடுத்துக்கொண்டு பருகினார். தருமநெறியை விட்டுச் சம்பாதிப்பவர்களுடைய செல்வம் குன்றுதல்போலச் சமுத்திரங்களெல்

லாம் வற்றிப்போயின. முன் போரிலே தோற்றுப்போன விருத்திராசுரன் அவ்விடத்து ஒரு பெரிய மலையினுச்சியிலே தவஞ்செய்துகொண்டிருத்தலை இந்திரன் கண்டு, தன் கைக் குலிசத்தினலே அவனுடைய தலையை அறுத்தான். உடனே பிரமகத்திதோடம் இந்திரனைப் பிடித்துக்கொண்டது. அது உம்மென்னும், மார்பைத் தட்டும், கோபித்தெழும்பும், ஆரவாரிக்கும், யுத்தஞ்செய்ய வாவென்னும், வாயை மடிக்கும், பற்களைக் கடிக்கும், விழும், எழுந்தோடும், திரும்பும், அழும், சிரிக்கும், சீறும். அது கணப்பொழுதாயினும் நீங்காது, இந்திரனுக்குத் துயரஞ்செய்தது. இந்திரன் அச்சங்கொண்டு, விரைந்துபோய், ஈசானதிக்கிலுள்ள ஒரு தடாகத்தில் விழுந்து, ஒரு தாமரைநாளத்துக்குள்ளே ஒளித்துக்கொண்டான். அதனலே சுவர்க்கலோகம் தன் பொலிவு குன்றியது.

தேவர்கள் தங்களுக்கு அரசன் இல்லாத வறுமையை நோக்கி, பூமியிலே நகுடன் என்னும் ஓரரசன் அசுவமேதஞ்செய்தலை அறிந்து, அவனை மகுடந்தரித்துத் தங்களுக்கு அரசனகக் கொண்டார்கள். அரசனய்வரும் நகுடன், இந்திராணியை இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். பக்கத்திலுள்ளவர் போய், அதனை இந்திராணிக்குச் சொல்ல, அவள் பிருகஸ்பதிபகவானிடத்திற்சென்று, சுவாமீ, என்னுயகன் இருக்கும்போதே மற்றொருவன் வந்து என்னைத் தன் மனைவியாகக் கொள்ளுதல் தருமமா என்றாள். பிருகஸ்பதிபகவான் அவளை நோக்கி, சத்தவிருடிகளும் தாங்கும்படி சிவிகையின்மேல் வந்தால், அவனே தேவேந்திரன் அவனே உன் கணவன் என்றார். இந்திராணி அதற்கு உடன்பட்டு, குருவை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு போய், சத்தவிருடிகளும் தாங்கும்படி சிவிகையின்மேலேறி இங்கே வரக்கடவை என்று நகுடனுக்குத் தூதனுப்பினள். நகு

டன் சிவிகை தாங்கும் இருடிகளை மதியாதும், தனக்கு விளையுந் துன்பத்தை அறியாதும், இன்பமனுபவிக்கும் ஆசையால் விரைந்துசெல்ல நினைந்து, இந்திராணியிடத்திற்குக் கொண்டுபோங்கள் சர்ப்ப என்றான். அப்பொழுது சிவிகையின் முற்கொம்பு தாங்கி முன்னடக்கும் அகத்தியமகாமுனிவர் அவ்வரசனை, நீ சர்ப்பமாகக்கடவை எனச் சபித்தார். உடனே அவன் சர்ப்பமாய் விட்டான்.

அதன்பின்பு தேவர்கள் பிருகஸ்பதிபகவானை வணங்கி, கருணாநிதியாகிய சுவாமீ, அரசனில்லாமையால் பொன்னுலகம் துன்பம் அடைகின்றது என்று விண்ணப்பஞ்செய்ய, அவர் போய், அந்தத் தடாகத்தில் ஒளித்துக்கொண்டிருந்த இந்திரனைக் கூவி, தம்முடைய சொல்லையறிந்து வெளிப்பட்டு வந்த அவனைக்கொண்டு திரும்பி வந்தார். இந்திரன் குருவை வணங்கி, கருணைக்கடலாகிய சற்குருநாதசுவாமீ, அடியேனை வருத்துகின்ற இப்பழி நீங்குவது எங்ஙனம்! திருவாய்மலர்ந்தருளும் என்றான். பிருகஸ்பதி பகவான், இந்திரனே, இக்கொலைப்பழி பூமியினன்றித் தீராது, நீ வேட்டையாடச் செல்வான்போல, இப்பழியைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுப் பூமியினிடத்தில் வா என்றார்.

இந்திரன் குதிரைமேலேறிக்கொண்டு, தன் குருவும் தேவர்களும் சூழ்ந்துவர, பூலோகத்திலிழிந்து, திருக்கைலாயமலையை வணங்கி, தென்றிசைநோக்கிச் சென்று, கங்கை முதலிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து, திருக்கேதாரம், காசி, காஞ்சி முதலிய சிவதலங்களை வணங்கியும் கொலைப்பழி தீராமையால் வருத்தமுற்றுப் போய், கடம்பவனத்தின் எல்லைக்குச் சமீபித்தான். உடனே அவனைக் கொலைப்பழி விட்டு நீங்கியது. இந்திரன் பெருமகிழ்ச்சியடைந்து, பிருகஸ்பதிபகவானுக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர், இங்கே

புண்ணியதலமும், புண்ணியதீர்த்தமும், இருக்கின்றன, நமக்குக் கிடைத்தல்வேண்டும், நீ இதனை அறியக்கடவை என்றார். இந்திரன் அதனை அறிந்துவரும்பொருட்டுச் சில ஒற்றரை விடுத்து, அவ்வெல்லையைக் கடந்து அவ்வனத் திலுள்ள அதிசயங்களைப் பார்த்துக்கொண்டு, சரீரமுழுதும் புளகம் போர்ப்பப் பேரானந்தத்தோடு போவானாயினன். அப்பொழுது ஒற்றர்கள் மீண்டு வந்து, வணங்கி நின்று, மகாராசனே, இந்தக் கடம்பவனத்திலே பரிசுத்தமாகிய ஒரு வாவிக்கரையிலே கடம்பவனநிழலிலே ஒப்பில்லாத சோதி வடிவாய் முளைத்த ஒருசிவலிங்கம் இருக்கின்றது என்றார் கள். அவ்வாக்கியத்தைத் தன் செவித்துவாரத்தில் வார்க் கும் அமிர்தமெனக்கொண்டு பேரானந்தமடைந்த இந்திரன் அவ்வொற்றர்களோடும் வழிக்கொண்டு, கைகளைச் சிரசின் மேலே குவித்துவைத்துக்கொண்டு, சிவலிங்கப்பெருமானி டத்தே பதிந்த பேரன்பு பிடித்திழுப்பச் சென்று, பொற் றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, கடம்பவனத்துள்ளே புகுந்தான். அங்கே, உண்மையறிவானந்தவடிவாய், உயிர்க் குயிராய், இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் என்னும் பொருள்களனைத்தும் தன்னிடத்தே தோன்றி யொடுங்க நின்ற கருவாகி முளைத்த சிவக்கொழுந்தைத் தன்னுயிரங் கண்களுங்களிப்பக் கண்டான். கண்டபொழுதே அடியற்ற மரம்போல விழுந்தான், எழுந்து கண்களினின்றும் ஆனந்த அருவி பாயப் பேரானந்தப்பெருங்கடலுண் மூழ்கி, உரை குழற, நாத்தழுதழுப்ப, சரீரம் நடுங்க, அன்புருவாயினன். சிவலிங்கப்பெருமானைப் பூசிக்க விரும்பி, பூசைத்திரவியங் களெல்லாம் சுவர்க்கத்தினின்றும் கொண்டுவரச் சிலதேவரை விடுத்தான். சிவலிங்கப்பெருமானுக்கு ஒருவிமானஞ் செய் யும்பொருட்டுத் தேவதச்சனை விடுத்தான். சிவபெருமானை விரைவாகப் பூசிக்கவேண்டுமெனக் கிளர்ந்த பேராசையி

னுலே பூவின்பொருட்டுப் பொற்றாமரை வாவியிலே போ னன். பூக்கிடையாமையாலே சோர்ந்தான். உடனே சிவ பிரானது திருவருளினுலே அவ்வாவியிலே பொற்றாமரை மலர்கள் மலர்ந்திருக்கக் கண்டான். அன்பு மேன்மேலும் பெருகக் கூத்தாடினுன். பொற்றாமரைமலர் மலர்ந்திருக்குங் காரணத்தினுலே அவ்வாவிக்குப் பொற்றாமரைவாவியெனத் திருநாமஞ்சாத்தினுன். அவ்வாவியிலே ஸ்நானஞ்செய்து, பொற்றாமரைமலர்களைப் பறித்துக்கொண்டு, சிவலிங்கப்பெ ருமான் சந்நிதியை அடைந்து, காட்டை வெட்டி நிலத்தைத் திருத்திக்கொண்டு வரும்பொழுது, சிவக்கொழுந்தின் றிரு முடிமேலே சூரியகிரணம் மெல்லத் தீண்டக்கண்டு, பதை பதைத்து, தன்குடையினுலே நிழல்செய்ய நினைந்தான். அப்பொழுது சூரியமண்டலம்போல ஓரிரத்தினவிமானம் ஆகாயத்தினின்றும் இழிந்தது. எட்டு யானைகளும் முப் பத்திரண்டு சிங்கங்களும் அறுபத்துநான்கு கணங்களும் தாங்குவதாக மயனுலே நிருமிக்கப்பட்ட அந்தவிமானத்தைச் சாத்தி, இந்திரன் சோமசுந்தரக் கடவுளைப் பூசிக்கத்தொ டங்கினுன். தேவர்கள் ஐந்தருக்களினுலே தரப்பட்ட பீதாம் பரம், இரத்தினுபரணம், சந்தனம், கங்காசலமாகிய திரு மஞ்சனம், திருப்பள்ளித்தாமம், பஞ்ச கவ்வியம், பழம், தேன், தூபம், தீபம், திருவமுது என்னும் இவைகளெல் லாவற்றையும் கொண்டுவந்தார்கள்.

இந்திரன் பொற்றாமரைவாவியிலே விதிப்படி ஸ்நானஞ் செய்து, சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்து, அன்புருவமாகி, அருளுருவமாகிய சிவலிங்கப்பெரு மானைச் சிவாகமவிதிப்படி பூசைசெய்து, வலஞ்செய்து, அட் டாங்க பஞ்சாங்கவிதிப்படி நமஸ்கரித்து, எழுந்து, கும்பிட் டுக் கூத்தாடி, ஆனந்த அருவி சொரிய அஞ்சலிசெய்து நின்று துதிப்பானயினுன்:—

அங்கண போற்றி வாய்மை யாரண போற்றி நாக
கங்கண போற்றி மூல காரண போற்றி நெற்றிச்
செங்கண் போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
யெங்கண யகனே போற்றி யீறிலா முதலே போற்றி.

யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் போற்றி.

இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீர்த்துன்
னடியிணைக் கன்பனுக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாள போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி.

பூசையும் பூசைக் கேற்ற பொருள்களும் பூசை செய்யு
நேசனும் பூசை கொண்டு நியதியிற் பேறு நல்கு
மீசனு மாகிப் பூசை யான்செய்தே னெனுமென் போத
வாசனை யதுவு மான மறைமுத லடிகள் போற்றி.

இப்படியே இந்திரன் துதிசெய்யும்போது சோமசுந்தரக் கடவுள் வெளிப்பட்டு, குறுநகை தோன்ற, இந்திரன் மேலே திருவருட்கண் சாத்தி, உன்னுடைய விருப்பம் யாது? சொல் என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே இந்திரன் வணங்கி. எழுந்து, சிரசின்மேலே கைகளைக் கூப்பிக்கொண்டு நின்று, கிருபாசமுத்திரமாகிய சுவாமீ, உம்முடைய தலத்தின் எல்லைக்குச் சமீபமாக வருமளவில் என் கொலைப்பழியும் முற்பிறப்பிலே செய்த தீவினையும் நீங்கப்பெற்று, உம்முடைய திருவடித் தாமரை மலரைத் துதித்துப் பூசை செய்யவும் உரியனானேன்; இதனிற்சிறந்த பேறு யாது! இத்திருவடித்தாமரை மலர்களை இவ்வண்ணமே எந்நாளும் பூசை செய்ய விரும்புகின்றேன். இதுவே அடியேன் விருப்பம் என்று விண்ணப்பஞ்செய்தான். சோமசுந்தரக்கடவுள், அன்பனே, இருதுகளுள்ளே சிறந்த வசந்தருதுவும், மாசங்க

ளுள்ளே சிறந்த சித்திரைமாசமும், நக்ஷத்திரங்களுள்ளே சிறந்த சித்திரைநக்ஷத்திரமும், திதிகளுள்ளே சிறந்த பௌர்ணிமாதிதியும் கூடுஞ் சித்திரைச் சித்திரைதோறும் வந்து வந்து, நம்மைப் பூசைசெய்வாயாக; இதனால் முந்நூற்றறுபத்தைந்து நாளும் பூசை செய்த பயன் கிடைக்கும். நீ சுவர்க்கலோகத்திற் சென்று, பலபோகங்களையும் அநுபவித்துக்கொண்டு வாழக்கடவை. அதன்மேல் உனக்கு மலபரிபாகம் உண்டாக, பிரமா விட்டுணு முதலிய தேவர்களுடைய பதங்களினும் பிறவற்றினும் நிராசை உண்டாகும். அப்பொழுது உனக்குச் சாயுச்சியந் தருவோம் என்று திருவாய் மலர்ந்து, விடைகொடுத்து இலிங்கத்தின் மறைந்தருளினார்.

இந்திரன் உடம்பெங்கும் புளகங்கொள்ளச் சிரசின் மேலே கைகளைக் குவித்தான், அடியற்ற மரம்போல விழுந்தான், எழுந்து, ஆனந்த அருவி சொரிய நின்றான், பலமுறை துதிசெய்து கூத்தாடினான், பின் இலிங்கசம்பத்திலிருந்து, சிவனை இருதயகமலத்திலே தியானித்து, பஞ்சாக்ஷரத்திலே நூற்றெட்டுருச் செபித்து, செபத்தையும் கன்மங்களையும் தன்னையும் நிவேதித்து, குருவைப் பூசித்து, அபராதம் பொறுத்தருளும் என்று விண்ணப்பஞ்செய்து, பூசையை முடித்தான். சிவபிரானுடைய திருவடிகளைப் பிரிதலாற்றாது வருத்தமுற்று, அவருடைய திருவருளாணைக்கு அஞ்சி, பிரியாவிடை பெற்றுக்கொண்டு, சுவர்க்கத்தை அடைந்து, சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளைச் சிறிதும் மறவாத சிந்தையோடு முன்போல அரசுசெய்துகொண்டிருந்தான். சித்திரைச் சித்திரை தோறும் வந்து சோமசுந்தரக்கடவுளைப் பூசித்தான்.

டாஸ் பிறஸ், நாகர்கோவில்.

THE MADURA TAMILSANG